விலை ரூபா 20 பக்கங்கள் 28

# உதயன்

32°c - 25°c
ஓரளவு மேக மூட்டம்

சுடர் 31 கதிர் 106 வள்ளுவர் ஆண்டு 2047 மாசி 28, வெள்ளிக்கிழமை 11.03.2016

## வட மாகாண சபை உறுப்பினர்களுக்கு தீர்வையற்ற வாகனம்

யாழ்ப்பாணம், மார்ச் 11
வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள் 'வாகன அனுமதிப் பத்திரம்' பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பங்கள், உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சினால் அனுப்பி பக். 26

## யோசிதவுக்கு மறியல் பசிலுக்குப் பிணை

கொழும்பு, மார்ச் 11
நிதிமோசடிக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் மகன் யோசித ராஜபக்ச உள்ளிட்ட ஐந்து பேரையும், எதிர்வரும் மார்ச் 24ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க பக். 26

## காணாமற்போனோர், கைதிகள் விடயங்களில் வேகமாகச் செயற்படவில்லை இலங்கை அரசு

### ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் ஜெனிவாவில் தெரிவிப்பு

ஜெனிவா, மார்ச் 11
மீள்குடியமர்வு – தமிழ் அரசியல் கைதிகள் விடுவிப்பு – காணாமற்போனோர் விவகாரம் ஆகியவற்றில் இலங்கை அரசு வேகமாகச் செயற்படவில்லை என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹூசேன் தெரிவித்துள்ளார்.

அத்துடன்,அடுத்த சில மாதங்கள்இலங்கைக்கு முக்கியமானவையாக இருக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 31ஆவது அமர்வில்ஆண்டு அறிக்கையை நேற்றுச் சமர்ப்பித்து உரையாற்றிய போதே அவர் பக். 06



# இறுதிப்போரின் இரகசியங்களை அம்பலப்படுத்தினார் பொன்சேகா

## சபையில் மகிந்த மாயம்; பொன்சேகாவுக்கு கூட்டமைப்பு வரவேற்பு

- 2009 மே 19 இல் உயிருடனேயே இருந்தார் பிரபாகரன்
- போர் முடிவதற்கு முன்னரே மண்ணை முத்தமிட்டார் மகிந்த
- கடற்புலிகளுக்குப் படகு வாங்க 200 மில்லியன் வழங்கினார் பசில்
- வெள்ளைக் கொடி தொடர்பில் விசாரணை அவசியம்
- சர்வதேச கண்காணிப்பாளர்களும் ஆலோசனையும் தேவை



கொழும்பு, மார்ச் 11
இறுதிக் கட்டப் போர் முடிவடைவதற்கு முன்னரே, போர் முடிவடைந்துவிட்டது என்ற அறிவிப்பை மகிந்த ராஜபக்ச விடுத்தார். 2009 மே 19 ஆம் திகதி கூட பிரபாகரன் உயிரிழக்கவில்லை என்று போருக்குத் தலைமை தாங்கிய முன்னாள் இராணுவத் தளபதியான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா நாடாளுமன்றில் நேற்று அதிர்ச்சித் தகவல் வெளியிட்டுள்ளார்.

அமைச்சர் சரத் பொன்சேகா நாடாளுமன்றத்தில் நேற்றுக் கன்னி உரை நிகழ்த்தினார். இதன்போது, இறுதிக் கட்டப் போரில் நடந்த முக்கியமான பல விடயங்களை அவர் அம்பலப்படுத்தினார்.

**அச்சுறுத்தலுக்காக அமெரிக்காவுக்கு ஓடவில்லை**

இராணுவத்துக்கு அச்சுறுத்தலான காலப்பகுதியொன்று இருந்தது. அப்போது இராணுவத்தைவிட்டுத் தப்பிச் சென்று அமெ பக். 23

முச்சந்தி முரளி



இவ்வளவு நாளும் பேசாமல் இருந்திட்டு இப்பதான் எல்லாம் சொல்லுறியள் பார்த்தியளே...

## புனர்வாழ்வுக்குத் தயாரென மைத்திரிபாலவுக்கும் கடிதம்

### நேற்று வழங்கினர் அரசியல் கைதிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 11
உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகள் தாம் புனர்வாழ்வுக்குச் செல்வதற்குத் தயார் என்று ஜனாதிபதிக்கும் நேற்றுக் கடதாசியில் கடிதம் எழுதிக் கொடுத்துள்ளனர்.

புனர்வாழ்வுக்குச் செல்லத் தயார் என்று நேற்றுமுன்தினமும் சட்டமா அதிபர் திணைக்களத்தால் எழுத்தில் கடிதம் வாங்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் நேற்றும் அவ்வாறு கடிதம் எழுத்தில் வாங்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோருகி பக். 25

## ஓயாத அலை தாக்குதலாளியென குற்றம்சாட்டப்பட்டவர் விடுதலை

### யாழ். மேல் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 11
ஆனையிறவு இராணுவ முகாம் மீது, ஓயாத அலைகள் 3 அணிகளில் இணைந்து தாக்குதல் நடத்தியதாகக் குற்றம் சுமத்தப்பட்ட வழக்கில், விடுதலைப் புலிகள் அமைப்பின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த புன்குயில் எனப்படும் பெர்னாண்டோ எமில் தாஸ் (வயது - 36) யாழ். மேல் நீதிமன்றினால் விடுவிக்கப்பட்டார்.

இந்த வழக்கில் ஒரேயொரு சாட்சியமாக, முன்வைக்கப்பட்டிருந்த எதிரியின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் உண்மைத் தன்மை வழக்குத் தொடுநரால் நியாயமான சந்தேகத்துக்கு அப்பால் நிரூபிக்கப்படவில்லை எனச் சுட் பக். 25

## தகவல் அறியும் சட்டவரைவுக்கு ஒப்புதல் அளித்தது வடக்கு அரசு

### பல திருத்தங்களும் முன்வைப்பு

யாழ்ப்பாணம், மார்ச். 11
தகவல்அறியும்சட்ட வரைவுக்கு, வடக்கு மாகாண சபை திருத்தங்கள் பலவுடன் ஒப்புதல் வழங்கியுள்ளது.

குறித்த திருத்தங்களுடன் சட்ட வரைவுக்கான ஒப்புதல் நாடாளுமன்றின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படும் என்று அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தினால் தகவல் அறியும் சட்ட வரைவு, ஒப்புதல் கோரி அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. கடந்த டிசெம்பர் மாதம் பக். 25

**புதிய தொடர்பு முகவரி**

உதயன் பத்திரிகையுடனான செய்தித் தொடர்புகளுக்கான மின்னஞ்சல் முகவரி மாற்றப்பட்டுள்ளது. புதிய முகவரியான uthayanprint@gmail.com என்பதற்கு இனிவரும் நாள்களில் உங்கள் செய்திகள் மற்றும் ஒளிப்படங்களை அனுப்பி வைக்கவும். அவை பரிசீலனைக்குப் பின்னர் வெளியிடப்படும்.

## மீன்பிடி குறித்த சட்டவரைவில் திருத்தங்கள் செய்வது அவசியம்

### சுமந்திரன் எம்.பியுடன் பேசி அவற்றை முன்வைக்க வடமாகாண சபை முடிவு

யாழ்ப்பாணம், மார்ச் 11
நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின், இழுவை மடியைக் கட்டுப்படுத்துவதுதொடர்பான கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தம்) சட்ட வரைவு, நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வடிவத்தில் நிறைவேற்றுவதற்கு, வடக்கு மாகாண பக். 26

Digitized by Noolaham Foundation

# வடக்கு மாகாண சபையில் நேற்று நடந்த சுவாரசியங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 11
வடக்கு மாகாண சபையின் பேரவைச் செயலகத்தின், ஆளும் கட்சியினருக்கு ஒதுக்கப்பட்ட இடங்களிலுள்ள ஒலி வாங்கிகள் நேற்றுச் செயழிழந்துவிட்டன. அந்த ஒலி வாங்கிகளின் வயர்களை எலி கடித்துச் சேதப் படுத்தியதால் இந்த நிலைமை ஏற்பட்டது என்று பேரவைச் செயலக ஊழியர்கள் தெரிவித்தனர். எதிர்க் கட்சியினருக்கு ஒதுக்கப்பட்ட பக்கத்தில் எதிர்க்கட்சியினர் குறைவாக இருப்பதால் எஞ்சிய ஆசனங்களில் அமருமாறு அவைத் தலைவர் ஆளும் கட்சி உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டார். அதனால் போக்குவரத்து அமைச்சர் உள்ளிட்ட ஆளும் கட்சியினர் இவ்வாறு எதிர்க்கட்சியின் பக்கத்தில் அமர்ந்து கொண்டனர். இதன்போது வடக்கு மாகாண சபை உறுப்பினர் அஸ்மின், நாம் இவ்வாறு அமர்ந்து கொண்டமை தொடர்பில் ஊடகங்களுக்கு அவைத் தலைவர் தெளிவுபடுத்தல் வழங்கவேண்டும். இல்லாவிடின் ஊடகங்களில் வேறு விதமாக வரும் என்று குறிப்பிட்டார். குறுக்கீடு செய்த ஆளும் கட்சி உறுப்பினர் து.ரவிகரன், எமக்கு மாகாண சபையின் ஆரம்பம் முதல் எதிர்க்கட்சிப் பக்கத்தில் தான் இடம் தரப்பட்டிருக்கின்றது என்று கூடாகத் தெரிவித்தார்.

தகவல் அறியும் சட்டத்துக்கான ஒப்புதல் வழங்குவதற்கான



விவாதம் நடந்தது. இதன்போது ஆளும் கட்சி உறுப்பினர் சிவநேசன் (பவான்), வங்கி விவரங்களைக் கோர முடியாது என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இதனை மாற்றவேண்டும் என்றார். ஆளும் கட்சியின் மற்றொரு உறுப்பினர் கே.சயந்தன், இதனை ஏற்றுக் கொள்ள முடியாது. ஒருவரது தனிப்பட்ட வங்கிக் கணக்கு விவரங்களைக் கேட்க முடியாது. அவ்வாறு கேட்பதால் கப்பம் கோரல் நடைபெறக் கூடும். வவுனியாவில் இவ்வாறு கடந்த காலங்களில் நடந்தது என்று அமைதியாகச் சொல்லி விட்டு அமர்ந்தார்.

மதியபோசன இடைவேளையின் பின்னர் வடக்கு மாகாண போக்குவரத்து அதிகார சபை உருவாக்குவது சம்பந்தமான நியதிச்சட்டத்தின் மீதான விவாதம் நடந்தது. இதன்போது ஆளும் கட்சி உறுப்பினர்கள் பல்வேறு திருத்தங்களை முன்வைத்துக் கொண்டிருந்தனர். ஆளும் கட்சியின் உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன், இங்கு நியதிச் சட்டம் மீதான விவாதம் நடக்குதா? தமிழாராய்ச்சி மாநாடு நடக்குதா? என்று கூடாகக் கேள்வி எழுப்பினார். இந்த நியதிச் சட்டத்தை, நியதிச் சட்டக் குழுவில் சமர்ப்பித்து தமிழ்ப் பிழை, எழுத்துப்பிழை ஆகியவற்றைத் திருத்தி விட்டு இங்கே சமர்ப்பித்திருந்தால் இவ்வளவு கால தாமதம் தேவையில்லையே - என்றார்.

வடக்கு மாகாண போக்குவரத்து அதிகார சபையின் நியதிச் சட்டத்தின் மீதான விவாதத்தில் பங்கு கொண்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை கழுதை தேய்ந்து கட்டெறும்பாகியது போல் இருந்தது. ஆரம்பத்தில் 30 உறுப்பினர்கள் வரையில் பங்கெடுத்திருந்தனர்.



தேநீர் இடைவேளையோடு அந்த எண்ணிக்கை 16 ஆக மாறியது. முதலமைச்சர் உட்பட உறுப்பினர்கள் சபையில் இருக்கவில்லை. "சட்டத்தரணிகளாக இருக்கின்ற எமது உறுப்பினர்களே இங்கே இல்லாமல் இருக்கின்றனர்" என்று நியதிச் சட்டத்தைக் கொண்டு வந்த அமைச்சர் பா.டெனீஸ்வரன் கவலைப்பட்டுக் கொண்டார். (ந-5-ரி5)

## கருக்கலைப்பு செய்த வைத்தியருக்கு பொலிஸார் வலைவீச்சு

யாழ்ப்பாணம், மார்ச் 11
சட்டவிரோதமான முறையில் பெண் ஒருவருக்கு கருக்கலைப்புச் செய்தார் என்று குற்றஞ்சாட்டப்படும் வைத்தியர் ஒருவர் தலைமறைவாகியுள்ளார் என்றும் அவர் தேடப்பட்டு வருகின்றார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சுன்னாகம் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் கணவனைப் பிரிந்து வாழ்ந்து வரும் நிலையில் தற்போது பாதிக்கப்பட்டுள்ளார்.

கர்ப்பம் வெளியில் தெரியாதவகையில் இவர் குறித்த ஆயுள்வேத வைத்தியரைக் கொண்டு கருக்கலைப்புச் செய்து கொண்டார் என்று பின்னர் இடம்பெற்ற பொலிஸ் விசாரணையில் தெரியவந்தது.

குறித்த பெண்ணைக் கைது செய்து மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் முற்படுத்திய போது வழக்கை விசாரித்த நீதிவான் 75 ஆயிரம் ரூபா ஆட்பிணையில் செல்ல அனுமதியளித்தார். அத்துடன் வழக்கை இன்று வரை ஒத்தி வைத்தார். (ந-4-107)

# சர்வதேசத்தை ஏமாற்றுவதற்காக தகவலறியும் சட்டம் இருக்கக்கூடாது

## மாகாண சபை அமர்வில் உறுப்பினர் சிவாஜிலிங்கம் கருத்து

யாழ்ப்பாணம், மார்ச் 11
சர்வதேச நாடுகளை ஏமாற்றுவதற்காக தகவல் அறியும் சட்டம் கொண்டு வருவதாக இருக்கக் கூடாது. கேள்விகள் கேட்கப்படும் போது சாட்டுப் போக்குச் சொல்லாமல் பதில் வழங்குவதாக இருக்க வேண்டும். - இவ்வாறு வடக்கு மாகாண சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் வலியுறுத்தினார்.

வடக்கு மாகாண சபையில், தகவல் அறியும் உரிமைச் சட்டத்துக்கு ஒப்புதல் வழங்குவது தொடர்பான விவாதத்தின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சட்டங்கள் கொண்டு வரப்படும் போது அது தொடர்பில் ஆராய்ந்து பார்க்கவேண்டும். எமது தலைவர்களை அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன தந்திரமாக ஏமாற்றியிருந்தார். இன்றும் நாம் சிக்கல்படுகின்ற பயங்கரவாத தடைச் சட்டத்தை மூன்று வருடங்களுக்கு மாத்திரம் நடைமுறையில் இருக்கும் என்று சொல்லி எமது தலைவர்களை நம்ப வைத்து அவர்களின் ஆதரவுடன் கொண்டு வந்தார். எனவே எந்தவொரு சட்டத்தையும் எடுத்தோம் கவிழ்த்தோம் என்று ஆதரவு வழங்க முடியாது. சர்வதேச நாடுகளுக்கு கண்ணாமூச்சி காட்டுவதற்காக இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டதாக இருக்கக் கூடாது. தேசிய பாதுகாப்பு என்பதைச் சொல்லி பதிலளிக்காமல் விடுவதாக இருக்கக் கூடாது. சாக்குப் போக்குச் சொல்லி - ஆவணங்கள் இல்லை என்று சொல்லிப் பதிலளிக்காமல் - காலம் கடத்துவதாகவும் இந்தச் சட்டம் இருக்கக் கூடாது. சட்டமா அதிபரைக் கேள்விக்கு உட்படுத்த முடியாதாயின் இலங்கை அரசை கேள்விக்கு உட்படுத்த முடியாது. இலங்கை அரசுக்கு எதிராக குற்றம் சுமத்தின் சட்டமா அதிபரையே பிரதிவாதியாகக் குறிப்பிட முடியும். இவ்வாறான நிலையில் சட்டமா அதிபரிடம் கேள்வி கேட்க முடியாது என்றால், இலங்கை அரசு தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கு முயற்சிக்கின்றதா என்பதைப் பார்க்கவேண்டும்.

அதனை விட கேள்வி கேட்பதற்கு யாருக்கு உரித்து இருக்கின்றது என்பதிலும் சில குழப்பம் இருக்கின்றது. இறத்த உறவினர்கள் மாத்திரம் கேள்வி கேட்கலாம் என்றால், குடும்பமாகக் கொல்லப்பட்டவர்கள் தொடர்பில் யார் கேள்வி கேட்பது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் கொல்லப்பட்டதாகச் சொல்கின்றார்கள். எப்போது கொலை செய்யப்பட்டார் என்பது தொடர்பிலும், எப்படிக் கொல்லப்பட்டார் என்பது தொடர்பிலும் அவர்களுக்குள் குழப்பம் இருக்கின்றது - என்றார். (ந-5-ரி5)

## பதில் தராவிடில் என்ன நடவடிக்கை என்பது தகவல் அறியும் சட்டத்தில் கூறப்படவில்லை

### வட மாகாண சபை உறுப்பினர் அஸ்மின் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 11
கேள்வி கேட்பவர்களுக்கான பாதுகாப்பு, பதில் வழங்கத்தவறுபவர்களுக்கு எதிரான நடவடிக்கை தொடர்பில் இந்தச் சட்டத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. அதனை இதில் உள்ளடக்கவேண்டும் என்று, வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் அ.அஸ்மின் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில், தகவல் அறியும் உரிமைச் சட்டத்துக்கு ஒப்புதல் வழங்குவது தொடர்பான விவாதம் இடம்பெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

1996 ஆம் ஆண்டிலிருந்து தகவல் அறியும் சட்டத்தைக் கொண்டுவருவதற்கு 4 தடவைகள் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. தற்போதுதான் அது நிறைவேறக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இதில் 12 நிறுவனங்கள் தொடர்புடுகின்றன. மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்களும் இதில் உள்ளன. எனவே எமது தகவல்களையும் நாம் வெளிப்படுத்த வேண்டிவரும். அதனைக் கருத்தில் கொள்ள வேண்டும். மேலும் இதில், பதில் வழங்கல் தொடர்பில் சட்டமா அதிபர் தலையிட்டு அதனைத் தடுக்க முடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை நீக்கவேண்டும். அத்துடன் கேள்விகளைக் கேட்கும் - தகவல் கோருபவரின் பாதுகாப்புத் தொடர்பில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. அதனைக் குறிப்பிடவேண்டும். தகவல்களை வழங்க மறுக்கும் அதிகாரிகளுக்கு என்ன நடவடிக்கை என்பதையும் குறிப்பிடவேண்டும். தகவல் அலுவலர்கள் இதனூடாக நியமிக்கப்படவுள்ளனர். இதன் போது தமிழ் - சிங்களம் இரண்டு மொழிகளையும் தெரிந்தவர்கள் நியமிக்கப்படுவது நல்லது.

நாம் முன்வைக்கும் திருத்தங்களை ஏற்காதுவிடின் என்ன செய்யப் போகின்றோம் - என்பதும் தெளிவுபடுத்தப்பட வேண்டும் - என்றார். (ந-5-ரி5)

# ராணுவத்தின் கடத்தல் குறித்துக் கேள்விகளை எழுப்ப முடியுமா?

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் சர்வேஸ்வரன் கேள்வி

தேசிய பாதுகாப்பு என்ற பெயரில் கடந்த காலங்களில் முப்படையினரால் மேற் கொள்ளப்பட்ட கடத்தல்கள் - கொலைகள் தொடர்பில், அவர்களது உறவினர்கள், தகவல் அறியும் சட்டத்தைப் பயன்படுத்திக் கேள்வி எழுப்பினால், பதில் வழங்கப்படுமா என்பது தெளிவுபடுத்த வேண் டும் என்று, வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் க.சர்வேஸ்வரன் கோரிக்கை விடுத்தார். வடக்கு மாகாண சபையில் நேற்று விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட தகவல் அறியும் சட்டத்துக்கு ஒப்புதல் வழங்குவது தொடர்பான விடயத்திலேயே அவர் இவ்வாறு கேட்டுக் கொண்டார்.

எவ்வாறான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பது தொடர்பில் தெளிவுவேண்டும். கடந்த காலங்களில் தேசிய பாதுகாப்பு என்ற அடிப்படையில் பல்வேறு விடயங்கள் நடந்தன. தேசிய பாதுகாப்பு என்பது என்ன என்பதை வரையறை செய்யவேண்டும்.

தற்போது இலங்கை இராணுவத்தைக் குற்றம் சுமத்துவது கூட தேசிய பாதுகாப்புக்குக் குந்தகமானது என்ற நிலை காணப்படுகின்றது. எனவே முப்படையினரால் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட கடத்தல்கள், கொலைகள் தொடர்பில் கேள்வி எழுப்பினால் பதில் கிடைக்குமா? மேலும் கேள்விகளை பொது நலன் கருதி யாரும் கேட்கலாம் என்ற கருத்து உள் வாங்கப்பட வேண்டும் - என்று தெரி வித்தார். (ந-5-ரி5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துன்புறுத்தப்பட்ட ஊடகர்களுக்கு நீதி வழங்குவதற்கு விசேட குழு

## நியமித்தார் ஜனாதிபதி மைத்திரிபால

கொழும்பு, மார்ச் 11

கடந்த காலங்களில் துன்புறுத்தல்களுக்கும் கொடுமைகளுக்கும் உட்படுத்தப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பாகக் கண்டறிந்து, நியாயம் வழங்குவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, 2005 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரையான காலப்பகுதிக்குள் தொழில்சார் ஊடகவியலாளராகப் பணியாற்றி, அநீதிகள் மற்றும் துன்புறுத்தல்கள் அல்லது சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல் ஆகியவற்றை எதிர்கொண்ட அனைத்து ஊடகவியலாளர்களுக்கும் இந்த விசேட குழுவின்மூலம் நிவாரணம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அநீதி இழைக்கப்பட்ட அனைத்து ஊடகவியலாளர்களும் தமது தொழில்சார் அடையாளத்துடன், தமக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பாக உறுதிப்படுத்தக்கூடிய அனைத்துத் தரவுகள் மற்றும் தகவல்கள் ஆகியவற்றை ஜனாதிபதி அலுவலகத்தில் ஒப்படைக்க முடியும் எனச் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

குறித்த தகவல்கள் அனைத்தும், 2016 ஜூன் 15ஆம் திகதிக்கு முன்னர் எஸ்.ரி.கொடிக்கார, ஜனாதிபதியின் மேலதிக செயலாளர், ஜனாதிபதி அலுவலகம், கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-வ-5)

# ரயிலுடன் மோதித் தற்கொலைக்கு முயன்றவரை காப்பாற்றிய மக்கள்

யாழ்ப்பாணம். மார்ச் 11

ரயில் தண்டவாளத்தில் விழுந்து உயிரை மாய்க்க முற்பட்டார் என்று கூறப்படும் ஒருவர் ஒரு கை நசிந்த நிலையில் அவ்வழியே பயணித்தவர்களால் மீட்கப்பட்டு, வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம், கந்தர்மடப் பகுதியில் இடம்பெற்ற குறித்த சம்ப வத்தில் நாவலர் வீதியைச் சேர்ந்த இளைஞரே பாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு தண்டவாளத்தில் வீழ்ந்து தற்கொலைக்கு முயன்ற வேளையில் காப்பாற்றப்பட்ட இளைஞனை முழுமையாகக் காப்பாற்றுவதற்கு முன்பு, ரயில் பயணித்தமையினால் குறித்த இளைஞனின் ஒரு கை ரயிலுக்குள் அகப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே அவர் ஒரு கையை இழந்த நிலையில் பொதுமக்களால் காப்பாற்றப் பட்டு, யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகப் பொலிஸார் குறிப் பிட்டனர்.

(த-வ-4-101-106)

# மங்கையர்க்கரசி நேற்றுக் காலமானார்

யாழ்ப்பாணம், மார்ச் 11

இலங்கைத் தமிழ் அரசியலில் பெரும்பங்காற்றியவரும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் மனைவி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் நேற்று லண்டனில் 82 ஆவது வயதில் காலமானார்.



கணவரான அமிர்தலிங்கம் கொழும்பில் படுகொலை செய்யப்பட்டது முதல் லண்டனில் வசித்து வந்த மங்கையர்க்கரசி கணையச் சுரப்பி வீக்கம் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று உயிரிழந்தார் என்று அவர் சிகிச்சை பெற்ற வைத்தியசாலை மருத்துவர் கூறியுள்ளார்.

மங்கையர்க்கரசி 1933ஆம் ஆண்டு ஜூலை மாதம் மூன்றாம் திகதி, மூளாயில் பிறந்தார். இராமநாதன் கல்லூரியில் இசை பயின்ற அவர், பின்னர் 1954 இல் தமிழரசுக் கட்சித் தலைவர்களில் ஒருவரான, அமிர்தலிங்கத்தைத் திருமணம் செய்தார்.

அவருடன் அரசியல் நடவடிக்கைகளில் பங்கு கொண்டிருந்த மங்கையர்க்கரசி, 1960 ஆம் ஆண்டுநடந்த அரசுக்கெதிரான சத்தியாக்கிரக நடவடிக்கையில் கைதாகி 6 மாதங்கள் சிறைவாசம் அனுபவித்தார்.

இலங்கைத் தமிழர் அரசியலில் அவரது கணவரின் செயற்பாடுகளுக்குப் பெரிதும் துணை நின்ற மங்கையர்க்கரசி, தமிழ் அரசியல் மேடைகளில் பாடல்களைப் பாடியும், உரை நிகழ்த்தியும் தமிழர்களை அணி திரட்ட உதவியாக இருந்தார்.

இந்திய அரசியல் தலைவர்கள் இந்திரா காந்தி மற்றும் ராஜிவ் காந்தி மற்றும் தமிழக அரசியல் தலைவர்கள் கருணாநிதி மற்றும் எம்.ஜி.ஆர் போன்றோருடன் மங்கையர்க்கரசி உறவுகளைப் பேணி வந்தார். மங்கையர்க்கரசியின் இறுதிச் சடங்குகள் லண்டனில் எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

## காணவில்லை

**NP LJ 5915 டிப்பர் டாட்டா வாகனம் நேற்று 10.03.2016 புங்குடுதீவு சென்று வரும் வழியில் காணவில்லை. தகவல் தெரிந்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.**

**077 7732561**

## வேலை வாய்ப்பு

எமது நிறுவனத்துடன் இணைந்து பதவி முன்னேற்ற பாதையில் நீங்களும் பயணியுங்கள்.

சந்தைப்படுத்தல் உதவியாளர்கள்
உதவி முகாமையாளர்
முகாமையாளர்

தகைமை O/L அல்லது A/L

வருமானம் : நிரந்தர தொழில், வருமானம் பெறலாம்.
முகவரி: இல 28, 3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 076 8643505, 071 1873807

## அமரர் T. பத்மநாதன் ஞாபகார்த்த உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகள் பிற்போடப்பட்டுள்ளன

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் 12.03.2016, 13.03.2016 இல் நடைபெறவிருந்த மேற்படி உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகள் யாவும் நா.நவரத்தினராசா (தலைவர், வலிகாமம் உதைபந்தாட்ட சம்மேளனம்) அவர்களின் திடீர் மறைவு காரணமாக 19.03.2016, 20.03.2016 ஆகிய திகதிகளுக்குப் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பழை. போட்டி அமைப்பாளர்கள்.

# பாதாளக் குழுவினர் குறித்து தகவல்கள் திரட்டும் பொலிஸ்

கொழும்பு, மார்ச் 11

பாதாளக் குழுவினரைக் கைது செய்வதற்காக, புலனாய்வுப் பிரிவினூடாகத் தரவுகள் சேகரிக்கப்படுவதாகப் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தலைமையில் நேற்று கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரான உதவி பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

பாதாள உலகக் குழுவினரைக் கைது செய்வது தொடர்பில் அனைத்து பொலிஸ் பிரிவுகளுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. பாதாள உலகக் குழு உறுப்பினர்கள் மற்றும் அனுமதியின்றித் துப்பாக்கிகளை வைத்திருக்கும் நபர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாதாளக் குழுவினரைக் கைது செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு பொலிஸாருக்கும் இராணுவத்தினருக்கும் ஜனாதிபதி ஏற்கனவே பணிப்புரை விடுத்திருந்தார். கொழும்பில் கடந்த வாரம் தொடர்ச்சியாகத் துப்பாக்கிப் பிரயோகங்கள் இடம்பெற்றதை அடுத்து இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன-என்றார். (த-4)

# நயினையில் இன்று சண்டி ஹோமம்

சக்தி பீடங்களுக்குரிய சிறப்பான சண்டி ஹோமம் விசேட திரவிய ஹோம பீடத்தில் சிவஸ்ரீ கைலை வாமதேவக் குருக்கள் தலைமையில் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் இன்று நடைபெறுகிறது.

## Van Hire Service

குறைந்த கட்டணத்தில் Airport, கொழும்பு மற்றும் உள்ளூர் சேவைகள் நாள். கிழமை. மாத . வாடகைக்கு உண்டு

077 905 0283

## வீடு காணி விற்பனைக்கு

ஈவினை மத்தி புன்னாலைக்கட்டுவனில் வீடு, கிணற்றுடன் கூடிய 18 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
குடியிருப்பு,விவசாயப் பண்ணை மற்றும் கைத் தொழில் முயற்சிகளுக்கு ஏற்றது.

**விலை 35லட்சம்**

விவரங்களுக்கு: 077 4014328, 077 5252350

## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்திலுள்ள எமது நிறுவனத்திற்கு கீழ் காணும் தகுதிகளுடன் கூடிய விற்பனை மேற்பார்வையாளர் (Supervisor) தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.

★ 21 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
★ பூரண கணினி அறிவு
★ சிங்களம் அல்லது ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தேர்ச்சி

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
ஜி.எச்.ஏ.டி சில்வா கம்பனி,
[illegible]
077 [illegible]

## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, இலங்கை.

### செய்முறைப் பரீட்சை

**கலைமாணித் தேர்வு - பகுதி II - 2012 (வெளிவாரி) நாடகமும் அரங்கக் கலைகளும் (EX.DTAG.3.2)**

மேற்படி கலைமாணித் தேர்வின் நாடகமும் அரங்கக் கலைகளும் பாடத்திற்கான செய்முறைப் பரீட்சையை 16.03.2016(புதன்கிழமை) மதியம் ஒரு மணி தொடக்கம் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அமைந்துள்ள பரீட்சை மண்டபத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

செய்முறைப் பரீட்சைக்கான அனுமதி அட்டை மற்றும் நேர அட்டவணை என்பன ஏற்கனவே பரீட்சார்த்திகளுக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேலதிக விவரங்களுக்கு **021 222 3612** என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

**பதிவாளர்**
**10.03.2016**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications upto **28.03.2016** from suitably qualified persons for the under mentioned posts **on Temporary basis**.

### FACULTY OF SCIENCE

**Temporary Lecturer / Temporary Demonstrator** in Botany / Chemistry/ Physics / Zoology / Fisheries

**Temporary Lecturer / Temporary Instructor** in Mathematics / Statistics / Computer Science

**Temporary Instructor in Computing** (Computer Centre)
**Note: Candidates who are awaiting the results of the final degree examinations may also apply for the post of Temporary Demonstrator/ Temporary Instructor.**

### FACULTY OF MEDICINE

**Unit of Allied Health Sciences**

**Temporary Demonstrator** in Nursing/Pharmacy/ Medical Laboratory Sciences

| POST | SALARY SCALE |
|---|---|
| Temporary Lecturer | Rs. 26,020/= p.m. (Fixed) |
| Temporary Demonstrator/Instructor | Rs.21,370/= p.m. (Fixed) |

In addition to the above salary, the allowances approved by University Grants Commission will also be paid.

Application forms and other details may be obtained from the office of the Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri-Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self –addressed stamped envelope 23x10 c.m. in size.

Applications shall be sent to the Deputy Registrar/Academic Establishments, University of Jaffna, Sri Lanka.

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk**. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order for Rs.100/- to the application form drawn in favour of the **Bursar, University of Jaffna.**
Those who wish to apply for **more than one** post should apply in **separate forms.**
Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

**Registrar,**
University of Jaffna,
Sri Lanka.
08.03.2016
(c29672) (13.17.18.20)


# இந்திய மீனவர்கள் நால்வர் கைது

யாழ்ப்பாணம்,மார்ச் 11
இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்து மீறிப் புகுந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 4 பேர் காரைநகர் கடற்பரப்பில் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டுள்ளது என்று கடற்றொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.
இந்திய தமிழகம், இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் படகில் இலங்கைக் கடற்பரப்புக்குள் - காரைநகர்ப் பகுதியில் மீன் பிடியில் ஈடுபட்டிருந்த வேளையில் குறித்த நால்வரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.
இவ்வாறு கைது செய்யப்பட்ட நால்வரும் நேற்று யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப் பட்டனர்.
குறித்த நால்வரையும் எதிர்வரும் 24 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் ஏ.எம்.எம்.றியால் உத்தரவிட்டுள்ளார்.
(ற-ஜ-10)

# இலவசக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 11
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிப் பிரிவு அதிபர் சேவை தரம் - III இற்கான நேர்முகப் பரீட்சையில் தோற்றவுள்ள ஆசிரியர்களுக்கான இலவசக் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை இடம்பெறவுள்ளது.
இந்தக் கருத்தரங்கு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவில் இடம்பெறவுள்ளது என்றும் - முன் பதிவுகளை 021 -222 3382 மற்றும் 076-6883394 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு மேற் கொள்ளுமாறும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.
(ற-ஜ-ரி2)


## கரைச்சி, புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பங்குனி உத்தர பொங்கல் விழாவின்போது வியாபாரம் மேற்கொள்ளும் வியாபாரிகளுக்கான அறிவித்தல்




**எதிர்வரும் 23.03.2016 புதன் கிழமை நடைபெறும் பங்குனி உத்தர பொங்கல் விழாவின் போது வியாபாரம் மேற்கொள்ளும் வியாபாரிகளுக்கான, தற்காலிக வியாபார நிலைய ஏல விற்பனை எதிர் வரும் 13.03.2016 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது. கலந்துகொள்ளும் வியாபாரிகள், துவிச்சக்கர வண்டி காப்பாளர்கள் ஏலத்தைப் பெற்று, முழுப்பணத்தையும் செலுத்தி, பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் அறியத்தருகின்றோம்.**

**குறிப்பு:- உணவக, குளிர்பான உரிமையாளர்கள் P.H.I பகுதியினருடைய அனுமதிப் பத்திரத்துடன் சமூகமளிக்கவும்.**

**ஆலய பரிபாலன சபை,**
**நாகதம்பிரான் ஆலயம்,**
**புளியம்பொக்கணை.**



## அரசாங்க அறிவித்தல்
## பகிரங்க ஏலவிற்பனை - 2016
## மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

யாழ்ப்பாண மாவட்டச் செயலகம்,தகவல் தொழிநுட்ப பூங்கா மற்றும் கீழ்க்குறிப்பிடப்படும் பிரதேச செயலகங்களின் அலுவலகப் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட தளபாடங்கள்,குளிரூட்டிகள்,கணினிகள், பிரிண்டர்கள், தட்டச்சுப்பொறிகள், ரயர்கள், போட்டோப்பிரதி இயந்திரங்கள், றோணியோ இயந்திரங்கள், மின்சார உபகரணங்கள்போன்ற பொருள்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

ஏலவிற்பனையில் பொருள்களைக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் நாவற்குழி அரச களஞ்சியசாலை மற்றும் உரிய அலுவலகங்களில் ஏலவிற்பனை நடைபெறும் நாளுக்கு முதல்நாள் மு.ப 9.00 மணிமுதல் பி.ப 1.00 மணிவரை பொருள்களைப் பார்வையிடலாம். ஏலவிற்பனையில் பொருள்களைப் பெறுகின்றவர்கள் உடனடியாக முழுப்பணத்தினையும் ஏலவிற்பனைக்குரிய காசாளரிடம் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் (பொது 172) பெற்று அன்றைய தினம் மாலை 4.00 மணிக்குப் பிந்தாமல் பொருள்களை அவ்விடங்களில் இருந்து அகற்றுதல் வேண்டும்.

| இல | அலுவலகம் | ஏலவிற்பனை நடைபெறவுள்ளதிகதி | நேரம் | ஏலவிற்பனை நடைபெறவுள்ள இடம் |
|---|---|---|---|---|
| 01 | பிரதேச செயலகம் - உடுவில் | 21.03.2016 திங்கட்கிழமை | மு.ப 10.00 | பி.செ உடுவில் |
| 02 | பிரதேச செயலகம் - கோப்பாய் | 21.03.2016 திங்கட்கிழமை | மு.ப 10.00 | பி.செ கோப்பாய் |
| 03 | பிரதேச செயலகம் - பருத்தித்துறை | 21.03.2016 திங்கட்கிழமை | மு.ப 10.00 | பி.செ பருத்தித்துறை |
| 04 | பிரதேச செயலகம் - நல்லூர் | 21.03.2016 திங்கட்கிழமை | மு.ப 10.00 | பி.செ நல்லூர் |
| 05 | பிரதேச செயலகம் - மருதங்கேணி | 23.03.2016 புதன்கிழமை | மு.ப 10.30 | பி.செ மருதங்கேணி |
| 06 | பிரதேச செயலகம் - காரைநகர் | 23.03.2016 புதன்கிழமை | மு.ப 10.00 | பி.செ காரைநகர் |
| 07 | பிரதேச செயலகம் - சங்கானை | 23.03.2016 புதன்கிழமை | மு.ப 10.00 | பி.செ சங்கானை |
| 08 | பிரதேச செயலகம் - வேலணை | 24.03.2016 வியாழக்கிழமை | மு.ப 10.00 | பி.செ வேலணை |
| 09 | பிரதேச செயலகம் - ஊர்காவற்றுறை | 24.03.2016 வியாழக்கிழமை | மு.ப 10.00 | பி.செ ஊர்காவற்றுறை |
| 10 | பிரதேச செயலகம் - சண்டிலிப்பாய் | 24.03.2016 வியாழக்கிழமை | மு.ப 10.00 | பி.செ சண்டிலிப்பாய் |
| 11 | பிரதேச செயலகம் - கரவெட்டி | 24.03.2016 வியாழக்கிழமை | மு.ப 10.00 | பி.செ கரவெட்டி |
| 12 | பிரதேச செயலகம் - யாழ்ப்பாணம் | 24.03.2016 வியாழக்கிழமை | மு.ப 10.00 | பி.செ யாழ்ப்பாணம் |
| 13 | மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம் | 29.03.2016 செவ்வாய்க்கிழமை | மு.ப 10.00 | நாவற்குழி களஞ்சியசாலை |
| 14 | பிரதேச செயலகம் - நெடுந்தீவு | 30.03.2016 புதன்கிழமை | மு.ப 10.00 | பி.செ நெடுந்தீவு |
| 15 | தகவல் தொழிநுட்ப பூங்கா- யாழ்ப்பாணம் | 30.03.2016 புதன்கிழமை | மு.ப 10.00 | தகவல் தொழிநுட்ப பூங்கா,யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்க கட்டடம் |

**நா.வேதநாயகன்**
அரசாங்க அதிபர், யாழ்.மாவட்டம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடுப்பிட்டி முகாம் மக்களை வெளியேற்றுமாறு வழக்கு

## பருத்தித்துறை நீதிமன்றில் காணி உரிமையாளர் தாக்கல்

வலிகாமம் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து உடுப்பிட்டி நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள 9 குடும்பங்களை வெளியேற்றிக் காணியைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு காணி உரிமையாளரால் பருத்தித்துறை நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எதிர்வரும் மே மாதம் 19 திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் எதிராளிகளான முகாமில் தங்கியுள்ள மக்களுக்கு அழைப்புக் கட்டளை அனுப்புமாறும், பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு விசாரணை பருத்தித்துறை நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே நீதிவான் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார்.

வலிகாமம் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து 26 வருடமாக உடுப்பிட்டி நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள 13 குடும்பங்களை வெளியேற்றித் தம்மிடம் காணியை ஒப்படைக்குமாறு காணி உரிமையாளரால் பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குத்தாக்கல்செய்யப்பட்டிருந்தது.

குறித்த வழக்கு உடுப்பிட்டி நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள 9க்கும் மேற்பட்ட குடும்பங்களை எதிராளிகளாக குறிப்பிட்டு இல.11 பன்சட் வீதி பிளாக்பேஸ் விக்டோரியா, ஆஸ்திரேலியா என்ற முகவரியில் வசிக்கும் – தன்னைக் காணி உரிமையாளர் என்று கூறுபவராலும்மற்றும்அதேமுகவரியை உடைய பெண்ணொருவராலும் பருத்தித்துறை நீதிமன்றில் கடந்த மாதம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

குறித்த நலன்புரி நிலையத்தில் வசிக்கும் மக்கள் ஜே.254 கிராம சேவகர் பிரிவான பலாலி வடக்கு பகுதியையும், ஜே.255 கிராம சேவகர் பிரிவான பலாலி வட மேற்குப்பகுதியையும்சேர்ந்தவர்கள் என்று அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

இங்கு 13 குடும்பங்களைச் சேர்ந்த 41 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்த மக்களை வெளியேற்றி அவர்கள் வசிக்கும் 9 பரப்புக் காணியைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு கோரியே குறித்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

குறித்த வழக்கு விசாரணை நேற்று பருத்தித்துறை நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது.

வழக்காளி சார்பில் சட்டத்தரணி குமாரசாமி மன்றில் முன்னிலையாகியிருந்தார். எதிராளிகள் சார்பில் சட்டத்தரணிகள் எவரும் மன்றில் முன்னிலையாகவில்லை.

வழக்கை விசாரணைக்கு எடுத்துகொண்ட நீதிவான், எதிர்வரும் மே மாதம் 19 திகதி வரை வழக்கை ஒத்திவைத்ததுடன், எதிராளிகளான முகாமில் தங்கியுள்ள மக்களுக்கு அழைப்புக்கட்டளை அனுப்புமாறு உத்தரவிட்டார்.

குறித்த மக்கள் 26 வருடங்களாக இடம்பெயர்ந்து குறித்த நலன்புரிநிலையத்தில் கடும்வறுமைக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-ஐ-4-109)

# வடமராட்சி கிழக்குக் கடற்பகுதியில் டைனமற் மூலம் மீனவர்கள் மீன்பிடி

## கடற்றொழில் திணைக்களம் கூறுகின்றது

யாழ்ப்பாணம், மார்ச் 11

வடமராட்சி கிழக்கு கடற்பகுதியில் அரசினால் தடை செய்யப்பட்ட டைனமற் வெடிகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் மீனவர்கள் சிலர் ஈடுபட்டு வருகின்றனர் என்று தகவல்கள் கிடைத்துள்ளன எனக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை இந்தக் கடற்பகுதியில் டைனமற்றைப் பயன்படுத்தி தொழிலில் ஈடுபட்ட மீனவர்கள் சிலர் தாம் பிடித்த மீன்களுடன் தப்பிச் சென்றுள்ளனர்.

அதனைவிட கடந்த வாரம் இந்த டைனமற் வெடியைக் கொண்டு மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட ஒருவர் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டார். இவர் மீது உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப் படவுள்ளது.

அரசால் தடை செய்யப்பட்ட இந்த டைனமற் வெடியை பயன்படுத்துவோர் மீது உரிய நடவடிக்கையை கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் மேற்கொள்ளவுள்ளது.

இதற்கான நீரியல்வளத் திணைக்களத்தின் அதிகாரிகள் இதைக் கட்டுப்படுத்தும் கண்காணிப்பு நடவடிக்கையைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

இந்த டைனமற் வெடியைப்பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களை கையும் மெய்யுமாக கைது செய்வதற்கும் பொலிஸார் கண்காணிப்பில் ஈடுபடவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-ஐ-17)

**வாடகைக்கு**

பணிபுரியும் பெண்களுக்கு ஏற்ற அறை. சமையலறை வசதியுடன் யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதிக்கு அருகில் வாடகைக்குண்டு.

**077 618 0186**

**வேலை ஆள் தேவை**

வவுனியாவில் உள்ள வெல்டிங் கடையில் வேலை செய்ய தகுதி உள்ளவர்கள் உடன் தேவை. தகுந்த ஊதியம் வழங்கப்படும். (இ.2956)(12.18.20)

**077 623 2054**

**உடன் விற்பனைக்குண்டு**

நல்ல நிலையிலுள்ள நெல் வெட்டும் இயந்திரம் குபோட்டா(DC68G Kubota) இழுவைத் தட்டுடன் சேர்த்து விற்பனைக்குண்டு.

தொடர்பு: **076 636 0793**

**பெயர் மாற்றம்**

இல.74, பாலிநகர், வவுனிக்குளம், முல்லைத்தீவைச் சேர்ந்த தர்மினி ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை சசிரேகா என மாற்றி சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

சசிரேகா

**Trainee Tele - marketers wanted (full time)**

We are looking for energetic individuals to do tele - marketing (local / foreign) Excellent communication skills and reasonable knowledge in English would be an absolute advantage.
Age limit below 30
Contact: 021 221 7997
Mobile: 077 558 7274
9am- 5pm

# சாவகச்சேரியில் வீதி விளக்கு பொருத்தும் பணிகள் ஆரம்பம்

சாவகச்சேரி,மார்ச் 11

சாவகச்சேரி நகரசபையின் 'நகரத்தை ஒளிமயமாக்குவோம்' திட்டத்தின் கீழ் சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வீதி விளக்குகள் பொருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்கென சபையின் 2016 ஆம் ஆண்டுக்கான உத்தேச வரவு – செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட ஒரு மில்லியன் ரூபா செலவில் மின்குமிழ்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

எதிர்வரும் ஏப்ரல் மாத புத்தாண்டுக்குப் பின்னர் அனைத்து வீதிகளுக்கும் வீதி விளக்குகள் பொருத்தப்படவுள்ளன என்று நகர சபையின் செயலாளர் கா.சண்முகதாசன் தெரிவித்தார்

சபையால் ஏற்கனவே 500க்கும் மேற்பட்ட வீதி விளக்குகள் பயன்படுத்தப் பட்டு, பழுதடைந்த வீதி விளக்குகளுக்குப் பதிலாக புதிய விளக்குகள் வீதி ரீதியாகப் பொருத்தப்பட்டுவருகின்றன. இவற்றுக்கு மேலாக நகரத்தை ஒளியூட்டும் விதமாக 150 புதிய விளக்குகள்கொள்வனவு செய்யப்பட்டு பொருத்தப்படவுள்ளன என்றும் தெரிவித்தார். (ற-ஐ-9)




**தங்க ஆபரணங்கள் ஏல விற்பனை**

இலங்கை மத்திய வங்கியின் பதிவு செய்யப்பட்ட ஏசியா எசெட் பினான்ஸ் பி.எல்.சி கடன் ஒழுங்கமைப்பின் கீழ் யாழ்ப்பாணம், சாவகச்சேரி, பருத்தித்துறை மற்றும் கிளிநொச்சியிலுள்ள கிளைகளில் 31.12.2015 இற்கு முன் கடனுக்காக வைக்கப்பட்ட தங்க நகைகளும் 60 நாள்களுக்கு மேல் மீட்கப்படா தவணை கடந்த தங்க நகைகளும், 19.03.2016 ஆம் திகதி முற்பகல் 10.00 மணி முதல் இல. 56/22/ B, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள ஏசியா எசெட் பினான்ஸ் பி.எல்.சி அலுவலகத்தில் 85 ஆவது சட்டத்தின் நிபந்தனைகள் பிரகாரம் பொது ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படும்.

ASIA ASSET FINANCE PLC
The international finance company
Muthoot Finance

உதவி பொது முகாமையாளர் (கடன்மீட்பு)
இல. 76/1, தர்மபால மாவத்தை, கொழும்பு 03.
Mobile: [illegible]
Tel: 0115-899300 / 0115-669922
Fax: 0112577477 Reg No: PB139

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை**

**அழைப்பின் பேரில் வான் (Hiace) ஒன்றினை வாடகைக்கு வழங்கக்கூடியவர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரல்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உத்தியோகபூர்வ தேவைக்காக தேவையான நேரங்களில் பயன்படுத்துவதற்கு (On call basis) ஆங்கில இலக்கப் பதிவுடைய குளிரூட்டல் வசதியுடன் கூடிய வான் ஒன்றை கிலோமீற்றர் அடிப்படையில் வாடகைக்கு வழங்கக்கூடிய வாகன உரிமையாளரிடமிருந்து விலைமனு கோரப்படுகின்றது.

**வான் (Hiace) குளிரூட்டல் வசதியுடன்**

மேற்குறிப்பிட்ட வான் சேவையை அவ்வாகனத்திற்கான சாரதி எரிபொருள், காப்புறுதி, மற்றும் திருத்தவேலைகள் போன்றவற்றுடன் வழங்க வேண்டும். மேலும் வாகனத்தின் முதற்பதிவு ஆனது 2011ஆம் ஆண்டுக்கு பிற்பட்டதாகவும் வாகனத்தின் உற்பத்திக்காலம் 2009ஆம் ஆண்டுக்கு பின்னரானதாகவும் இருக்கவேண்டும்

மேற்படி வாகனத்துக்குரிய விண்ணப்பப்படிவம் மற்றும் கூறு விலை ஆவணங்களையும் மேலதிக விவரங்களையும் 23.03.2016 மதியம் 12.00 மணிவரை மீளளிப்புச் செய்யப்படாத வைப்புப்பணமாக ரூபா 500.00 பல்கலைக்கழக காசாளர் கருமபீடத்தில் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டை சிரேஷ்ட உதவிப்பதிவாளர் நிர்வாகம் அவர்களிடம் சமர்ப்பித்து கேள்விப்பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

முறையாகப் பூர்த்திசெய்யப்பட்டு அரக்கிடப்பட்ட ஆவணங்களை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வான் ஒன்றை அழைப்பின் பேரில் வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி" என அடையாளமிட்டு 2016.03.28 பிற்பகல் 2.30 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத்தபாலில் தலைவர், கேள்விச் சபை, த.பெ.எண் 57, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம். நேரடியாகச் சமர்ப்பிக்க விரும்புவோர் மேற்குறித்த காலவரையறைக்குள் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் இடலாம்.

கேள்வி மனுக்கள் 2016.03.28 அன்று பி.ப 3.00 மணிக்கு திறக்கப்படும். மனுதாரர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் கேள்வி மனுக்கள் திறக்கப்படும் இடமான சபா மண்டபத்திற்கு சமுகமளிக்கலாம். பல்கலைக்கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

தலைவர்
கேள்விச்சபை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

வயித்தி
முத்தையா



மலர்வு
1928.04.26

உதிர்வு
2015.02.21

நீங்கள் இவ்வுலகை விட்டு நீங்கி ஆண்டு ஒன்று சென்றாலும்
எம்மை விட்டு நீங்காத உங்கள் நினைவுகள்
என்றும் பசுமையாகவே இருக்கும் உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்

மடத்தடி, கந்தரோடை,
சுன்னாகம். (69150) (14,19,20) குடும்பத்தினர்.

எட்டாண்டில் நினைவுகள்...

அமரர்
இளையதம்பி வல்லிபுரம்
(இளைப்பாறிய அதிபர், சமாதான நீதிவான், சமூக சேவையாளர், உதயன் செய்தியாளர்)



தோற்றம்
01.06.1933

மறைவு
11.03.2008

எட்டாண்டுகள் உருண்டோடியதே...
அப்பா!
எட்டாத தூரம் சென்று...
இமையூரும் மானியூரும் உம்மை
இனங்காண வைத்த பணிகள் ஏராளமாய் ...!
தோள்கொடுத்துத் தொட்டணைத்து
தோன்றல்களைத் தோணியாய்க் கரைசேர்த்தீர்!
மறைந்தும் மறையாச் சேவைகளால்... - மக்கள்
மறவாது மனதுறைப்பதால்... பெருமையடைகின்றோம்...!

"ஜெயமஹால்"
மானிப்பாய் வடக்கு,
மானிப்பாய். (69882)(11,18,20)

குடும்பத்தினர்.
வ.முருகதாஸ் – (அதிபர்)
077 612 7411

ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
15
.
03
.
1939

அமரத்துவம்
11
.
03
.
2009



அமரர் உயர்திரு வயிரமுத்து குலசிங்கம்
(ஓய்வுபெற்ற நீர்ப்பாசனத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் நாயகம். இலங்கை)

அன்பாலும் பண்பாலும் அனைவரையும்
அரவணைத்த எம் அன்புத் தெய்வமே
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்த
துயரம் என்றென்றும் மாறாதையா
திரும்பிய இடமெல்லாம் உங்கள்
அன்பு முகம் தெரிகின்றதே
ஆண்டுகள் ஏழு போய் முடிந்தனவே
வாழும் காலம் வரை உங்கள்
நினைவுகளால் ஏங்கித் தவிக்கும் மனைவி.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போமாக.

அன்பு மனைவி
மருமக்கள், பேரமக்கள்,
மைத்துனிமார், பேரப்பிள்ளைகள்.

Mrs.s. Kulasingam,
London. (69869)(11,18,20)

# 27 தடவைகள் வெளிநாடு பறந்த யோசித ராஜபக்ச

## கடற்படையில் நடந்தவற்றை புட்டு வைக்கிறது ஜே.வி.பி.

கொழும்பு, மார்ச் 11

யோசித ராஜபக்ச கடற்படையில் இருந்ததைவிட வெளிநாடுகளிலேயே அதிக நாள்கள் தங்கியிருந்துள்ளார் என்றும் – அவருக்குக் கடற்படையில் சிறப்புச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் நேற்று நாடாளுமன்றில் சுட்டிக்காட்டியது ஜே.வி.பி.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10.30 மணிக்குப் பிரதிச் சபாநாயகர் திலங்க சுமதிபால தலைமையில் கூடியது. வாய்மூல விடைக்கான கேள்விச் சுற்றின் போது யோசித ராஜபக்ச தொடர்பில் கேள்விக் கணைகளைத் தொடுத்து சபையில் சர்ச்சையைக் கிளப்பி விட்டார் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ.

யோசிதவின் வெளிநாட்டுப் படிப்பு, அதற்கு எப்படி அனுமதி வழங்கப்பட்டது, அவர் எத்தனை தடவைகள் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டார் என்பது உள்ளிட்ட மேலும் சில கேள்விகளை அவர் எழுப்பியிருந்தார்.

இவற்றுக்குப் புள்ளிவிவரம் சகிதம் விரிவான முறையில் பதில்களை வழங்கினார் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் இவ்வாறு பதிலளிக்கையில், அமைச்சர்கள் ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டிருந்தனர். மகிந்த ஆதரவு அணி உறுப்பினர்களும் அவற்றை உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருந்தனர்.

இடையீட்டுக் கேள்வியொன்றை எழுப்பிய நளிந்த ஜயதிஸ்ஸ, உக்ரைன் பல்கலைக்கழகம் லெப்ரினன்ட் தர அதிகாரியொருவரைத்தான் கேட்டிருந்தது. ஆனால், உதவி லெப்ரினன்ட்டாக இருந்த யோசிதவுக்கு ரஷ்யாவின் தூதுவராக இருந்த யோசிதவின் மாமா அழைப்பு விடுத்துள்ளார்.

இதற்கு யோசிதவின் சித்தப்பாவான முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ச பரிந்துரை செய்துள்ளார். அதற்குப் பாதுகாப்பு அமைச்சராக இருந்த மகிந்தவும் அனுமதி வழங்கியுள்ளார். மாமா அழைப்பு விடுக்க – சித்தப்பா பெயர் பரிந்துரை செய்ய – அப்பா அனுமதி வழங்க – என்ற நடைமுறையில் கடற்படையில் இருந்துள்ளன. இவற்றுக்கு எதிராக விசாரணை நடத்தப்படுமா? – என்று வினவினார்.

முன்னாள் கடற்படைத் தளபதியின் அனுமதியும் இருந்துள்ளது. மேலதிக விவரங்கள் பற்றி முன்னாள் ஜனாதிபதி, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோரிடம்தான் வினவ வேண்டும் என்று பதிலளித்தார் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்.

27 தடவைகள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளார். அதுவும் இலகுவில் அவருக்கு அனுமதிகள் கிடைத்துள்ளன. இது எப்படிச் சாத்தியமாகும்? ரகர் விளையாட்டிலுள்ள திறமையால் கடற்படையில் சேர்க்கப்பட்டாரா? அல்லது இளைஞர்களைக் கடற்படையில் இணைவதற்கு முன்னுதாரணமாக இருப்பதற்காகச் சேர்க்கப்பட்டாரா? என்று மற்றுமொரு வினாவைத் தொடுத்தார் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளிந்த. இவற்றுக்கும் முன்னாள் ஜனாதிபதி, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோரிடம்தான் கேட்க வேண்டும் என்று பதில் வழங்கினார் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்.

(ந-ஜ)

ஓம் சிவாய நம

வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 18.02.2016 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம் அமரர் இளையதம்பி பத்மநாதன் (ஆசாரி) அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (11.03.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன விருந்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வன்னியசிங்கம் வீதி,
தாவடி வடக்கு, கொக்குவில். (69129)(11,18,20)

மருமகன்
ஜெகதீஸ்வரன் (ஜெகன்)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில்
18
.
02
.
1964

விண்ணில்
10
.
02
.
2016



கடந்த 10.02.2016 புதன்கிழமை சிவபதம் அடைந்த
அமரர் வேலுப்பிள்ளை
அருளானந்தர் (சிக்கா)

அவர்களின் வீட்டுக்கிரியைகள் இன்று (11.03.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. எனவே அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்வதுடன், அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் தொலைபேசி கண்ணீர் அஞ்சலி பதாகை, மலர்வளையம், தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் பல வழிகளிலும் உதவி புரிந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி

ஞானசம்பந்தர் வீதி,
வட்டுதெற்கு, வட்டுக்கோட்டை. (A/29657)(11,18,20)

வேலுப்பிள்ளை இராசலட்சுமி
(தங்கா)

## காணாமற்போனோர்

இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசேன் மேலும் தெரிவித்ததாவது:-

பொறுப்புக் கூறல் – நல்லிணக்கம் – நிலையான அமைதியை நோக்கி, இலங்கை சொந்தப் பயணத்தை மேற்கொள்கிறது. அரசமைப்பைத் திருத்துவதற்கும், சுதந்திரமான அமைப்புக்களை மீளவும் உருவாக்குவதற்கும், சுதந்திரமாகக் கருத்தை வெளிப்படுத்தும், விவாதிக்கும் சூழலை ஏற்படுத்துவதற்கும் முக்கியமான நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நல்லிணக்கத்துக்கான சக்திவாய்ந்த அடையாளமாக, தமிழில் தேசிய கீதம் பாடப்பட்டதைக் கருத்திற் கொள்ளலாம். இத்தகைய நகர்வுகள் இருந்தாலும், இராணுவத்தின் வசமுள்ள காணிகளை விடுவிப்பது, தடுப்புக் காவலில் உள்ளவர்களின் வழக்குகளை மீளாய்வு செய்வது, காணாமற்போயுள்ளவர்களின் விவகாரங்களுக்குத் தீர்வு காண்பது போன்ற ஏனைய விடயங்களில் வேகமாக முன்னேற்றம் காணப்படவேண்டும்.

மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு விரிவான இடைக்கால நீதிச் செயல்முறைகளை வரைவது தொடர்பான தேசிய கலந்துரையாடல்களை இலங்கை அரசு ஆரம்பித்துள்ளதால், அடுத்துவரும் மாதங்கள் முக்கியமானவையாக இருக்கும்.

கண்காணிப்பு மற்றும் அச்சுறுத்தல் இல்லாத சூழலில், இது நடப்பது மிகவும் முக்கியமானது. ஏனெனில், அப்போது தான் பாதிக்கப்பட்டவர்களின் குரல்களைக் கேட்க முடியும். மீறல்கள் குறித்த அறிக்கைகள் உடனடியாக விசாரிக்கப்பட்டு, தீர்வு காணப்பட வேண்டும். இலங்கையின் முன்னேற்றங்கள் தொடர்பாக, ஜூன் மாத அமர்வில் அறிக்கையிடுவதற்கு எதிர்பார்த்திருக்கிறேன் – என்றார்.

(த-வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவப் பிரசன்னப் பகுதிகளில் பெண்களுக்கு கடும் பாதிப்புக்கள்

## வடக்கு முதலமைச்சர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 11

இராணுவப் பிரசன்னம் மிகக் கூடுதலாகக் காணப்படுகின்ற பகுதிகளில் வசிக்கும் இளம் பெண்கள், கணவனை இழந்த குடும்பப் பெண்கள் போன்றோர் கடும் பாதிப்புக்குள்ளாகுகின்றனர். அவர்களுக்கு உதவுவதுபோல் பல நாடகங்களை அரங்கேற்றி ஈற்றில் அவர்கள் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிடுகின்ற பல நிகழ்வுகள் பற்றி நாம் அறிந்துள்ளோம். - இவ்வாறு வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

சர்வதேச மகளிர் தினக் கொண்டாட்டம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வடக்கு மாகாண சபையின் சுகாதார சுதேச மருத்துவ சமூக சேவைகளும், புனர்வாழ்வு, சிறுவர் பராமரிப்பு சேவைகள் மற்றும் மகளிர் விவகார அமைச்சானது 4 வாரங்கள் 5 மாவட்டங்களில் மேற்கொண்ட ஆய்வில் பெண்களுக்கான தேவைகளும் உரிமைகளும் ஓரளவு கண்டறியப்பட்டுள்ளன.

இதன்போது பெண்கள் மத்தியில் வாழ்க்கை தேர்ச்சி அறிவின்மை அறியப்பட்டுள்ளது. அரச கொள்கைகள், சேவைகள் வழங்குவதில் இடைவெளி, பெண்களின் பொருளாதாரம் இடைத் தரகர்களால் சுரண்டப்படுவது என்பவற்றுடன் அடிப்படைத் தேவைகள் இன்றி வாழும் பெண்களும் இனம் காணப்பட்டுள்ளனர்.

எமது புள்ளி விவரக் கணக்கின்படி வடக்கு - கிழக்கில் 89 ஆயிரத்துக்கும் அதிகமான பெண்கள் போரால் கணவர்மாரை இழந்துள்ளனர். அதனால் 89 ஆயிரம் குடும்பங்களினுடைய தலைமைப் பதவியைத் தாமே ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாய சூழ்நிலைக்கு அந்தக் குடும்பங்களின் பெண்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இதுபற்றிய ஆய்வொன்றை மேற்கொண்ட வடக்கு மாகாண சபையின் சுகாதார சுதேச மருத்துவ சமூக சேவைகளும், புனர்வாழ்வு, சிறுவர் பராமரிப்பு சேவைகள் மற்றும் மகளிர் விவகார அமைச்சானது, இன்றைய பெண்கள் தமது நடைமுறை வாழ்க்கையை நடத்துவதில் அவர்களுக்கிருக்கும் சமூக விழுமியத் தடைகள் பற்றி ஆராய்ந்தது.

> **புள்ளி விவரக் கணக்கின்படி வடக்கு - கிழக்கில் 89 ஆயிரத்துக்கும் அதிகமான பெண்கள் போரால் கணவர்மாரை இழந்துள்ளனர். அதனால் 89 ஆயிரம் குடும்பங்களினுடைய தலைமைப் பதவியைத் தாமே ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாய சூழ்நிலைக்கு அந்தக் குடும்பங்களின் பெண்கள் தள்ளப்பட்டுள்ளனர்.**

அவர்களின் மனப்பாங்குகள், அரச, அரச சார்பற்ற அபிவிருத்தித் திட்டங்களின் அணுகுமுறைகளில் இருக்கக் கூடிய பிரச்சினைகள், சேவை இடைவெளிகள் போன்றவற்றையும் அடையாளப்படுத்திக் கொள்ள ஆராய்வுகளை நடத்தியது.

அவ்வாறு ஆய்வில் ஈடுபட்ட போது பல வகையான பாதிக்கப்பட்ட பெண்களை அவர்கள் அடையாளம் கண்டார்கள்.

குடும்பத்தில் ஏற்பட்ட திடீர் மாற்றத்தால் துவண்டு விழுந்த பெண்கள் பலர் அடுத்த நிமிடமே தம்மைச் சுதாகரித்துக் கொண்டு முன்னைய எந்த அனுபவமும் இன்றி திணிக்கப்பட்ட சுமைகளைத் தாங்கிய வாறு நடை பயிலத் தொடங்கியுள்ளார்கள்.

அன்றாட உணவுத் தேவை, உறைவிடம், பாதுகாப்பு, சமூக அந்தஸ்து ஆகிய பல விடயங்களையும் கவனிக்க வேண்டிய பொறுப்பு அவர்களைச் சார்ந்துள்ளது. சிந்திக்க நேரம் வழங்கப்படாமல் இத்தனை சுமைகளும் அவர்களின் தலை மீது திணிக்கப்பட்டுள்ளன.

பல சர்வதேச நிறுவனங்களின் உதவியுடனும், ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் உதவியுடனும் வடமாகாணத்தின் போரின் பின்னதான தேவைகளைப் பற்றிய ஒரு முழுமையான ஆய்வை மேற்கொண்டு அரசு அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளோம்.

கடன்களைத் திரும்பக் கட்டுவதில் பெண்கள் காட்டும் நேர்மையும், சுறுசுறுப்பும் எமக்கெல்லாம் ஆச்சரியத்தைக் கொடுக்கின்றன. இவ்வாறான செயல்களினால் மக்களின் தேவைகள் ஓரளவாவது பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன.

சில நிறுவனங்கள் சேவைகளை வழங்குவதற்கு மாறாக ஆசை வார்த்தை காட்டி அவர்களிடம் இருப்பதையும் பறித்துச் செல்லும் பல செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளன என்று பத்திரிகை வாயிலாக அறிந்துள்ளோம்.

சட்டமும், ஒழுங்கும் மாகாண சபையின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாக அரசியல் யாப்புக் கூறினாலும், எமது கட்டுப்பாட்டுக்குள் அவை இல்லை என்பதே உண்மை.

பல சட்ட, ஒழுங்கு சம்பந்தமான நடவடிக்கைகள் பற்றிய எமது கோரிக்கைகள் புறக்கணிக்கப்படுகின்றன என்பதே உண்மையாகும். போதைப் பொருள் பாவனைக்கும், மகளிர் மீதான குற்றச் செயல்களின் அதிகரிப்புக்கும் இடையில் இருக்கும் தொடர்பை முழுமையாக ஆராய்ந்து உடனடியாக ஆவன செய்ய வேண்டிய ஒரு பொறுப்பில் நாங்கள் இருந்து கொண்டிருக்கின்றோம் - என்றார்.

(ற-ஐ-4-ரி4)

# தென்மராட்சியில் மீள்குடியமர்ந்த மக்களுக்கு 300 வீடுகள் விரைவில்

## மீள்குடியேற்ற அமைச்சின் வீட்டுத் திட்டம் ஊடாக

சாவகச்சேரி, மார்ச் 11

மீள்குடியேற்ற அமைச்சால் யாழ். மாவட்டத்துக்கு வழங்கப்பட்டுள்ள வீடமைப்புத் திட்டம் ஊடாக தென்மராட்சி பிரதேசத்தில் 300 வீடுகள் அமைக்கப்படவுள்ளன என்று பிரதேச செயலக தகவல்கள் தெரிவித்துள்ளன.

அதியுயர் பாதுகாப்பு வலயங்களாகக் காணப்பட்டு, பின்னர் மக்களை மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட தனங்களப்பு, கரம்பகம், எழுதுமட்டுவாழ் தெற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் 197 வீடுகளும், ஏனைய வீடுகள் வன்னியிலிருந்து வந்தோர் மற்றும் நிரந்தர குடியிருப்பு இல்லாதவர்களுக்கும் வழங்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதியுயர் பாதுகாப்பு வலயங்களாகக் காணப்பட்டு மீள்குடியமர்வு செய்யப்பட்ட பிரிவுகளில் நிரந்தரமாக குடியிருப்பவர்களுக்கு மட்டும் வீடுகள் வழங்குவது என்று பிரதேச செயலகம் தீர்மானித்துள்ளது என்றும் அறிய முடிகின்றது.

மீள்குடியமர்வுக்குப் பதிவை மேற்கொண்ட பலர், இன்னமும் மீளக் குடியமராமல் தினமும், வாரத்திலும், மாதத்திலும் வந்து தமது இடங்களைப் பார்த்துச் செல்கின்றனர். இந்த நிலையில் ஏற்கனவே பல பிரிவுகளில் வழங்கப்பட்ட வீடுகள் குடியிருப்புக்களின்றி காணப்படுவதைக் கருத்தில் கொண்டு நிரந்தரமாகத் தங்கியுள்ள குடும்பங்களுக்கே வீடுகள் வழங்கப்படவுள்ளன என்று கூறப்படுகின்றது.

தனங்களப்பு, கரம்பகம், எழுதுமட்டுவாழ் தெற்கு ஆகிய பிரிவுகளில் 343 குடும்பங்களுக்கு வீடுகள் இல்லையென்று பதிவுகள் செய்யப்பட்டுள்ள போதிலும், அங்கு நிரந்தரமாக 197 குடும்பங்களே தங்கியுள்ளன. எனவே அவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வீடுகள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

பிரதேசத்தில் வசிக்கின்ற 22 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களில் 6 ஆயிரத்து 17 குடும்பங்களுக்கு வீடுகள் தேவையாக உள்ளன. அவர்களில் ஆயிரத்து 217 பேருக்கு சொந்தக் காணிகள் இல்லாததால் வீடுகள் வழங்க முடியவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

எழுதுமட்டுவாழ் தெற்கில் 80 குடும்பங்களுக்கும், கரம்பகத்தில் 47 குடும்பங்களுக்கும், தனங்களப்பில் 70 குடும்பங்களுக்கும் தற்போது வீட்டுத் திட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டு வீடுகள் வழங்கப்பட்ட போதிலும், சில வீடுகள் ஆள்களில்லாமல் தொடர்ந்து மூடப்பட்டுள்ளதைக் கருத்தில் கொண்டு பிரிவுகளில் நிரந்தரமாக குடியிருப்பவர்களே வீடுகள் வழங்குவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, பிரதேசத்தில் இதுவரை 3 ஆயிரத்து 925 வீடுகள் அமைக்கப்பட்டு உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ற-ஐ-9)

# குருநகர் இறங்குதுறைப் பகுதிக்கு மின்விளக்குகளைப் பொருத்தவும்

## மின்சார சபையிடம் மனு கையளிப்பு

குருநகர், மார்ச் 11

குருநகர் கடற்றொழிலாளர் மற்றும் குருநகர் இறங்கு துறையை அண்டிய பகுதியில் வசிக்கும் பொதுமக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு மின் விளக்குகளை அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணியால் மனு ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது என அந்த அமைப்பின் செயலாளர் அ.க.ஏணொர்ஸ்ற் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது-

இந்தப் பகுதியில் மின் விளக்குகள் அமைக்கப்படாதுள்ளதால், கரையோரப் பகுதி முழுவதும் இரவில் இருளில் மூழ்கிக் காணப்படுகின்றது. இதனைப் பயன்படுத்தி மது அருந்துவோர் மற்றும் போதைப் பொருள் பாவிப்போரின் செயற்பாடுகளும் அதிகரித்து வருவதுடன் களவுகளும் இடம்பெற்று வருகின்றன.

அத்துடன் றெக்கிளமேசன் கடற்கரை யோர வீதியில் மின் விநியோகம் வழங்கப்பட்டும், மின் கம்பங்களில் மின் விளக்குகள் பொருத்தப்படாததால் கடற்றொழிலாளர்கள் இரவு நேரங்களில் தமது கடற்றொழில் உபகரணங்களை கொண்டு செல்வதில் சிரமத்தை அனுபவித்து வருகின்றனர்.

இந்தப் பிரச்சினையை பல தடவைகள் மின் பொறியியலாளரது கவனத்துக்கு கொண்டு சென்றபோதும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

நல்லாட்சிக்கான ஆட்சியின் போதாவது இந்தக் கடற்கரை வீதிக்கு இருள் அகன்று ஒளி பிரகாசிக்க ஆவன செய்யுமாறும் சுன்னாகத்தில் இயங்கும் இலங்கை மின்சார சபைப் பொறியியலாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது- என்று தெரிவிக்கப்பட்டது.

(ற-ஐ-51)

# வடமராட்சி கிழக்கில் இறால் பிடிப்பு அமோகம்

யாழ்ப்பாணம், மார்ச் 11

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் இறால் பிடிக்கும் நடவடிக்கையில் பெரும் எண்ணிக்கையான மீனவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

சுண்டிக்குளம் நீர் ஏரியில் இருந்து தட்டுவன்கொட்டி, கொம்படி ஊடாக ஆனையிறவு நீர் ஏரி வரைக்கும் உள்ள கடற்பகுதியில் இந்த இறால் பிடிக்கும் நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது என்று கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் கூறினார்.

வடமராட்சி கிழக்கு மற்றும் கிளிநொச்சி பிரதேச மீனவர்கள் இந்த இறால் பிடிப்பதில் ஈடுபட்டுள்ளனர். இந்த மாதத்தில் இறால்களின் பெருக்கம் அதிகரித்தும் காணப்படும்.

மீனவர்களால் தினமும் பெருமளவில் இறால்கள் பிடிக்கப்பட்டும் வருகின்றன. பிடிக்கப்படும் இறால்களை வியாபாரிகள் அதிகளவில் கொள்வனவு செய்து வருகின்றனர். கூலர் வாகனம் மூலம் தென்பகுதிக்கு ஏற்றுமதி செய்யப்பட்டும் வருகின்றன.(ற-ஐ-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காடுகளிலிருந்து படையெடுக்கும் விச ஜந்துக்கள்; கும்மிருட்டில் தவிக்கும் அனந்தர் புளியங்குளம்

## மின்சார இணைப்பு வழங்கி உதவுமாறு மக்கள் கோரிக்கை

வவுனியா,மார்ச் 11
போரின் பின்னர் மீள்குடியமர்ந்த வவுனியா அனந்தர் புளியங்குளம் கிராமத்தைச் சேர்ந்த 130 குடும்பங்களுக்கு இதுவரை மின் இணைப்பு வழங்கப்படவில்லை. அதனால் தாம் காட்டு வாசிகளைப் போன்று வாழ வேண்டியுள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அதிகாரிகள் ஒருவரை ஒருவர் சாட்டிக் கொண்டு எமக்கு மின்சாரம் தர மறுக்கின்றனர். மின்சாரம் இல்லாத தால் காடுகளில் இருந்து கிராமத் துக்கு வரும் விச ஜந்துக்களால் தொடர்ச்சியாக நாம் பாதிக்கப் படுகின்றோம். சம்பந்தப்பட்டவர்கள் இது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வவுனியா வடக்குப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள அனந்தர் புளியங்குளம் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் 1990 ஆம் ஆண்டிலிருந்து அடிக்கடி இடப்பெயர்வுகளைச் சந்தித்து வந்தனர். முதலில் 1997 ஆம் ஆண்டு இடம்பெற்ற "ஜெயசிக்குறு" போர் நடவடிக்கை காரணமாகக் கிராமத்தை விட்டு இடம்பெயர்ந்தனர்.

பின்னர் மீண்டும் 2004 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மீளக் குடியமர்ந்து இறுதியாக 2008 ஆம் ஆண்டு மீண்டும் இடப்பெயர்வு ஒன்றைச் சந்தித்தனர். இதன் போது உடைமைகளையும், உறவுகளையும் இழந்த நிலையல் 2011 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் இருந்து சிறிது சிறிதாக குறித்த கிராமத்தில் மீண்டும் வந்து குடியமர்ந்தனர்.

அவ்வாறு தொடர்ச்சியான இழப்புக்களைச் சந்தித்து மீளக்குடியமர்ந்த மக்களுக்கு 2014 ஆம் ஆண்டு மின்சாரம் வழங்கும் திட்டம் வடக்கின் வசந்தத்தால் ஆரம்பிக்கப்பட்டது. அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட குறித்த மின் விநியோகத் திட்டம் 3 வருடங்கள் ஆகியும் நிறைவு பெறாமல் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளது. அதனால் அனந்தர் புளியங்குளம் கிராமத்தில் குடியேறிய 130 குடும்பங்களைச் சேர்ந்த 600 பேர் மின்சார வசதியின்றி வாழ்கின்றனர்.

> “அனந்தர் புளியங்குளம் கிராமத்தில் குடியேறிய 130 குடும்பங்களைச் சேர்ந்த 600 பேர் மின்சார வசதியின்றி வாழ்கின்றனர். அருகில் காட்டுப்பகுதியாகக் காணப்படுவதால் இரவு நேரங்களில் மட்டுமல்லாது, பகலிலும் தொடர்ச்சியாக விசஜந்துக்கள் கிராமத்துக்குள் வருகின்றன என்றும், அதனால் தாங்கள் காட்டு வாசிகளைப் போன்று வாழ்ந்து வருகின்றோம் என்றும் கிராம மக்கள் கூறுகின்றனர்.”

அருகில் காடுகள் காணப்படுவதால் இரவு நேரங்களில் மட்டுமல்லாது, பகலிலும் தொடர்ச்சியாக விசஜந்துக்கள் கிராமத்துக்குள் வருகின்றன என்றும், அத னால் தாங்கள் காட்டு வாசிகளைப் போன்று வாழ்ந்து வருகின்றோம் என்றும் கிராம மக்கள் கூறுகின்றனர்.

இது தொடர்பாக மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் எனப் பல இடங்களுக்கும் சென்று கதைத்த போது இன்று வரும் நாளை வரும் என்று கூறுகின்றார்கள்.

ஆனால் 3 வருடங்களாகியும் எமது கிராமத்துக்கு மின்சாரம் கிடைக்கவில்லை என்றும் அவர்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

இறுதியாக மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்த கிராம மக்கள்,மின்சாரத்தை வழங்கித்தங்களது பிள்ளைகளின் கல்விக்கு வழி வகுத்துத்தங்களையும்அபிவிருத்தித் திட்டங்களில் உள்வாங்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் வவுனியா மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் கிருபாசுதனைத் தொடர்பு கொண்டு கேட்ட போது–

மக்கள்,அதிகாரிகளுக்கும் தனக்கும் இதுகுறித்துப் பல முறை தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக வடக்கின் வசந்தம் திட்ட அலுவலகத்துக்கு நான் கடிதம் அனுப்பியிருந்தேன். அவர்களும் மின்சாரத்தை வழங்குவதாகக் கூறினர்.

அதன் பின்னர் எந்தப் பதிலும் இல்லை. எந்தப் பகுதி மக்களாக இருந்தாலும் அவர்களுக்கு வழங்கப்பட்ட குறித்த திட்டம் மக்களைச் சென்றடைய வேண்டும். அனந்தர் புளியங்குளம் கிராம மக்களுக்கான மின்சாரம் மிகவிரைவில் கிடைக்கும். அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றேன்.– என்றார்.

வடக்கின் வசந்தம் திட்டப் பணிப்பாளரிடம் இது குறித்துக் கேட்ட போது–

கடந்த 2014 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட குறித்த கிராமத்துக்கான மின்சாரத் திட்டம் தற்போதும் இழுத்தடிக்கப்படுவது உண்மை. வடக்கின் வசந்தம் திட்டத்தில் தவறு இல்லை. சரியான ஒப்பந்தகாரர்கள் அமையாமையே இதற்குக் காரணமாகும். இது தொடர்பாக நாங்களும் பதில் கடிதங்கள் அனுப்பியுள்ளோம். தற்போது அனைத்துப் பகுதிகளுக்கும் இந்த மாத இறுதிக்குள் மின்சாரத்தை வழங்கி முடிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. அதற்கு அமைவாக அனைத்துப் பகுதிகளிலும் வடக்கின் வசந்தம் திட்டம் பூர்த்தியாகும். ஆனால் குறித்த கிராமத்தின் வேலைகள் கொஞ்சம் தாமதமாகும் என் பதை மறுக்க முடியாதுள்ளது. –என்றார். (ற-ஐ-21)

## சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 11
கோண்டாவில்,தென் கிழக்கு சமுர்த்தி செயலணியின் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலை மண்டபத்தில் பி.ப.3 மணிக்கு நடைபெறவுள்ளன.

சமுர்த்தி செயலணித் தலைவர் கே.றாஜி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில்,பிரதம விருந்தினராக கோண்டாவில் சி.த.க.பாடசாலை அதிபர் திருமதி ந.சிவராணி கலந்து கொள்ளவுள்ளார். (ற-ஐ-7)

## ஆவணக் காப்பகத்தின் 30 ஆவது நிகழ்வு

யாழ்ப்பாணம்,மார்ச் 11
யாழ்ப்பாணம் சமகாலக் கலை, கட்டடக் கலை மற்றும் வடிவமைப்புக்கான ஆவணக் காப்பகத்தால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் தொடரின் 30 ஆவது நிகழ்வு எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு 199, கோவில் வீதி, நல்லூரில் அமைந்துள்ள காப்பகத்தில் இடம்பெறவுள்ளது.

“படங்களுடன் இன்பம்” எனும் தலைப்பில் இடம் பெறும் நிகழ்வில்,சமகால இலங்கைக் கலையின் மிக முக்கியமான காண்பியக் கலைஞரான சஞ்ஜீவகுமார ஓவியவெளிப்பாட்டின் அம்சங்களைக் காட்சியுரையாக நிழ்த்தவுள்ளார். (ற-ஐ-21)

## போரால் பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்க்கைத்தரம் உயர்த்தப்பட வேண்டும்

### அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 11
வடக்கு மாகாணத்தில் பெண்களின் வளர்ச்சியில் கவனம் செலுத்த வேண்டியது மிகவும் அவசியமாகவுள்ளது. கடந்த காலப் போரால் ஏற்பட்ட பாதிப்புக்களில் இருந்து அவர்கள் இன்னமும் மீளாத நிலையில், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டியுள்ளது.

– இவ்வாறு இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன்தெரிவித்தார்.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் அனுசரணையில் மகளிர் விவகாரப் பிரிவால் நடத்தப்பட்ட சர்வதேச மகளிர் தின நிகழ்வு நேற்று முன் தினம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

வடக்கு கிழக்கில் ஏற்பட்ட போரால் பெண்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். உறவுகள், உடைமைகளை இழந்து, அங்கவீனமுற்ற நிலையில் பல பெண்களின் வாழ்க்கை நலி வடைந்துள்ளது. இந்தப்பாதிப்புக்களில் இருந்து அவர்கள் இன்னமும் மீளவில்லை.

வட மாகாணத்தில் 89 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கணவர்மாரை இழந்தவர்கள்உள்ளனர். அவர்களில் சராசரியாக 8 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் 3 பிள்ளைகளுடன் காணப்படுகின்றனர். அவர்களில் 9 ஆயிரம் பேர் 40 வயதுக்கு உட்பட்டவர்களாவர். அவர்கள் வாழ்வாதாரம் இன்றியும், பிள்ளைகளை வளர்க்கப் போதிய வருமானம் இன்றியும் தவிக்கின்றனர். அத்துடன் பல பெண்கள் காணாமற் போன தமது உறவுகளைத்தேடிக்கொண்டிருக்கின்றனர். இதற்கான தீர்வுகள் இன்னமும் பெறப்படவில்லை.

> “பெண்கள் விடயத்தில் வடமாகாணமும் மத்திய அரசும் தொடர்ந்து இணைந்து செயற்பட வேண்டும். தற்போது உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் பங்கு அதிகரித்துள்ளது. அதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் உதவியுள்ளது.”

பெண்கள் விடயத்தில் வட மாகாணமும் மத்திய அரசும் தொடர்ந்து இணைந்து செயற்பட வேண்டும். தற்போது உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் பங்கு அதிகரித்துள்ளது. அதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் உதவியுள்ளது. எந்தக் கட்சியாயினும் பெண்களின் பங்கு அதிகரிக்கப்பட வேண்டும்.

பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு எதிரான நடவடிக்கைகள் எடுக்கப்படும் வரை, கறுப்பு மாதமாகக் கடைப்பிடிப்பது எந்தப் பயனையும் தராது.

தற்போதைய அரசு பெண்களுக்காகச் சிறந்த நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. பெண்கள், சிறுவர்களின் விடயத்துக்காக 600 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.– என்றார்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக ராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனும், கௌரவ விருந்தினர்களாக கல்வி அமைச்சர் த. குருகுலராஜாவும், இந்தியத் துணைத்தூதர் ஆ.நடராஜனும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் விசேட பேச்சாளர்களாக கலந்து கொண்ட ஓய்வு நிலைப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோகிலா மகேந்திரனும், சட்டத்தரணியும் பெண்ணுரிமைச் செயற்பாட்டாளருமான திருமதி சுஜித்தாவும் தமது கருத்துக்களைப் பகிர்ந்தனர். (ற-ஐ-4,ரி)

## தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி மனிதச் சங்கிலிப் போராட்டம்



யாழ்ப்பாணம்,மார்ச் 11
தமிழ் அரசியல் கைதிகளின் உணவு தவிர்ப்புப் போராட்டத்துக்கு வலுச் சேர்த்தும், அவர்களின் உடனடி விடுதலையை வலியுறுத்தியும் கிளிநொச்சியில் மனிதச்சங்கிலிக் கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று நடத்தப்பட்டது.

நேற்றுக்காலைகிளிநொச்சி திரேசம்மா ஆலயத்தில் ஆரம்பமான போராட்டம் நடை பயணமாகக் கிளிநொச்சி சித்தி விநாயகர் ஆலயம் வரை சென்றடைந்தது.

“உண்ணா நோன்பில் அரசியல் கைதிகள் கண்ணீரில், அவர்களின் குடும்பங்கள்மீது அரசே கருணை காட்டு” என குறித்த மனிதச் சங்கிலிப் போராட்டத்தில் ஈடுபட்டோர் வலியுறுத்தினர்.

இந்தப் போராட்டத்தில் கிளிநொச்சி பொதுச் சந்தை வர்த்தகர்கள், மாவட்ட வர்த்தக சங்கத்தினர், கிளிநொச்சி பனை தென்னை வள கூட்டுறவு அபிவிருத்திச் சங்கத்தினர், கிளிநொச்சி தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தினர், கிளிநொச்சியைச் சேர்ந்த பொது அமைப்புக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு தங்களுடைய ஆதரவைத் தெரிவித்திருந்தனர். நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களும் போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

“ஒரு சில இனவாதிகளுக்காக ஒரு சமூகமே சீரழிக்கப்படலாமா”, “ஒரு கணம் சிந்தித்துப் பார்ப்பாயா நல்லாட்சி அரசே”, “எமது பிள்ளைகளின்விடுதலைக்காக நல்லாட்சிக்கு வாக்களித்த நாம் தினம் தினம் நடுத்தெருப் போராட்டத்தில்” போன்ற பதாகைகளைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஏந்தியிருந்தனர். (ற-ஐ-21,ரி3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் விவசாயத்துக்கு ரூ. 52.67 மில்லியன் ஒதுக்கீடு

## யாழ். மாவட்ட விவசாயப் பணிப்பாளர் தகவல்

அச்சுவேலி, மார்ச் 11

யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களத்துக்கு வடக்கு மாகாண சபை குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்தி நிதியாக 52.67 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது. கடந்த வருடம் 12.5 மில்லியன் ரூபா வழங்கப்பட்டிருந்த நிலையில், இந்த வருடம் அதன் நான்கு மடங்குக்கு மேல் அதிகரித்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. - இவ்வாறு யாழ்.மாவட்ட விவசாயப் பணிப்பாளர் கி.ஸ்ரீபாலசுந்தரம் தெரிவித்தார்.

> இந்த நிதியைப் பயன்படுத்தி விவசாயத் திணைக்களம், விவசாய அபிவிருத்தியுடன் விவசாயக் குடும்பங்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு திட்ட வரைபுகளை மேற்கொண்டுள்ளது.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இந்த நிதியைப் பயன்படுத்தி விவசாயத் திணைக்களம், விவசாய அபிவிருத்தியுடன் விவசாயக் குடும்பங்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கான வேலைத் திட்டங்களையும் முன்னெடுப்பதற்கு திட்ட வரைவுகளை மேற்கொண்டுள்ளது.

உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரித்தல், பெறுமான அதிகரிப்பு, விவசாய கைத்தொழில் அபிவிருத்தி, உட்கட்டுமான அபிவிருத்தித் திறன் விருத்திக்கான பயிற்சிகள் என்ற வகையில் இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

தெரிவு செய்யப்படும் விவசாயப் பயனாளிக் குடும்பங்கள் செலவினத்தில் 50 வீதத்தைத் தமது சொந்த நிதியில் செலவிட வேண்டும். திணைக்களம் 50 வீத நிதியை உதவு தொகையாக வழங்கி ஊக்குவிக்கும்.

வேலைத்திட்டங்களில் இணைத்துக் கொள்ளப்பட்ட விவசாயிகள் உரிய வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்கான ஆலோசனை வழிகாட்டல்களை விவசாயத் திணைக்களத்தின் அதிகாரிகள் மேற்கொள்வதோடு தொடர்ச்சியான கண்காணிப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்வர்.

குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்தி நிதி மூலம் மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்களில் முழுநேர விவசாயக் குடும்பங்கள் மட்டும் பயனாளிகளாக இணைத்துக் கொள்ளப்படுவதோடு, இளைய தலைமுறையினருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

திட்ட முன்மொழிவுகளுக்கான அங்கீகாரம் கிடைத்ததும், குறித்த ஐந்து பிரிவுகளும் சமகாலத்தில் முன்னெடுக்கப்படும். - என்றார். (ற-ஜ-11)

## நடன ஆற்றுகை

சாவகச்சேரி,மார்ச் 11

தென்மராட்சி கல்வி வலய அழகியல் பாடப் பிரிவினர் நடத்தும் "நாத நர்த்தன வர்ணம்" என்னும் நடன ஆற்றுகை நிகழ்வு, நாளை சனிக்கிழமை மு.ப. 9.30 மணி தொடக்கம் சாவகச்சேரி நகர சபை பொன்விழா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனும், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழகப் பௌதிகவியல் துறை பேராசிரியர் க.கந்தசாமியும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களின் 15 நடனஆற்றுகைகள்மேடையேற்றப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-9)

## ஆலயங்களில் திருட்டு

வடமராட்சி, மார்ச் 11

புலோலிப் பகுதியில் இரு ஆலயங்களில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர். ஓர் ஆலயத்தில் வெள்ளியிலான வேல், திரிசூலங்கள் மற்றும் வெள்ளிப் பொருள்கள் திருடப்பட்டுள்ளன. மற்றைய ஆலயத்தில் திருட்டு முயற்சி கைகூடவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

புலோலி, தென்மேற்கு சாரையடியில் உள்ள வீரபத்திரர் ஆலயம் மற்றும் ஆலய மடம் என்பவற்றின் கதவுகளை உடைத்து தீவிர தேடுதல் நடத்திவிட்டு மூலஸ்தானத்தில் வைக்கப்பட்டிருந்த வெள்ளியிலான வேல், திரிசூலம் மற்றும் பாத்திரங்களை திருடர்கள் எடுத்துச் சென்றுள்ளனர். அங்கிருந்த உண்டியலை அவர்கள் உடைத்திருந்தபோதும், அதற்குள் பணம் இருக்கவில்லை.

புலோலி, வடமேற்கு குரும்பைகட்டி ஞானவைரவர் கோயிலுக்குச்சென்ற இனந்தெரியாத அதே திருடர்கள், இரும்புத் தகட்டாலான உண்டியலை உடைத்தபோது அது முடியாமல் போகவே, அங்குள்ள சிற்றாலயத்தில் இருந்த இரண்டுதிரிசூலங்களை பிடுங்கி எடுத்து அதனால் உடைக்க முயன்றும் முடியாது போகவே தமது முயற்சியைக் கை விட்டுச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவங்கள் குறித்து இரு ஆலயங்களின் நிர்வாக சபையினரும் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். (ற-ஜ-173)

## வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 11

சுந்தாவின் 'விழுதுகள் கட்டுரைத் தொகுதி வெளியீட்டு விழா' இன்று வெள்ளிக்கிழமை முற்பகல்10.30மணியளவில்தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கு முதலமைச்சரின் செயலாளர் இ.வரதீஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில், வெளியீட்டுரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்துறைத் தலைவர் பேராசிரியர் சிவலிங்கராஜாவும், வாழ்த்துரையை வல்வையூர் அப்பண்ணாவும், நயப்புரையை பருத்தித் துறை பிரதேச செயலாளர் த.ஜெயசீலனும் நிகழ்த்தவுள்ளனர். (ற-ஜ-ரி2)

## போதையில் சாரத்தியம் மூவருக்கு 3 மாதச்சிறை

யாழ்ப்பாணம், மார்ச் 11

மதுபோதையில் வாகனங்களைச் செலுத்திய மூவருக்கு யாழ். நீதிவான் நீதிமன்று மூன்று மாதங்கள் கடூழியச் சிறைத் தண்டனையுடன், அபராதமும் விதித்துள்ளது.

மதுபோதையில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திய குற்றச்சாட்டில் நால்வர், யாழ்ப்பாணப் போக்குவரத்து பொலிஸாரால் யாழ்.நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களில் மூவர் தமக்கெதிரான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டனர்.

அதையடுத்து சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாமல் மோட்டார் சைக்கிளைச் செலுத்திய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞரொருவருக்கு 11 ஆயிரத்து 500 ரூபா அபராதத்துடன், 3 மாதங்கள் கடூழியச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

ஏனைய இருவருக்கும் ஒவ்வொருவரையும் அபராதமாக 7ஆயிரத்து 500 ரூபா செலுத்துமாறும், 3 மாதங்கள் கடூழியச் சிறைத் தண்டனையை அனுபவிக்குமாறும், அவர்களது சாரதி அனுமதிப்பத்திரத்தை ஆறு மாதங்களுக்குத் தடுத்து வைக்குமாறும் நீதிவான் சி.சதிஸ்தரன் உத்தரவிட்டார்.

இந்தக் குற்றச்சாட்டுக்கு சுற்றவாளி என தெரிவித்த நான்காவது நபரான இளைஞரை, 75 ஆயிரம் ரூபா சரீரப் பிணையிலும், 25 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் நீதிமன்றம் விடுவித்ததுடன் வழக்கு நடவடிக்கைகள் முடிவடையும் வரை சாரதி அனுமதிப்பத்திரத்தை இடைநிறுத்துமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. (ற-ஜ-103)

## 10 கிலோ கஞ்சாவுடன் சிக்கியவருக்கு மறியல்

யாழ்ப்பாணம், மார்ச் 11

பருத்தித்துறை நகரப்பகுதியில் வைத்து மதுவரித் திணைக்கள அதிகாரிகளால் 10 கிலோ கேரளா கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை, எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பருத்தித்துறையில் இருந்து கொழும்புக்கு கடத்தப்படவிருந்த கஞ்சா, பொதி செய்யப்பட்ட நிலையில்மதுவரித்திணைக்கள அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டிருந்தது.

பருத்தித்துறை டிப்போவுக்கு முன்பாக ஒருவர் கஞ்சா பொதியுடன் பஸ்ஸுக்குக் காத்திருப்பதாக மதுவரித் திணைக்கள அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலை அடுத்து அங்கு சென்ற மதுவரித் திணைக்கள அதிகாரிகள், குறித்த நபரை மடக்கி பிடித்துள்ளனர். அவரது பயணப்பையை சோதனையிட்டபோது ஈரம் காயாத நிலையில் 10 கிலோவுக்கும் அதிகமான கேரளக் கஞ்சாப் பொதிகள் கைப்பற்றப்பட்டன என்று மதுவரி அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

குறித்த கஞ்சாப் பொதிகள் பொலித்தின் பையில் பொதி செய்யப்பட்டுப் பயணப்பையில் போடப்பட்டு நகரப்பகுதிக்கு எடுத்து வரப்பட்டிருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.

குறித்த சந்தேக நபர் மருத்துவ பரிசோதனைகளின் பின்னர் நேற்று பருத்தித்துறை நீதிமன்றில் மதுவரித் திணைக்கள அதிகாரிகளால் முற்படுத் தப் பட்டார். வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிவான் சந்தேக நபரை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ற-ஜ-109)

## வட மாகாணத்தில் கணிதத்துறை அதிக வளர்ச்சி அடையவேண்டும்

### கல்வியமைச்சின் நிபுணத்துவ ஆலோசகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 11

வடமாகாணத்தில் கணிதத் துறையில் அதிக வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டியுள்ளது. அதற்கு கணிதத்துறை சார்ந்த எதிர்காலச் செயற்றிட்டங்கள் அனைத்துப் பாடசாலைகளிலும் தேவை. - இவ்வாறு கல்வியமைச்சின் நிபுணத்துவ ஆலோசகர் பா.தனபாலன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கான கணித முகாம் அண்மையில் மன்னார் சென்.சேவியர் கல்லூரியில், மன்னார் மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஏ.சுகந்தி தலைமையில் நடை பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே கல்வியமைச்சின் நிபுணத்துவ ஆலோசகர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கணிதத்துறைப் பெறுபேறுகளின் வீழ்ச்சி, மாணவர்களுடைய எதிர்காலத்தையே பாதிப்படையச் செய்கின்றது. யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியிலும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் இந்தத் துறையில் தமிழ் மாணவர்களின் தொகை வீழ்ச்சியடைந்து வருகின்றது. அத்துடன் ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் கணித பாடம் கற்கும் மாணவர்களின் வீதமும் வீழ்ச்சியடைந்து வருகின்றது.

மேலும் வடமாகாணத்தில் கணித பாடத்தைக் கற்பிக்க ஆசிரியர் பற்றாக்குறையும் காணப்படுகின்றது. இது பாரதூரமான எதிர்காலப் பாதிப்புக்களை எமது இனத்துக்கு ஏற்படுத்தவுள்ளது.

முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னாரில் இருந்து கணித பாடத் துறைக்கு, தேசிய கல்வியியற் கல்லூரியில் பயில எந்த மாணவர்களும் அனுமதி பெறவில்லை.

கணித பாடப் பெறுபேறுகளை ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் ஆய்வு செய்கின்றபோது, எமது பிரதேசங்களில் இந்தத் துறையின் வீழ்ச்சி நிலையை அறிய முடிகின்றது.

ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சையில் கணித பாடத்தில் மாணவர்கள் அனைவரையும், எதிர்கால நோக்கில் சித்தியடையச் செய்வதற்கான ஐந்தாண்டுத் திட்ட அடிப்படை செயற்றிட்டங்கள் பாடசாலை மட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கின்றது.

அதற்கு ஒரு முன் மாதிரியான செயற்றிட்டமாக மன்னார் மாவட்ட வலயக்கல்வித் திணைக்களத்தால், விசேடமாக வலயக் கல்விப் பணிப்பாளரால் மேற்கொள்ளப்பட்ட இந்தக் கணித முகாம் செயற்றிட்டம் போற்றுதற்குரியது.

இளம் சிறார்களிடையே கணித பாடத்தை விரும்பிப் படிக்கும் வகுப்பறைச் சூழலுடன், வகுப்பறைக்கு வெளியிலான வீட்டின் சூழலும் அமைக்கப்பட வேண்டும். இந்த வகையில் இன்று மாணவர்களும், பெற்றோர்களும் இங்கு அழைக்கப்பட்டு அவர்களுடன் இணைந்து முப்பது செயற்பாடுகளை ஆசிரியர்களின் வழிகாட்டலில் செய்துள்ளனர். இந்தக் கற்றல் கற்பித்தல் உத்தி மகத்தானது. அதனை ஒவ்வொரு பாடசாலையிலும் ஏற்படுத்த வேண்டும்.

கணித பாட விசேட முகாம்கள், கணிதபாட விளையாட்டுக்கள், கணித பாடத்தை இலகுவாகக் கற்கக் கூடிய இறுவட்டுக்கள், மென்பொருள்களை உருவாக்குதல், கண்காட்சிகள், செயன்முறை கணிதக் கருத்தரங்குகள், கணித வள நிலையங்களை எதிர்காலம் நோக்கி உருவாக்க வேண்டும்.

கணித பாடக் கற்றல் கற்பித்தலில் ஆசிரியர்கள்,மாணவர்கள் எதிர்நோக்கும் இடர்கள், பாடசாலை மட்டத்தில் எதிர்நோக்கப்படும் இடர்கள் தொடர்பான ஆய்வுகள் செய்ய வேண்டியது முதன்மைத் தேவையாக இன்று அவசியமாகவுள்ளது. - என்றார். (ற-ஜ-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# புலிகளிடம் மீட்கப்பட்ட தங்கத்தில் குளறுபடிகள்

## மகிந்த, பொன்சேகா ஆகியோரிடம் கேட்டு தெளிவுபடுத்தித் கொள்ளலாம் என்கிறார் பிரதமர்

கொழும்பு, மார்ச் 11

தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட தங்கத்தில், மக்களுக்கு மீளக் கையளிக்கப்பட்டுள்ள தங்க நகை எண்ணிக்கையில் பெரும் குளறுபடிகள் - பரஸ்பர முரண்பாடுகள் காணப்படுகின்றன. அவை பற்றி விசாரணை நடத்தி உண்மை கண்டறியப்பட வேண்டும். - இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

போருக்குத் தலைமை வகித்த முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா இந்தச் சபையில் இருக்கின்றார். எனவே விசாரணைக்கு அவரது ஒத்துழைப்பையும் பெற முடியும் என்றும் அவர் கூறினார்.

நாடாளுமன்றம் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்குச் சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு, பொதுமனுத் தாக்கல் ஆகியவை முடிவடைந்த பின்னர், பிரதமரிடம் கேள்வி கேட்கும் சுற்று ஆரம்பமானது.

அதன்போது ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ, தெற்கில் காணி சொத்தாகக் கருதப்படுகின்றது. இவ்வாறுதான் வடக்கு மக்களுக்குத் தங்கம் முக்கிய சொத்தாக இருக்கின்றது. புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட தங்கம் மக்களிடம் கையளிக்கப்படும் என்று தேர்தல் காலத்தில் உறுதியளிக்கப்பட்டது. அலரி மாளிகைக்கு அழைத்து சிலருக்குத் தங்கமும் வழங்கப்பட்டது. எனவே புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட தங்கத்தின் நிறை எவ்வளவு? அதன் பெறுமதி என்ன? என்று கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர், புலிகளின் வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்டிருந்தவை, அடைவு வைக்கப்பட்டிருந்தவை என்று எல்லாத் தங்கமும் இராணுவத்தால் மீட்கப்பட்டது. ஏனைய இடங் களில் வைக்கப்பட்டிருந்த தங்கமும் கைப்பற்றப்பட்டது. இவற்றில் பெரும்பாலானவை மக்களுடையவை.

> இராணுவத் தரப்பிலிருந்து வேறுவிதமான கருத்து வெளியாகியுள்ளது. ஊடகங்களிலும் மாறுபட்ட தகவல்கள் வெளியாகியுள்ளன. எனவே, இந்தக் கொடுக்கல், வாங்கலில் முரண்பாடு இருக்கின்றது. எண்ணிக்கையில் தெளிவற்ற தன்மை காணப்படுகின்றது. இது பற்றி ஆராயப்படவேண்டும்.

இராணுவத்தின் அறிக்கையின்படி அண்ணளவாக 150 கிலோ தங்கம் மீட்கப்பட்டுள்ளது. தங்க மாலை, வளையல், பென்டன், தோடு, மோதிரம் ஆகிய ஆபரணங்கள் இதில் அடங்கும். இராணுவத்தால் 28 தடவைகள் மத்திய வங்கிக்கு 32 கிலோ தங்கம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவற்றின் பெறுமதி 131 மில்லியனாகும். இவை மக்களிடம் கையளிக்கப்பட்டது என்று மத்திய வங்கி கூறியுள்ளது.

இராணுவத் தரப்பிலிருந்து வேறுவிதமான கருத்து வெளியாகியுள்ளது. ஊடகங்களிலும் மாறுபட்ட தகவல்கள் வெளியாகியுள்ளன. எனவே, இந்தக் கொடுக்கல், வாங்கலில் முரண்பாடு இருக்கின்றது. எண்ணிக்கையில் தெளிவற்ற தன்மை காணப்படுகின்றது. இது பற்றி ஆராயப்படவேண்டும். இதற்கான கடப்பாடு நாடாளுமன்றத்துக்கு இருக்கின்றது.

மேற்படி விடயம் பற்றித் தெரிந்த இராணுவத்துக்குத் தலைமை தாங்கிய பொன்சேகா, பாதுகாப்பு அமைச்சராக இருந்த மகிந்த ராஜபக்ச ஆகியோர் சபையில் இருக்கின்றனர். எனவே பிரச்சினையை இலகுவில் தீர்க்க முடியும்.

இன்னமும் அடையாளம் காணப்படாதவர்களின் 80 கிலோ தங்கம் இராணுவத்தின் வசம் பாதுகாப்பாக இருக்கின்றது. அவற்றின் பெறுமதி கணிப்பிடப்படவில்லை. விரைவில் அவை மத்திய வங்கியிடம் கையளிக்கப்படும் என்று இராணுவம் கூறியுள்ளது - என்றார்.

புலிகளின் வங்கிகளில் நகைகளை அடைவு வைத்து பற்றுச் சீட்டுக்களை வைத்துள்ள மக்கள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல்வாதிகளுடன் கலந்துரையாடி அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு நீதி அமைச்சர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ஆகியோருக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்தார். (ந-5)

### விபத்தில் பிக்குகள் காயம்

கொழும்பு, மார்ச் 11

ஹற்றன் - கொழும்பு பிரதான வீதியில் வட்டவளை பகுதியில் கார் ஒன்றும் பஸ் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இரண்டு பிக்குகள் படுகாயம் அடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் பிக்குகள் பயணித்த கார் ஒன்றும், இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான அவசர திருத்த பணிகளை மேற்கொள்ளும் பஸ் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது காரில் பயணித்த பிக்குகள் இரண்டு பேர் பலத்த காயங்களுடன் வட்டவளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக நாவலப்பிட்டி வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ந)

# ஐ.தே.கவுக்கும், சு.கவுக்கும் திருமண பந்தம் கிடையாது

## அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா கூறுகின்றார்

கொழும்பு, மார்ச் 11

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனோ - ஐக்கிய தேசியக் கட்சியுடனோ எமக்குத் திருமண பந்த உறவு கிடையாது. கட்சியின் தேவை நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளவே அரசுடன் இணைந்தோம். அதனை நிறைவேற்றிக் கொண்ட பின்னர் அரசை விட்டு வெளியேற சிறிலங்கா சுதந்திரக் கட்சி தயாராகவே உள்ளது.- இவ்வாறு அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் புதன் கிழமை நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கட்சித் தீர்மானங்களுக்கு எதிராகக் கருத்துத் தெரிவிப்பவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதாகக் குறிப்பிட்டாலும் அதனை நடைமுறையில் செயற்படுத்த முடியாது. நாங்கள் சண்டை பிடித்துக் கொண்டாலும் தேர்தலில் ஒன்றாக இணைந்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராகவே செயற்படுவோம்.

மகிந்த ராஜபக்ச கட்சிக்கு எதிராக கருத்துத் தெரிவிப்பதற்காக நாங்கள் எதனையும் கூற முடியாது. அவரது ஆட்சிக் காலத்தில் இல்லாத விமர்சிக்கும் சுதந்திரம் இன்று உள்ளது. அதனை அவரும் அனுபவிக்கின்றார்.

மகிந்த, நாமலுக்கு கட்சியில் முன்னுரிமை வழங்கப்படுமாயின் அதனை ஏற்றுக் கொள்வோம். ஆனால், பசில் ராஜபக்சவுக்கு கட்சிக்குள் முன்னுரிமை வழங்க நாங்கள் இடமளிக்க மாட்டோம். மீண்டும் குடும்ப ஆட்சிக்கு இடமளிக்க முடியாது - என்றார். (ந-5)

### தோட்டம் தொடர்பான சட்டங்கள் மீளாய்வு

கொழும்பு, மார்ச் 11

தோட்டப் பிரதேசங்களை அதிகார எல்லைக்குள் உள்ளடங்கும் விதமாகச் சட்டங்களை உள்ளடக்கி பிரதேச சபைகள் சட்ட மீளாய்வு செய்யப்படும் என்றுமாகாணசபைகள்மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

1987 இன் இலக்கம் 15 ஐக் கொண்டுள்ள பிரதேச சபைகள் சட்டத்துக்கு அமைய தோட்டப் பிரதேசங்கள், சம்பந்தப்படும் உள்ளூராட்சி நிறுவனத்தின் அதிகார எல்லைக்குள் உள்ளடங்காதிருப்பதால் சிக்கல்கள் பலவும் தலைதூக்கியுள்ளன.

புதிய சட்டத் திருத்தத்தின் பின்னர், தோட்டப் பிரதேசங்களின் வீதிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்யும் பொறுப்பு பிரதேச சபைக்கு உரியதாக்கப்படும்.

தற்போதுள்ள சட்டங்களுக்கு அமைய, தோட்டக் குடியிருப்புக்கள் தொடர்பாக பொதுவான சேவைகளை வழங்கும் போது பிரதேச சபைகளின் நிதியங்களைப் பயன்படுத்திக் கொள்ள இயலாது எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-ஐ-22)

# பாதுகாக்கப்பட வேண்டிய உயிரினங்கள் அறிமுகம்

கொழும்பு, மார்ச் 11

பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியுள்ள உயிரினங்களாகத் தேவாங்கு, அழுங்கு, கருங்குரங்கு அசோக்க பெத்தியா என்ற பறவை, மற்றும் சிட் டுக் குருவி என்பவற்றை அறிமுகப்படுத்துவதற்கு வன வாழ் உயிரினங்களைப் பாதுகாக்கும் வனஜீவிகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வனவாழ் உயிரினங்கள் மீதான குற்றச் செயல்களுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது கடப் பாடாகும். அது தொடர்பாக உங்களுக்கு உரிமை உள்ளது என்ற தொனிப்பொருளின் கீழ், கடந்த வாரம் உலக வனவாழ் உயிரினங்கள் தினத்தை முன்னிட்டு உடவளவ தேசிய வனத்தில் இடம்பெற்ற நிகழ்வில் நிலையான அபிவிருத்திகள் மற்றும் வன வாழ் உயிரினங்கள் பிரதி அமைச்சரான திருமதி சுமேதா.பீ.ஜயசேன இதனைத் தெரிவித்திருந்தார்.

அண்மையில் சர்வதேச பிரகடனமொன்றுக்கு அமையவே காலிமுகத்திடலில்வைத்து ஒருதொகை யானைத் தந்தங்கள் அழிக்கப்பட்டன. ஆபிரிக்க நாடுகளில் மிகப் பெருமளவில் இடம்பெறும் யானைத் தந்தக் கடத்தலுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்கே அவ்விதம் செய்யப்பட்டிருந்தது.

சமுத்திரத்தில் உள்ள உயிரினங்களைப் பாதுகாப்பதற்கும் கூட இன்று விசேடமான செயற்றிட்டமொன்று நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. திமிங்கிலங்கள், டொல்பின்கள் போன்ற உயிரினங்களைப் போன்றே ஹிக்கடுவை உட்பட்ட பிரதேசங்களில் காணப்படும் பவளப் பாறைகளைப் பேணிப் பாதுகாப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (ந-ஐ-22)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புதிய அரசமைப்பு உருவாகுவதை தெற்கு மக்கள் வரவேற்கின்றனர்

## அரசமைப்பு குறித்துக் கருத்தறியும் குழுவின் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 11

புதிய அரசமைப்பு உருவாகுவதைத் தெற்கு மக்கள் எதிர்க்கவில்லை என்று புதிய அரசமைப்பு உருவாக்கம் குறித்துப் பொது மக்களின் கருத்துக்களை அறிவதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் தலைவர் சட்டத்தரணி லால் விஜேநாயக்க தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தனை மேற்படி குழுவினர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியிலுள்ள எதிர்க்கட்சித் தலைவரது அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

சுமார் ஒரு மணிநேரம் இடம்பெற்ற இந்தச் சந்திப் பின்போது, தமது குழுவின் செயற்பாடுகள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவருக்கு லால் விஜேநாயக்க விளக்கமளித்துள்ளார்.

சந்திப்பு நடைபெற்று முடிவடைந்த பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட லால் விஜேநாயக்க–

மக்களிடம் கருத்தறியும் நடவடிக்கை முடிவடைந்துள்ளது. இந்த நிலையில், நாம் சந்திக்க வேண்டும் என்று கருதும் நபர்கள் மற்றும் குழுக்களை எதிர்வரும் ஒரு மாத காலப் பகுதிக்குள் சந்திக்க எதிர்பார்த்துள்ளோம். இதன்படி எதிர்க்கட்சித் தலைவரைச் சந்தித்துக் கலந்துரையாடினோம். சுமார் ஒரு மணித்தியாலம் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. இது மிகவும் பலமிக்க கலந்துரையாடலாக அமைந்திருந்தது – என்றார்.

> கடந்த காலங்களில் அரசமைப்பின் கீழ் மக்களுக்கு முழுமையான பாதுகாப்புக் கிடைத்திருக்கவில்லை. அரச ஜனநாயகத்தை ஏற்படுத்தும் மிகவும் பலமான, அதே போல், இனங்களுக்கு இடையில் அந்நியோன்யத்தை ஏற்படுத்தி தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தும் அரசமைப்பொன்றையே மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

'எதிர்க்கட்சித் தலைவர் தரப்பில் இருந்து யோசனைகள் எதுவும் முன்வைக்கப்பட்டதா?' என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு, விசேடயோசனைகள் எதுவும் முன்வைக்கப்படவில்லை. பொதுவான நிலைமைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. நாட்டுக்குப் பொருத்தமான நாட்டின் அனைத்து மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய புதிய அரசமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும் என்பது தொடர்பில் அவர் மிகவும் ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைத்தார் என்று குறிப்பிட்டார்.

'தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு பற்றி பேசப்பட்டதா?' என்பது தொடர்பில் கேட்கப்பட்ட போது, தேசியப் பிரச்சினையும் இதில் சம்பந்தப்படுகின்றது.

கடந்த காலங்களில் அரசமைப்பின் கீழ் மக்களுக்கு முழுமையான பாதுகாப்பு கிடைத்திருக்கவில்லை.

அரச ஜனநாயகத்தை ஏற்படுத்தும் மிகவும் பலமான, அதேபோல், இனங்களுக்கு இடையில் அன்னியோன்னியத்தை ஏற்படுத்தி தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தும் அரசமைப்பொன்றையே மக்கள் எதிர்பார்க்கின்றனர். அதைத்தான் நாமும் இன்று எதிர் பார்க்கின்றோம் – என்றார்.

அரசமைப்புப் பிரச்சினையை விடவும், மக்கள் மத்தியில் ஆழமான பிரச்சினைகள் இருப்பதை மக்களிடம் கருத்தறியச் சென்றபோது எம்மால் அறிந்து கொள்ள முடிந்தது. ஆகவே, அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல் எவ்வளவு சிறந்த அரசமைப்பை உருவாக்கியும் சில நேரங்களில் அத னால் மக்களுக்கு பயன் கிடைக்காது போய்விடும் என்பதை எம்மால் உணரமுடிந்தது.

வடக்கிலும் சரி, கிழக்கிலும் சரி, தெற்கிலும் சரி, மேற்கிலும் சரி மிகவும் இலகுவாகத் தீர்க்கக்கூடிய பிரச்சினைகள் இன்று ஆழமான பிரச்சினைகளாக உருவாகியுள்ளன.

இந்த பிரச்சினைகள் குறித்தும் நாம் தனியான அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்போம். அவ்வாறான அறிக்கையொன்று எம்மிடம் கோரப்பட்டிருக்காத போதிலும் அந்தப் பிரச்சினைகள் பற்றியும் தனியான அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்க நாம் தீர்மானித்துள்ளோம். காணிப் பிரச்சினை, மீள்குடியேற்றப் பிரச்சினை போன்றவற்றை இதற்கு உதாரணங்களாகக் குறிப்பிட முடியும் – என்றார். (ந-5)

# தெற்கு அதிவேக வீதியில் 2,590 விபத்து; 20 பேர் சாவு

கொழும்பு,மார்ச் 11

தெற்கு அதிவேக நெடுஞ்சாலை திறந்து வைக்கப்பட்ட நாள் முதல் இன்று வரை 2 ஆயிரத்து 590 விபத்துகள் இடம்பெற்றுள்ளன. அவற்றால் 20 பேர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் 402 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தத் தகவலை உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல நேற்று சபையில் வெளியிட்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வாய் மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது, நாடளுமன்ற உறுப்பினர் புத்திய பத்திரவால் எழுப்பப்பட்டிருந்த கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்படி தகவலை வெளியிட்டார்.

விபத்துகள் காரணமாக அதிவேக நெடுஞ்சாலைக்கு 16 கோடியே 42 லட்சத்து 15 ஆயிரத்து 625 ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். (ந-ஜ)

# வில்பத்தை அழித்த அமைச்சர் சுதந்திரமாகத் திரிகின்றாராம்

## சாடுகின்றார் விமல் வீரவன்ச



கொழும்பு, மார்ச் 11

வில்பத்து வனத்தை அழித்த அமைச்சர் சுதந்திரமாக வெளியே திரிகின்றார். யான்னைக் குட்டி வளர்த்த தேரர் கைது செய்யப்பட்டுள்ளார். நல்லாட்சியில் சட்டம் ஏன் இவ்வாறு செயற்படுகிறது ? – இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன் கிழமை ஒழுங்குப் பிரச்சினை யொன்றை அவர் எழுப்பினார். உடுவே தம்மாலோக தேரர் கைது செய்யப்பட்டுள்ளார். இது முக்கியத்துவம்மிக்கபிரச்சினையாகும். பிக்குகள் தொடர்ச்சியாக கைது செய்யப்படுகின்றனர்.

வில்பத்து காட்டை அழிக்கும் அமைச்சர் வெளியே இருக்கிறார். அவருக்கு எதிராக சட்டம் செயற்படவில்லை. ஆனால், விகாரையில் யானைக் குட்டி வைத்திருந்த தேரருக்கு எதிராகச் சட்டம் செயற் படுகிறது – என்றார்.

இதன்போது குறுக்கீடு செய்த சபை முதல்வர், இது பற்றி தேரர் கைது) தற்போதுதான் தகவல் கிடைத்தது.

தேடிப் பார்த்து அறிவிப்பொன்று விடுக்கப்படும் என்று பதிலளித்தார். சட்டம், ஒழுங்கு அமைச்சரும் இதே காரணத்தைத்தான் குறிப்பிட்டார். (ந-5)

# கடந்த அரசின் கடன்களை செலுத்த விலைச் சூட்டெண்

## அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 11

கடந்த அரசு செலுத்த வேண்டிய கடன் தொகையைச் செலுத்தவேண்டியுள்ளதால் எரிபொருள் விலைச் சூத்திரம் ஒன்றைத் தயாரிக்க முடியாதுள்ளது என்று கனியவள மற்றும் எரிவாயு அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கனிய வளக் கூட்டுத்தாபனத்தால் 365 மில்லியன் ரூபா செலுத்தப்பட வேண்டியுள்ளது. மாதாந்த தவணைக்கான வட்டி வீதம் மாத்திரம், 1.2 பில்லியன் ரூபா அறவிடப்படுகிறது.

அது அவ்வாறு உள்ள போதும் பொதுமக்களின் நலக்கருதி விலைச் சூட்டெண் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய தற்போது எரிபொருள் விலையைக் குறைப்பதால் கடன் மீள் செலுத்துகையைத் தவிர்க்க முடியாது என்று அமைச்சர் தெரிவித்துள்ளார். (ந-ஜ-4)

# கிராமிய கூட்டுறவு வங்கியில் ரூபா 80 ஆயிரம் கொள்ளை

கொழும்பு, மார்ச் 11

அம்பலாந்தோட்டை நகரத்தில் உள்ள, கிராமியக் கூட்டுறவு வங்கியில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பட்டப்பகலில் கொள்ளையடித்து விட்டு தப்பித்துச் சென்றுள்ளனர் என்று வங்கியின் காசாளர் அம்பலாந் தோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை மதிய வேளையில் முகத்தை முழுமையாக மறைக்கும் தலைக் கவசங்களை அணிந்து, வாயை மறைக்கும் விதமாக கைக்குட்டைகளால் மூடிக் கொண்டு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் வங்கிக்குள் பிரவேசித்துள்ளனர்.

[illegible] வங்கியின் [illegible]ரையும் அச்சுறுத்தி வங்கியின் கொடுக்கல் வாங்கல்கள் பயன்பாட்டிலிருந்த சுமார் 80 ஆயிரம் ரூபாவைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர் என்று காசாளர் பொலிஸாருக்குத் தெரிவித்துள்ளார்.

கொள்ளைக்காரர்கள் வங்கிக்குள் பிரவேசித்து வங்கியினுள் இருந்தவர்களை அச்சுறுத்திப் பணத்தைப் பெற்றுக்கொண்டிருந்த வேளையில், காசாளரான பெண்மணிக்கு மதிய உணவைக் கொண்டு வந்திருந்த அவரது தந்தையாருக்கும் கூட அச்சுறுத் தல் விடுத்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கொள்ளையர்கள் அம்பாந்தோட்டைப் பக்கமிருந்து வந்துள்ளதோடு, அந்தப்பக்கமாகவே சென்றுள்ளனர் என்று தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ந-ஜ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## புதிய அரசமைப்பு உருவாக்கம்; தமிழர் செய்த பாவம்தான் என்ன..?

எங்கள் நாட்டுக்கு புதிய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கும் முகமாக, இப்போதைய நாடாளுமன்றத்தை, அரசமைப்புச் சபையாக மாற்றுவதற்கான தீர்மானம் நாடாளுமன்றில் நேற்று முன்தினம், ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு விட்டது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழித்தல்,

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசமைப்பு ரீதியான தீர்வை வழங்கும் பொருட்டு புதிய அரசமைப்புச் சட்டத்தை வகுத்தல், என்பவை இதில் குறிப்பிட்டுக் கூறக்கூடிய, பிரதான அம்சங்கள் ஆகும்.

இங்கே அழுத்திக் குத்திக்காட்ட வேண்டிய பிரதான அம்சங்களில்--

இனப்பிரச்சினைக்கு அரசமைப்பு ரீதியான தீர்வு ஒன்றை வழங்கவல்ல, சட்டவாக்கம் செய்வது என்ற பிரதான பந்தி நீக்கப்பட்டு விட்டதைக் குறிப்பிடலாம்.

புதிய அரசமைப்புச் சட்டம் நிறைவேற்றப்படும்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரசன்னமாக இருந்தபோதிலும், அவர்கள் இதுகுறித்து எவ்வகை சார்ந்த எதிர்ப்பையும்--எதிர் நிலைப்பாட்டையும்--தெரிவிக்கவில்லை! தீர்மானம் ஏகமனதாகவே நிறைவேற்றப்பட்டது!!

கடந்த அறுபது ஆண்டுகளாகப், புரையோடிப் போயுள்ள, தமிழ் மக்களை இரண்டாம் தரப் பிரசைகளாக மாற்றி, அரசியல் சார்ந்து மட்டுமன்றி--

அவர்களின் ஒட்டுமொத்த வாழ்வியல் தேவைகளையும் முறுக்கி முறித்து முடக்கி வைத்திருக்கும் சிங்கள அரசுகளின் வரிசையில்--

இனப்பிரச்சினைக்கு அரசமைப்பு ரீதியான தீர்வை வழங்க வல்ல, சட்டவாக்கத்தை சேர்த்துக் கொள்வதை, அதற்கு வகை செய்யும் பந்தியை நல்லாட்சி அரசும் “கரிபூசி” அழித்து விட்டது, பார்த்தீர்களா?

தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு எரித்துச் சாம்பராக்கப்பட்டு, புதைக்கப்பட்டுள்ளது!

மகிந்த ஆண்டால் என்ன, மைத்திரி ஆண்டால் என்ன, தமிழ் மக்களை இரண்டாம் தர, மூன்றாம் தரப் பிரசைகளாக, சிங்களத்துக்குப் பின்னால் இழுத்துச் செல்லும் நச்சேற்றப்பட்ட “ஜனநாயகம்” மிஞ்சும் நிலை மாறப்போவதில்லை, என்ற காட்சி அகன்று விரிந்து, வெளிச்சமாகத் தெரிகிறது!!

கொழும்பில் பணியாற்றிய நோர்வே நாட்டின் தூதுவரை வெளியேற்றுமாறு கோரி, தேசிய பிக்குகள் முன்னணி 2002 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் பேரணி நடத்தியதும்--

2006 ஆம் ஆண்டில் சமாதானத் தூதுவராக வந்த நோர்வேயின் ஹன்சன் போவர் வெறுங்கையோடு தம் நாடு புக்கியதும்--

அவற்றின் வழி வந்த, தோய்ந்து எழுந்த, தென்னிலங்கை அரசுகளும், இனவாதம் உறைந்த அரசியல் பிரகிருதிகளும், தமிழ் மக்களுடன் நல்லிணக்கத்தை உருவாக்குவதில் ஆழ்மனதார்ந்தேனும் செயற்படமாட்டார்கள் என்பதற்கான காட்சியே இதன்மூலம் கனத்து வடிகிறது.

உன் அப்பனுக்கும் பெப்பே, உனக்கும் பெப்பே என்ற நாசகார கீதம், புதிய அரசமைப்பு சபை உருவாக்கத்தின்போது ஒலிக்கிறதே...! தமிழ் மக்கள் இயற்றிய பாவம் தான் என்ன..??


முருகன், சாந்தன், பேரறிவாளன், நளினி, ரவிச்சந்திரன், ராபர்ட் பயஸ், ஜெயகுமார்

# 7 பேரின் விடுதலையில் அரசியல் வேண்டாம்

சேரலாதன்

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலை தொடர்பாகக் குற்றஞ் சாட்டப்பட்டு, நீதிமன்றத்தால் தண்டனை விதிக்கப்பட்டு, சிறையில் 25 ஆண்டுகளாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 7 பேரின் விடுதலை தொடர்பாக நிச்சயமற்றதொரு நிலைதான் நீடிக்கின்றது.

ராஜீவ் காந்தி 1991ஆம் ஆண்டு தேர்தல் பரப்புரைக்காகத் தமிழ்நாடு சென்றபோது பெண்ணொருவர் தனது உடலில் கட்டி வைத்திருந்த குண்டை வெடிக்க வைத்து அவரைக் கொலை செய்தார். இந்த வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டவர்களில் இறந்தவர்கள் போக முருகன், சாந்தன், பேரறிவாளன், நளினி, ரவிச்சந்திரன், ராபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகிய 7 பேர் நீதிமன்றத்தின் உத்தரவின் பிரகாரம் கடந்த 25 ஆண்டுகளாகச் சிறைத் தண்டனை அனுபவித்து வருகின்றனர்.

இவர்களின் விடுதலை தொடர்பாக அவ்வப்போது வாதப்பிரதிவாதங்கள் இடம்பெறுவது வழமையானதுதான். ஆனால், தமிழக சட்டசபைத் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் இந்த ஏழு பேரின் விடுதலை தொடர்பாக மீண்டும் பேசப்பட்டு வருகின்றது.

இதேவேளை- தமிழ் நாடு அரசு கைதிகளின் விவகாரத்தைத் தேர்தல் வேளையில் தனக்குச் சாதகமாக்கிக் கொள்வதற்குத் துடிக்கின்றது. இந்த நிலையில் தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சியுடன்தேர்தல்கூட்டணியை அமைத்துள்ள தி.மு.கவின் நிலைதான் தர்ம சங்கடத்தினுள் சிக்கியுள்ளது. தமிழ் நாட்டிலுள்ள தமிழ் உணர்வாளர்களின் கடுமையான எதிர்ப்பைக் காங்கிரஸ் கட்சி எதிர்கொண்டு வருகின்றது. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் செல்லாக்காசான நிலைக்கு காங்கிரஸ் தள்ளப்பட்டு விட்டது. ஆனால், தி.மு.கவுடன் கூட்டணி, அமைப்பதற்கு வேறு கட்சிகள் எவையும் முன் வராத நிலையில் காங்கிரஸுடன் அந்தக் கட்சி கூட்டணி அமைத்துள்ளது. இதில் தி.மு.கவில் உள்ள பல பேருக்கு உடன்பாடு இல்லை. இது கட்சியின் உயர்மட்டத் தலைவர்களுக்கும் நன்கு தெரியும்.

### கைதிகளின் விடுதலை தொடர்பாக பலரின் கருத்து


இந்த நிலையில் கைதிகளின் விடுதலை தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி; கடந்த 25 ஆண்டுகளாக இரட்டை ஆயுள் தண்டனையை அனுபவித்து வருகின்ற ஏழு கைதிகளையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார். இது தொடர்பாக ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ கருத்து வெளியிடுகையில்; தமிழ்நாட்டில் உள்ள கோடிக்கணக்கான தமிழ் உணர்வாளர்களின் வாக்குகளை அபகரிப்பதற்காக ஜெயலலிதா நாடகம் ஆடுவதாகத் தெரிவித்திருக்கிறார். ஏறத்தாழ இதே கருத்தைத்தான் பா.ம.க. நிறுவுனர் ராமதாஸும் தெரிவித்துள்ளார். ஏற்கனவே இந்திய உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் பிரகாரம் தமிழக அரசு ஏழுபேரையும் விடுதலை செய்ய முடியுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

> “25 ஆண்டுகளாகக் கொடிய சிறைதண்டனையை அனுபவித்து தமது இளமைக்காலம் முழுவதையும் தொலைத்து நிற்கும் இந்த ஏழுபேருக்கும் இனியாவது நியாயம் கிடைக்க வேண்டும். இதில் அரசியல் செய்வது பாவமானதொரு காரியமாகும்”

### சந்தர்ப்பவாதக் கூட்டணி

கைதிகளின் விடுதலையைக் கடுமையாக எதிர்க்கின்ற காங்கிரஸ் கட்சியுடன் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரிக்கை விடுக்கின்ற கருணாநிதி தேர்தல் கூட்டணி அமைத்துள்ளதை ஒரு சந்தர்ப்பவாதமாகவே கருத முடிகின்றது. இந்த இரண்டு கட்சிகளும் ஒரே தேர்தல் மேடையில் ஏறி நின்றுகொண்டு பரப்புரையில் ஈடுபடப்போவதை எண்ணிப் பார்ப்பதற்கே வினோதமாகத் தெரிகின்றது. இலங்கைத் தமிழர்கள் இறுதிப்போர் இடம்பெற்ற வேளையில் இன்னல்களை அனுபவித்துக் கொண்டிருந்த போது தி.மு.க தலைவர் கருணாநிதி ஆடிய நாடகம் இப்போது கண்முன்னால் தெரிகின்றது. ராஜீவ்காந்தி கொலை செய்யப்பட்டதை எவருமே சரியெனக் கூறமாட்டார்கள். ஒரு மனித உயிரைப் பறிக்கின்ற உரிமை எவருக்குமே கிடையாது. இதற்குக் காரணமான உண்மையான குற்றவாளிகளுக்கு உரிய சட்டத்தின் கீழ் தண்டனை வழங்கப்பட வேண்டும். ஆனால் இந்தக் கொலை தொடர்பாக பலசந்தேகங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. உண்மையான குற்றவாளிகள் தப்பிவிட அப்பாவிகள் மாட்டிக் கொண்டதாகக் கூறுவோரும் உண்டு.

இந்த நிலையில் 25 ஆண்டுகளாகக் கொடிய சிறைதண்டனையை அனுபவித்து தமது இளமைக் காலம் முழுவதையும் தொலைத்து நிற்கும் இந்த ஏழுபேருக்கும் இனியாவது நியாயம் கிடைக்க வேண்டும். இதில் அரசியல் செய்வது பாவமானதொரு காரியமாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.ஐ.முபாறக்

# அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ள அரசியல் கைதிகள் விவகாரம்



தமிழ் அரசியல் கைதிகளின் விவகாரம் என்பது, தமிழ் மக்கள் இந்த அரசு மீது வைத்திருக்கும் நம்பிக்கையைக் கேள்விக் குறியாக்கும் ஒன்றாக இப்போது மாறியுள்ளது.

தமது நீண்ட காலப் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படும் என்று நம்பித்தாம் ஆதரவளித்த இந்த அரசு தமது பிரச்சினைகளைப் புறக்கணிக்கின்றது என்ற குற்றச்சாட்டுக்களும் தமிழ் மக்கள் பலரால் இப்போது முன்வைக்கப்படுவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. அரசு பல பிரச்சினைகளைத் தீர்த்தும் வைத்துள்ளதால், இந்தக் குற்றச்சாட்டை முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது. இருந்தாலும், நீண்ட காலப் பிரச்சினைகளுக்கு அரசு முன்னுரிமை கொடுக்க வேண்டியது கட்டாயமாகும். நீண்ட காலப் பிரச்சினைகள் என்று சொல்லும் போது அந்தப் பிரச்சினைகள் 25 வருடத்துக்கும் மேலாக நிலைத்து நிற்பவையாகும். ஆகவே, இந்தப் பிரச்சினைகள் மேலும் நீடிக்க அனுமதிப்பது மனிதாபிமான மாகாது.

இந்த நாட்டு மக்கள் அனைவரினதும் பிரச்சினைகள் விரைவில் தீர்க்கப்பட வேண்டும் என இந்த அரசு விரும்புவது உண்மையானால், முதலில் நீண்ட காலப் பிரச்சினைகள் மீதே அரசு கவனம் செலுத்த வேண்டும்.

### நீண்ட காலப் பிரச்சினைகள்

தமிழர்களின் நீண்ட காலப் பிரச்சினைகள் என்று பார்க்கும்போது காணி இழப்பு, காணாமற் போனமை மற்றும் அரசியல் கைதிகளின் விவகாரம் போன்றவற்றை எடுத்துக்கொள்ளலாம். காணிப் பிரச்சினை ஓரளவு தீர்க்கப்பட்டிருக்கின்றது. அதே போல், அரசியல் கைதிகளின் பிரச்சினைகளும் ஓரளவு தீர்க்கப்பட்டிருக்கின்றது. காணாமற் போனோர் விவகாரம் தொடர்பில் இன்னும் முடிவேதுமில்லை.

> “இந்த நாட்டு மக்கள் அனைவரினதும் பிரச்சினைகள் விரைவில் தீர்க்கப்பட வேண்டும் என இந்த அரசு விரும்புவது உண்மையானால், முதலில் நீண்ட காலப் பிரச்சினைகள் மீதே அரசு கவனம் செலுத்த வேண்டும்.”

இந்தப் பிரச்சினைகள் எல்லாம் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும் என்ற நியாயமான காரணத்தை முன்வைத்து, இன்று தமிழர்கள் போராட்டங்களை நடத்தத் தொடங்கியுள்ளனர். வலி.வடக்கில் உள்ள தமது காணிகளை முழுமையாக விடுவிக்கக்கோரி, அகதி முகாம்களில் உள்ள மக்கள் சுழற்சி முறையில் உணவுதவிர்ப்புப் போராட்டத்தைத் தொடங்கியுள்ளனர். மறுபுறம், தமிழ் அரசியல் கைதிகளும் அவர்களது விடுதலையை வலியுறுத்தி உணவு தவிர்ப்புப் போராட்டத்தைத் முன்னெடுத்து வருகின்றனர்.

### ஆபத்தான கட்டத்தில் போராட்டம்

இந்த உணவு தவிர்ப்புப் போராட்டங்களில் , கைதிகளின் உணவு தவிர்ப்புப் போராட்டம் தான் நாளுக்கு நாள் ஆபத்தான கட்டத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றது. இந்தப் போராட்டம் உடனடியாக நிறுத்தப்படாவிட்டால் உயிர் இழப்புக்கள் ஏற்படக் கூடிய ஆபத்தும் நிறையவே உண்டு. விசாரணைகள் இன்றி வெலிக்கடை - மகஸின் சிறையில் நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 15 தமிழ் அரசியல் கைதிகள் கடந்த மாதம் 23 ஆம் திகதி உணவு தவிர்ப்புப் போராட்டத்தைத் தொடங்கினர். இதன் விளைவாகக் குற்றமற்றவர் எனத் தெரிவித்து ஒருவர் மாத்திரம் மறுநாள் விடுதலை செய்யப்பட்டார். ஏனைய 14 பேரும் தொடர்ந்தும் போராட்டத்தை முன்னெடுக்கின்றனர். இவர்கள் தொடர்பில் ஒரு முடிவை எடுக்கவேண்டிய கட்டாயத்துக்கு இப்போது அரசு தள்ளப்பட்டுள்ளது. இந்தப் போராட்டம் இரண்டு வாரங்களைக் கடந்து நீடித்துக்கொண்டிருக்கின்றது. அவர்களின் உடல்நிலை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டு செல்கின்றது. உடனடியாக அந்தப் போராட்டம் நிறுத்தப்படாவிட்டால், உயிர் இழப்புக்கள் ஏற்படலாம் என்ற அச்சம் நிலவுவதால், அரசு விரைந்து இந்த விவகாரம் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.கடந்த வருடம் அரசியல் கைதிகள் இரண்டு தடவைகள் மேற்கொண்ட உணவு தவிர்ப்புப் போராட்டத்துக்கு அரசு சாதகமான பதிலை அளித்து, அந்தப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்தது. இந்தப் போராட்டத்தையும் அவ்வாறு முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்று அனைவரும் விரும்புகின்றனர். போராட்டத்தை நிறுத்துமாறு இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 14 தமிழ் அரசியல் கைதிகளிடம் கோரிக்கை விடுத்தும் கூட, அவர்கள் போராட்டத்தை நிறுத்தவில்லை. அவர்கள் ஒரு முடிவோடுதான் இருக்கின்றார்கள் என்பது இதிலிருந்து தெரிகின்றது. இது அவர்களின் விடுதலைக்கான இறுதிப் போராட்டமாக இருக்கக்கூடும் எனத் தோன்றுகிறது.

### நம்பிக்கையுடன் காத்திருக்கும் கைதிகள்

கடந்த வருடம் உணவு தவிர்ப்புப் போராட்டத்துக்கு அரசு வழங்கிய தீர்மானத்தை அடிப்படையாக வைத்தே -அரசு மீது நம்பிக்கை வைத்தே இந்தத் தமிழ் அரசியல் கைதிகள் 14 பேரும் போராட்டத்தை முன்னெடுக்கின்றார்கள். இந்தப் போராட்டத்துக்கு அரசு நிச்சயம் நல்ல பதிலை வழங்கும் என கைதிகள் நம்புகின்றார்கள்.

## 30 வருடங்களாகப் புனரமைக்கப்படாத இரணை இலுப்பைக்குளம் வீதி

இரணை இலுப்பைக்குளம் வீதி, வவுனியாவிலிருந்து செல்லும் மன்னார் வீதியின் பூவரசன்குளம் வைத்தியசாலைக்கு அண்மித்தால்போல் வடக்கு நோக்கிச் செல்லும் 10 கிலோமீற்றர் நீளமான வீதியாகும். இந்த வீதி புலவனார் ஊர், சிவநகர், மடுக்குளம், வேலன்குளம், சின்னத்தம்பனை, கோயில் மோட்டை, செங்கற்படை, கருங்காலிக்குளம், தெகிளங்குளம், குஞ்சுக்குளம், கோயில் புளியங்குளம், பூசாரிக்குளம், காக்கையன்குளம், இரணைஇலுப்பைக்குளம், விளாத்திக்குளம், வலைஞன்கட்டு ஆகிய கிராமங்களை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது.

இந்த வீதி, கடந்த சுமார் 30 வருடங்கள் வரையில் புனரைமைப்பு எதனையும் காணாத நிலையில் காட்சி தருகின்றது. 1985 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வெளிக்கிளம்பிய கற்கள், மண் எல்லாம் மழையிலும் வெள்ளத்திலும் முற்றாக அள்ளுண்டு போய்விட்டன. சேதமடைந்துள்ள இந்த வீதி மக்களைப் பதம் பார்க்கும் அளவுக்கு படுமோசமான நிலையிலுள்ளது. அரசியல்வாதிகளானாலும் சரி, சம்பந்தப்பட்ட அதிகாரிகளானாலும் சரி இதைக் கவனிப்பதில்லை.

குறிப்பாக கடந்த பெப்ரவரி 4 ஆம் திகதி இந்தப் பகுதி மக்கள் தங்களது இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி பூவரசங்குளம் ஊடாக இரணை இலுப்பைக்குளம் செல்லும் சந்தியில் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தினர். சம்பவ இடத்துக்கு வவுனியா அரச அதிபர், வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் உத்தியோகத்தர், நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், மாகாண சபை உறுப்பினர் எம்.தியாகராசா, வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், இலங்கைப் போக்குவரத்து சபை உத்தியோகத்தர்கள் ஆகியோர் வருகை தந்து மக்களுடன் கலந்துரையாடியபோது இருவார காலத்துள் வீதி செப்பனிடப்படும் எனவும், இலங்கை போக்குவரத்து சபை பேருந்து ஒரு வாரத்தில் சேவையில் ஈடுபடும் எனவும் கூறப்பட்டது. ஆனால் இன்றுவரை எவையுமே முன்னெடுக்கப்படவில்லை.

வைத்தியசாலை, இரணை இலுப்பைக் குளத்தில் புனரமைக்கப்பட்டு புதிய பொலிவுடன் காட்சியளிக்கிறது. நிரந்தர வைத்திய அதிகாரி இல்லாமையால், மக்கள் வவுனியா, பூவரசங்குளம் வைத்தியசாலைகளை நாடவேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுகிறது. வீதியும் புனரமைக்கப்படாத நிலையில், இந்த மக்கள் நோய் வாய்ப்பட்டு துன்புறும் வேளையில் வைத்திய வசதிக்காக பெருந்துன்பம் அனுபவிக்கின்றார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகளே! தயவுசெய்து கூடிய விரைவில் இந்த மக்களுக்கு விடியலைப் பெற்றுக் கொடுங்கள். எமது மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ் அரசியல் தலைவர்களே! நல்லாட்சி என்பது தமிழரைப் பொறுத்தமட்டில் வார்த்தையில்தான் மலர்ந்திருக்கிறதே தவிர, அரசியல் செயற்பாடுகளில் அல்ல. வார்த்தைக்கு வார்த்தை தமிழ் அரசியல் தலைவர்கள்! நல்லாட்சி பற்றி என்னதான் புகழ்ந்தாலும், இந்த நல்லாட்சியில் முழுமையாக நன்மை பெறுவது பெரும்பான்மையின மக்களே. இறையாட்சியைத் தவிர எந்த ஆட்சி வந்தாலும் தமிழர் நிலை ஒருபோதும் மாறாது என்பதைத் தமிழர் தரப்பு முதலில் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். இது எமது தந்தை செல்வாவின் தீர்க்க தரிசன வேதவாக்கு.

எனவே எமது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினர்களே உங்களது பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டிலாவது இந்த வீதியைச் சீர்செய்து தருமாறு மிகவும் தாழ்மை யுடன் மக்கள் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

வி.சேனாதிராசா
நல்லூர், யாழ்ப்பாணம்

## சைவ உணவகத்தின் அடாவடித்தனம்

யாழ். பஸ்தரிப்பிடத்துக்கு அருகில் உள்ள சைவ உணவகமொன்றுக்கு மகளிர் தினத்தன்று மதிய உணவுக்காகச் சென்றேன். ஒரு பார்சல் உணவுப்பொதிக்கான சிட்டையை (120 ரூபா) எடுத்து பணம் பெறுபவரிடம் கொடுத்தேன்.

அப்போது அவர் 20 ரூபா தரும்படி கேட்டார். நான் இல்லை என்று சொன்னேன். அந்த வேளையில் எனக்கு அவசர தொலைபேசி அழைப்பு வந்த காரணத்தினால் தொலைபேசியை எடுத்தபோது, தொலைபேசியோடு இருக்கிறாய் நீ! என்னை இம்சைப்படுத்துகிறாய். உனக்குச் சாப்பாடு இல்லை. வேறு கடையில் போய்ச்சாப்பிடு என்று பலர் முன்னிலையில் அவமானப்படுத்தி எனது சுய கௌரவத்தையும் பாதிக்கும் வகையில் நடந்து கொண்டதுடன், சிட்டையையும் கிழித்து எறிந்து கொடுத்த பணத்தையும் திருப்பித் தந்து விரட்டிவிட்டார். இந்தச் சம்பவம் எனது மனநிலையைப் பாதித்தது மட்டுமன்றி, பசிக்கு உணவருந்தச் சென்றபோது பெண் என்றும் பார்க்காமல் விரட்டிவிட்ட தன்மையானது மிகவும் கீழ்த்தரமான செயற்பாடாகும். ஆகவே, இனி வரும் காலத்தில் எனக்கு மட்டுமன்றி வேறு எந்தப் பெண்களுக்கும் இப்படியான சம்பவங்கள் இடம்பெறக்கூடாது என்பதை தெரியப்படுத்த விரும்புகின்றேன்.

பாதிக்கப்பட்ட பெண்,
ந.பிரியதர்சினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈரான் கடந்த இரு நாள்களாக உயர் தெழில்நுட்ப ஏவுகணைச் சோதனையை நிகழ்த்தியுள்ளது. ஈரானின் வடக்கில் உள்ள அல்போர்ஸ் மலைப் பகுதியில் இந்தச் சோதனை இடம்பெற்றுள்ளது. அமெரிக்காவின் எச்சரிக்கையையும் மீறி இந்தச் சோதனை இடம்பெற்றதாக தகவல் வெளியாகியுள்ளது. ஏவுகணைகள் இஸ்ரேல், சவுதி அரேபியாவின் எந்தப் பகுதிகளையும் தாக்கலாம் என எச்சரிக்கைத் தகவல்கள் விடுக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது. (த-ரீ4)

## அரபு இராச்சியத்தில் திடீர்ப் புயல் சில இடங்களில் ஆலங்கட்டி மழை

அபுதாபி, மார்ச்.11

ஐக்கிய அரபு இராச்சியத்தில் நேற்று முன்தினம் கடும் சூறாவளி வீசியது. தலைநகர் அபுதாபியை சூறாவளி புரட்டிப் போட்டது. புயல்காற்றுடன், மழையும், இடிமின்னலும் ஏற்பட்டன. சில இடங்களில் ஆலங்கட்டி மழை பெய்தது. நகரத் தெருக்களில் வெள்ளம் தேங்கி நின்றது. மணிக்கு 120 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசியதால் சர்வதேச விமானப்போக்குவரத்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. கடந்த சனிக்கிழமையில் இருந்து 295 மில்லிமீற்றர் மழை பதிவாகியுள்ளது. வறண்ட பிரதேச நாடு என்பதால் இங்கு வருடாந்த மழை வீழ்ச்சி 100 மில்லிமீற்றர் ஆகும். சில நாள்களில் மட்டும் இங்கு கிட்டத்தட்ட 3 மடங்கு மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது என வானிலை ஆய்வு மையத் தலைவர் தெரிவித்துள்ளார். இந்தத் திடீர் மழையால் வெள்ளப்பெருக்கு, சேதங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதோடு, மழை நீர் ஓடக்கூடிய வடிகால் அமைப்பு அங்கு இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ரீ4)



# 22,000 ஐ.எஸ். போராளிகளின் முழு விவரங்களும் அம்பலம்

## முன்னாள் போராளி ஒருவர் பிரிட்டனின் பிரபல ஊடகமொன்றுக்கு வழங்கினார்

லண்டன், மார்ச்.11

ஐ.எஸ். அமைப்பில் உள்ள ஆயிரக்கணக்கான போராளிகளின் விவரங்கள் பிரிட்டனின் பிரபல ஊடக நிறுவனமான 'ஸ்கை நியூஸு'க்குக் கிடைக்கப் பெற்றுள்ளன என நேற்று முன்தினம் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.



ஐ.எஸ். அமைப்பில் இருந்து ஏமாற்றம் அடைந்த முன்னாள் உறுப்பினரொருவரிடமிருந்து போராளிகளின் விவரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன என அந்தச் செய்தி நிறுவனம் கூறியுள்ளது.

ஐ.எஸ். அமைப்பின் உள்ளகப் பாதுகாப்புத் துறையினரின் ஆவணங்களில் இருந்து குறித்த விவரங்கள் திருடப்பட்டுள் ளன. போராளிகளின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், குடும்ப விவரம் எனப் பல விவரங்கள் அதில் அடங்கியுள்ளன.

சிரிய இராணுவப் படையில் இருந்து, ஐ.எஸ். அமைப்பில் இணைந்து கொண்ட அபு ஹமித் என்பவர், இந்த ஆவணத்தை ஊடகவியலாளருக்குக் கையளித்துள்ளார். ஐ.எஸ். அமைப்பில் ஏற்பட்ட தகராறுகள் காரணமாக அதிலிருந்து விலகும்போது அவர் ஆவணங்களைத் திருடியுள்ளார்.

கிடைக்கப்பெற்ற ஆவணங்களில் இருந்து, 51 நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஐ.எஸ் இல் இணைந்துள்ளனர் என அந்தச் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த விவரக்கோவை ஐ.எஸ். அமைப்புடன் இணையும்போது போராளிகள் அனைவரும் தமது சுயவிவரத்தைப் பதிவு செய்யும் விவரச் சான்று ஆகும். செய்திநிறுவனத்தின் இந்தத் தகவல் வெளியீட்டுக்கு பிரிட்டனின் உள்துறை அமைச்சோ அல்லது வெளியுறவு அமைச்சோ எந்தப் பதிலும் வழங்கவில்லை.

இந்த ஆவணத்தின் மூலம், வட ஐரோப்பா, அமெரிக்கா, கனடா, வட ஆபிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகள் ஆகிய நாட்டவர்களுக்கு ஐ.எஸ். அமைப்புடன் தொடர்புகள் இருப்பதை உறுதி செய்யக்கூடியதாகவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

> ஐ.எஸ். அமைப்பு சொந்த நாட்டு மக்களை அவர்களுக்கு எதிராகத் திருப்பிவிட்டுள்ளது. திறன் வாய்ந்த பாதுகாப்புக் குழு மூலம் இனம் காணப்படாத தீவிரவாதிகளை கண்டறிய பெரும் உத்தி கையாளப்பட்டு வருகிறது.

இந்த விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த சர்வதேச பாதுகாப்புப் பணியக அதிகாரி கிறிஸ் பிலிப்ஸ், இது பெரும் வளர்ச்சி எனத் தெரிவித்துள்ளார். மேலும் ஐ.எஸ். அமைப்பு சொந்த நாட்டு மக்களை அவர்களுக்கு எதிராகத் திருப்பிவிட்டுள்ளது. திறன் வாய்ந்த பாதுகாப்புக் குழு மூலம் இனம்காணப்படாத தீவிரவாதிகளைக் கண்டறிய பெரும் உத்தி கையாளப்பட்டு வருகிறது எனத் தெரிவித்தார்.

இந்த வெளியீடு மூலம் பல போராளிகளை ஐ.எஸ். அமைப்புக்கு எதிராகத் திருப்ப முடியும். அமெரிக்கா, ஐரோப்பாவில் இருந்து ஐ.எஸ். அமைப்பில் இணைய நாட்டம் காட்டுபவர்களைத் திசை திருப்ப முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த ஆவணம் மூலம் தொலைவில் இருந்தும் எவ்வாறு ஐ.எஸ். அமைப்பில் இணைந்து கொள்கிறார்கள் என்பதை எம்மால் அறியக் கூடியதாகவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

சர்வதேசப் பாதுகாப்பு அமைப்புப்பணிப்பாளர் ஒலிவியர் கைட்டா, இந்தத் தகவல் எமக்கு உற்சாகத்தைத் தருகிறது எனத் தெரிவித்துள்ளார். பிளவு இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (த-ரீ4)

## பென்சில்வேனியாவில் சூடு ஐவர் சாவு; மூவர் படுகாயம்

பென்சில்வேனியா, மார்ச்.11

அமெரிக்காவின் பென்சில்வேனியா மாகாணத்தில் வீடு புகுந்து இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 5 பேர் கொல்லப்பட்டதுடன், 3 பேர் காயமடைந்தனர். இரு ஆயுததாரிகள் இந்தத் தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.



நேற்று முன்தினம் இரவு திடீரென இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

3 பெண்களும், ஓர் ஆணுமாக 4 பேர் சம்பவ இடத்தில் உயிரிழந்தனர், பெண் ஒருவர் மருத்துவமனையில் உயிரிழந்தார். மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட மூவரில், இருவரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளது. ஆரம்பக் கட்ட விசாரணைகளில் இருவர் தாக்குதலை நடத்தியுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

20 தடவைகள் சுடப்பட்ட சத்தங்கள் கேட்டதாக அயலவர்கள் தெரிவித்தனர். இதுவரை தாக்குதல் தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை. சந்தேகநபர்கள் குறித்த அங்க அடையாளங்களையும் பொலிசார் வெளியிடவில்லை. தாக்குதலுக்கான காரணங்கள் குறித்து விசாரிக்கப்பட்டு வருகின்றது. (த-ரீ4)

## 4 கால்களுடன் கோழி

சீனாவின் கிழக்குப் பகுதியில் உள்ள பண்ணை ஒன்றில் 4 கால்களுடன் கோழியொன்று கண்டறியப்பட்டுள்ளது.

ஷான்டங் மாகாணத்தில், கோழிப்பண்ணை நடத்தி வரும் சூசூ விநோதமான கோழியை வளர்ப்பதாக அயலவர்கள் தகவல் தெரிவித்தன்ர்.

சாதாரணமாக கோழிக்கு இருக்கும் கால்களை விட மேலதிகமாக இரு கால்களை இந்தக் கோழி கொண்டுள்ளது. இதனை அப்பகுதி மக்கள் பலர் பார்வையிட்டுச் செல்கின்றனர்.

இந்தக் கோழி சாதாரணமாக நடந்து திரிந்தாலும் பெரும்பாலும் ஓய்வெடுக்க விரும்புவதாகப் பண்ணை உரிமையாளர் தெரிவித்தார். குறித்த பண்ணையில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பறவைகள் இருப்பதாகவும், ஆனால் இந்தக் கோழி விநோதமாகவும், மாறுபட்ட உடல் அமைப்புடன் இருப்பதாகவும் அவர் மேலும் கூறினார். 2012 ஆம் ஆண்டு சீனாவில் பெண்ணொருவர் சமைப்பதற்காக [illegible] கோழி நான்கு கால்களுடன் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-ரீ4)








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகு கேது பெயர்ச்சிப் பலன்கள்




## சிங்கம்

*(ராகு கேது பெயர்ச்சிப் பலன்கள் வரிசையில் சிங்க ராசிக்காரர்களுக்கான பலன்கள் பற்றி கீழே விவரிக்கப்படுகிறது)*

எதிலும் புதுமையைப் புகுத்தும் நீங்கள் புகழ்ச் சிக்கு மயங்குபவர்கள். அப்படிப்பட்ட உங்களுக்கு 08.01.2016 முதல் 25.07.2017 வரை உள்ள காலகட்டத்தில் இந்த ராகுவும், கேதுவும் என்ன செய்யப் போகிறார்கள் என்று பார்ப்போம்.

**ராகுவின் பலன்கள்:**
இதுவரை ராசிக்கு இரண்டாவது வீட்டில் அமர்ந் திருந்து கொண்டு வீண் வாக்குவாதங்களையும், பணப்பற்றாக்குறையையும், குடும்பத்தில் பிரச்சினைகளையும் தந்து கொண்டிருந்த ராகு பகவான் இப்போது உங்கள் ராசிக்குள்ளேயே நுழைவதால் இனி இடம், பொருள் ஏவலறிந்து பேசும் வித்தையை கற்றுக் கொள்வீர்கள். சமயோசித புத்தியுடனும் நடந்து கொள்வீர்கள். பிரச்சினைகள் வெகுவாகக் குறையும். மற்றவர்களின் உள்மனதையும் புரிந்துக் கொள்ளத் தொடங்குவீர்கள். குடும்பத்தினருடன் இருந்து வந்த பனிப்போர் நீங்கும். வராது என்றிருந்த பணமும் கைக்கு வரும். ஆனால் உங்கள் ஜென்ம ராசியிலேயே ராகு அமர்வதால் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்தப்பாருங்கள். உடம்பில் இரும்பு மற்றும் கல்சியம் சத்துக் குறைய வாய்ப்பிருக்கிறது.

எனவே பச்சைச் கீரை, காய், கனிகளை உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள். பாரம்பரிய உணவுகளை உட்கொள்வது நல்லது.
செரிமானக் கோளாறு, சிறுநீர் பாதையில் அழற்சி, வயிற்று உப்புசம், வாய்ப்புண் என்பவை வந்து செல்லும். விளம்பரங்களைக் கண்டு சந்தையில் புதிதாக அறிமுகப்படுத்தும் ஷாம்பு, சோப்பு, வாசனைத் திரவியங்களை வாங்கி ஏமாற வேண்டாம்.
ஒவ்வாமை, கிருமித்தொற்று வரக்கூடும். இரத்தக் கொதிப்பு அதிகமாகும். சாப்பாட்டில் உப்பைக் குறைத்துக் கொள்ளுங்கள். நேரம் தவறிச் சாப்பிட வேண்டாம். குடற்புண் வர வாய்ப்பிருக்கிறது.
விதிகளை மீறி சட்டத்துக்குப் புறம்பான வகையில் எவருக்கும் உதவ வேண்டாம். குடும்பத்திலும் சாதாரணமாகப் பேசப்போய் சண்டையில் முடியும். முன் கோபத்தை தவிர்க்கப் பாருங்கள். ஆழ்ந்த உறக்கம் இல்லாமல் அடிக்கடி மன அழுத்தங்களும் வரக்கூடும்.
மற்றவர்களை நம்பி புது முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். விஷப் பூச்சிகளான பாம்பு, பூரான் கடிக்க வாய்ப்பிருக்கிறது. ஈ-மெயில் மற்றும் மொபைல் போனில் வரும் பரிசுத் தொகை அறிவிப்புகளைப் பார்த்து ஏமாந்து விடாதீர்கள். பிள்ளைகள் இன்னும் கொஞ்சம் கடினமாக உழைத்தால் நல்லது என நினைப்பீர்கள்.
உங்கள் இளமைக் காலத்துடன் அவர்களை ஒப்பிட்டுப் பார்த்து கொஞ்சம் பெருமூச்சு விடுவீர்கள். பலவீனம் இல்லாத மனிதர்களே இல்லை என்பதைப் புரிந்து கொண்டு நண்பர்கள், உறவினர்களிடம் இருக்கும் நல்ல விடயங்களை மட்டும் எடுத்துக் கொள்ளுங்கள்.

**இராகுபகவானின் நட்சத்திர சஞ்சாரம்:**
உங்கள் ராசிநாதன் சூரியனின் உத்திரம் நட்சத்திரம் முதல் பாதத்தில் 08.01.2016 முதல் 10.03.2016 வரை ராகுபகவான் செல்வதால், அரச அதிகாரிகளின் நட்புக்கிடைக்கும். நீண்டநாள்களாக எதிர்பார்த்துக்காத்திருந்த விசா கிடைக்கும். அரசியலில் செல்வாக்கு உயரும். பழைய வீட்டை இடித்துக் கட்டுவீர்கள். என்றாலும் வேனில் கட்டி, உடல் உஷ்ணம் வந்து செல்லும். வழக்கால் நெருக்கடிகள் வரும். உத்திரம் நட்சத்திரம் முதல் பாதத்தில் பிறந்தவர்களுக்கு மனஇறுக்கம், வீண் பதற்றம், அலைச்சல் வந்து போகும்.
ராகுபகவான் உங்களின் சேவகாதிபதியும்–ஜீவனாதிபதியுமான சுக்ரனின் பூரம் நட்சத்திரத்தில் 11.03.2016 முதல் 15.11.2016 வரை செல்வதால் வீட்டுக்குத் தேவையான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யுமளவுக்குப் பணவரவு உண்டு.
தைரியம் கூடும். புது முடிவுகள் எடுப்பீர்கள். இளைய சகோதர வகையில் மதிப்புக் கூடும். பழுதாகிக் கிடந்த வாகனத்தை மாற்றுவீர்கள். புது வேலைக்கு முயற்சி செய்தீர்களே! நல்ல பதில் வரும். உங்கள் ரசனைக் கேற்ப நல்ல வீடு அமையும். என்றாலும் இக்காலக்கட்டங்களில் பூரம் நட்சத்திரக்காரர்களுக்கு வீண் பழி, வதந்திகள், அசதி, காரியத் தாமதம் வந்து செல்லும்.

(தொடரும்)

# பெண்மை இன்றி அமையாது உலகு



எஸ்.மல்லிகா

அறிவின் ஊற்றாகவும் ஆற்றலின் இருப்பிடமாகவும் திகழ்பவர்கள் பெண்கள். ஆதலால், உலகம் பூராவும் அவர்கள் பல்வேறு துறைகளிலும் தடம்பதித்துத் தமது திறமைகளை நிலைநாட்டி வருகின்றனர். இருந்தபோதிலும், ஆணாதிக்கத்தின் அதிகார வெறிகளுக்கும், காமலீலைகளுக்கும் இன்னமும் அவர்கள் இரையாகிக்கொண்டுதான் வருகின்றனர். இதற்கு எதிராக அனைத்துப் பெண்களும் கிளர்ந்தெழுந்து போராடிச் சமவுரிமையைப் பெறும் வரை அவர்களுக்கான விடுதலையில் அர்த்தம் இல்லை.

**பெண் என்றால் மென்மையா?**
பெண்ணாகப் பிறந்தவள் பெண் என்ற அளவில் வரையறை செய்யப்பட்டால், அதில் சிக்கல் எதுவும் இல்லை. இது ஒரு பால் சார்ந்த விதமாக மட்டுமே அமையும். ஆனால், பெண்ணினம் இன்று அவ்வாறு அடையாளப்படுத்தப்படவில்லை. பெண் என்றால் மென்மை, அழகு, சுகம், வலிமையற்ற தன்மை, அடக்கம், பொறுமை, தியாகச் சிகரம் போன்ற கற்பிதங்களைச் சமூகம் கூறுகின்றது. இப்படிப்பட்ட மன விம்பங்கள் யாரால், எப்படி தோற்றுவிக்கப்பட்டன என்பது தனிப் பெரும் ஆய்வுக்குரிய பகுதி. ஏனென்றால், பண்டைய சமூகம் தாய்வழிச் சமூகமாக இருந்ததுடன், அவர்கள் மிகச் சிறப்பான முறையில் நிர்வாகக் கட்டமைப்புக்களையும் கொண்டிருந்தனர்.
ஆண்களை விடப் பெண்களே அதிக சக்தி படைத்தவர்கள் என்று விஞ்ஞானிகளும் நிரூபித்துள்ளனர். இயல்பாகவே பெண்களிடம் மனோ பலமும் உடல் பலமும் இருக்கின்றன. இவர்களுக்குத் [illegible] அதிகம் என்கிறது [illegible] இரும்புப் பெண்மணிகள் என்று வரலாற்றில் தடம் பதித்த அன்னை இந்திரா காந்தி, மாக்கிரட் தட்சர் போன்றவர்கள் ஆண்களைக் காட்டிலும் மிகச்சிறப்பாக வீட்டையும் நாட்டையும் கட்டிக் காத்து ஆண்டவர்கள்.
ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றைச் சற்றுப் பின்னோக்கிப் பார்த்தால், போர்க்களத்தில் ஆண்கள் செய்த அத்தனை செயல்களையும் பெண்களும் செய்து சாதித்திருக்கின்றமை வெள்ளிடைமலை. அநேக களமுனைகளில் பெண்களே தனித்துச் சமராடி வெற்றி வாகை சூடியிருக்கின்றனர். கருப்பைகளில் இருந்தபோதே நெருப்புப் பிளம்புகளாக ஜொலித்த இவர்கள், நீந்திய [illegible] கொஞ்சமல்ல.
இவ்வாறு மண்ணில் மட்டுமல்ல, விண்ணிலும் வியத்தகு சாதனைகளைப் பெண்கள் புரிந்து வருகின்றனர். இதயத்திற்குச் சோறிடும் இலக்கியப் பணியானாலும் சரி, சமூகப் பணியானாலும் சரி, வீட்டு நிர்வாகம் என்றாலும் சரி, அலுவலகக் கடமைகள் என்றாலும் சரி- அங்கெல்லாம் பெண்கள் சிறப்பாக மிளிர்வதைக் காணமுடிகிறது. இவர்களா மென்மையானவர்கள்?

**மார்ச் -8 பெண்கள் தினம் எப்படி வந்தது?**
ஒவ்வொரு வருடமும் மார்ச்-8ஆம் திகதியை மகளிர் தினமாக நாம் கொண்டாடி வருகின்றோம். வீட்டிற்குள்ளேயே முடங்கிக் கொண்டு- முனகிக் கொண்டு இருந்த பெண்கள் சமுதாயம் இன்று வானில் பறந்து கொண்டிருக்கிறது.
இதற்குக் காரணம்- பூவையர் என்று கவிகளால் வர்ணிக்கப்படும் பெண்கள், புயலாக வீறு கொண்டெழுந்து தமது சமவுரிமைக்காகப் போராடியமையே ஆகும். இந்தப் பெண் கள் தினம் மலர வித்திட்டவர்கள் உழைக்கும் பெண் வர்க்கம் தான் என்பது தங்க முலாம் பூசப்படாத உண்மை. பொருளாதாரத்தில், உரிமையில், சமூக அமைப்பு என்று பல வகைகளில் ஆண்களுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கும் பெண்களுக்குத் தன்னம்பிக்கை ஊட்டவும் அவர்கள் ஆண்களுக்கு எந்தவிதத்திலும் சளைத்தவர்கள் அல்லர் என்ற நிலையை உருவாக்கவும் வருடந்தோறும் பெண்கள் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்த விடுதலையை நாம் அடைவதற்கு வித்திட்ட பாட்டாளி வர்க்கப் பெண்களை நெஞ்சில் நினைந்து- அவர்கள் கண்ட கனவுகளுக்கும் சேர்த்து அனைத்துப் பெண்களும் உழைக்க வேண்டும்.
முதன் முதலில் 1909இல் பெண்கள் உரிமைக்காகக் குரல் கொடுக்கப்பட்டது. அமெரிக்காவில் சோசலிசக் கட்சி கொண்டு வந்த தீர்மானத்தை நாடாளுமன்றம் ஏற்று, தேசிய பெண்கள் தினம் கடைப்பிடிக்க முடிவு செய்யப்பட்டது. அதன்படி பெப்ரவரி 28ஆம் திகதி தேசிய பெண்கள் தினமாகக் கொண்டாடத் தீர்மானிக்கப் பட்டது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நெடுந்தீவின் தேவைகளை நிறைவேற்றுமா ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்?

வந்தியத்தேவர்

கடந்த வாரம் கூடிய நெடுந்தீவு பிரதேச சபையின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் சில முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அரசியலிலும் சரி, அரசியல்வாதிகளும் சரி மக்களின் தேவைகளை. இது இன்றி யமையாத தேவை என்றெல்லாம் ஏற்றுக் கொள்வதும், உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும் சகஜம்தான். எனினும் அவை அடுத்த கணத்தில் மறக்கப்பட்டுவிடும் என்பது தான் நிஜம். எத்தனையோ வாக்குறுதிகள் இப்போது வற்றிப்போன நீரோடைகளாக வறண்டு போய்விட்டன. நெடுந்தீவு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பிரேரணை வடிவில் முன்வைக்கப்பட்டவைஎல்லாமே பெரும்பாலும் நெடுந்தீவின் குறைகள் என்ற வரையில் வெளியானவைகளே. அப்போதெல்லாம் அவற்றைக் கண்டு கொள்ளாத அரசியல்வாதிகள், நெடுந்தீவு மண்ணில் கால்பதித்ததும் நெடுந்தீவின் தேவைகளை நிறைவேற்றி விட்டுத்தான் மறுவேலை என்ற ஆக்ரோஷத்துடன் காணப்படுவார்கள்.

எங்களுக்கு விடிவு கிடைத்து விட்டது என்ற கனவுக்குள் மக்களை மிதக்கவைத்துக் கூட்டத்தை நிறைவு செய்த வெற்றிப் பெருமிதத்தில் அரசியல்வாதிகள் படகில் ஏறிக் கொள்வார்கள்.

நெடுந்தீவின் முக்கிய பிரச்சினைகளில் ஒன்று, மாவிலித் த்துறைமுகம். அது கடந்த பத்து வருடங்களாகக் கடற்படையின் ஆதிக்கத்தில் உள்ளது. அவர்களின் ஆதிக்கத்தில் மக்கள் படும் துன்பங்கள், படகுகளில் ஏறி இறங்குவதில் உள்ள இடர்கள், தென் பகுதி மக்களுக்கு வழங்கப்படும் முன்னுரிமைகள் பற்றியெல்லாம் குறிப்பிட முடியும். துறைமுகத்தை முன்னர்போல் மக்கள் சுதந்திரமாகப் பார்க்கும் இடமாகவே கொள்ள வேண்டும். அதற்காக கடற்படை யினரை அங்கிருந்து அகற்ற வேண்டும் எனஅடிக்கடி செய்திகள் வெளிவந்த வண்ணமே இருந்தன. சைபீரியத் தாராக்கள்போல, பருவத்துக்குப் பருவம் போல, நெடுந்தீவை தங்கள் நலன்கருதி எட்டிப்பார்க்கும் அரசியல்வாதிகளும், கடற்படையின் நடவடிக்கைகளை நன்கு தெரிந்திருந்தும் மௌனத்தில் வாழும் மனிதர்களாகக் காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கின்றனர். அங்கு வந்த வடக்கு மாகாண முதல்வர், மாகாணசபைஉறுப்பினர்கள் அனைவருமே உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மார் தட்டிச் சென்றார்கள். ஆற்றைக் கடந்தவுடன் அனைத்தையுமே மறந்து விட்டார்கள். இப்போது மீண்டும், மாவிலித்துறைமுகப் பாலம் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, எஸ்.சிறிதரன், இ.அங்கஜன் ஆகியோர் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடனும் கடற்படை அதிகாரிகளுடனும் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்துள்ளனர். உரிய நடவடிக்கை என்பது கடற்படையினர் அந்தப் பிரதேசத்தை விட்டு வெளியேற்றப்படுவதாகவே பொருள் என்பதுதான் நெடுந்தீவு மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. நடவடிக்கைகள் இழுத்தடிப்பாக அமையக்கூடாது.

இன்றைய அரசு, தமிழ் மக்களுடன் நியாயமாக நடந்து கொள்ள உடன்பாடு கொண்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒப்புக் கொள்கிறார்கள். அது உண்மையெனில், கடற்படையின் வெளியேற்றம் துறைமுகத்தில் இடம்பெற்றாக வேண்டும். தங்களது துறைமுகத்தில் சுதந்திரமான பயணங்களை மேற்கொள்வதே நெடுந்தீவு மக்களின் அபிலாசையாகும். அதுநிறைவேற்றப்பட வேண்டும். நிரந்தர வைத்திய அதிகாரி குறித்துப் பேசப்பட்டது. பல்வேறு கஷ்டங்கள் காரணமாக வெளியிடங்களைச் சேர்ந்த வைத்தியர்கள் நெடுந்தீவுக்கு வரப் பின்னடிக்கிறார்கள். நெடுந்தீவைச் சேர்ந்த வைத்தியர்களே நெடுந்தீவில் பணிபுரிய இஷ்டமில்லாதபோது வேறு இடங்களைச் சேர்ந்தவர்கள் பின்னடிப்பது குறித்து என்ன கூறமுடியும்? நெடுந்தீவைச் சேர்ந்த வைத்தியர்களின் பட்டியலைத் தாருங்கள். அவர்களிடமும் கேட்டுப் பார்ப்போம் என்கிறார் மாவை சேனாதிராசா. நியாயமான வருத்தம் அது.

நெடுந்தீவு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஐந்து வருடங்களின் பின்னர் கடந்த மார்ச் 3 ஆம் திகதி கூட்டப்பட்டுள்ளது. பிரதேச செயலர் எஸ்.ஜெயகாந்த் நெடுந்தீவின் முக்கிய தேவைகள் குறித்துத் தெளிவுபடுத்தியிருந்தார். நெடுந்தீவில் உள்ள பாடசாலை மாணவர்கள் சுமார் 900 பேரில் 400 பேர் போசாக்கற்றவர்களாகக் காணப்படுவதாக வெளியான தகவல்கள் குறித்து கோட்டக்கல்வி அதிகாரி திருமதி சாரதா கிருஷ்ணதாஸ் குறிப்பிட்டிருந்தார். காரணம் போதிய கடல் உணவுகள் கிடைப்பதில்லை என்று கூறப்பட்டது. இங்குள்ள மீனவர்கள் தாம் பிடிக்கும் மீன்களை வெளியிடங்களைச் சேர்ந்தவர்களே உண்ண வேண்டும் என்ற சிந்தனையுடனேயே செயற்படுவதாகவும் குற்றம் சாட்டப்படுகிறது. நெடுந்தீவில் ஐந்து மீன்பிடிச் சங்கங்கள், ஒரு சமாசம் என்பவை உள்ளன. ஆனால், நெடுந்தீவுமக்களுக்குக் கிடைப்பதோ தரம் குறைந்த சூடை, கௌிறு போன்ற மீன்களே. மீனவர்களுக்கு வேண்டிய நிவாரணங்கள், மானிய உதவிகள் வழங்கப்படுகின்றன. வலைகள் போன்ற கடற்றொழில் உபகரணங்களில் குறிப்பிட்ட இரண்டு வகை மீன்கள் அல்லது தரம் குறைந்த மீன்கள்தான் சிக்கிக் கொள்ளுமா? என்பதே மக்களின் கேள்வியாக உள்ளது. நடுக்கடலில் வைத்தே நல்ல ரக மீன்கள் வியாபாரிகளிடம் கையளிக்கப்பட்டு விடுவதாகத் தகவல்களும் உண்டு. ஒவ்வொரு மீன்பிடிச் சங்கமும் தினமும் 25 கிலோ மீன்களை நெடுந்தீவுக்கு வழங்க வேண்டும் என இந்தக் கூட்டம் தீர்மானம்போட்டுள்ளது. இதனால் என்ன பயன்? எமக்குப் பட்டது சூடையும் கௌிறும்தான் என்று அவற்றையே சந்தையில் போட்டுவிட்டுப் போய்க் கொண்டிருக்கலாம். தரமான மீன்கள் நடுக்கடலில் இறங்கிக் கொள்ள இதில் என்ன தடை உண்டு?

விவசாயம், கமநல அபிவிருத்திகள், தொடர்பில் கடந்த ஆண்டில் எந்தத் திட்டமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இந்தமுறை ஒரு குளம் புனரமைக்கப்படவுள்ளதாகத் தெரிகின்றது. நெடுந்தீவில் பெரிதும் சிறிதுமாக சுமார் 80 குளங்கள் உள்ளதாகக் கூறப்படுகின்றது. இவற்றில் 8 குளங்களையாவது மழைநீரைச்சேமிக்கக் கூடியதாக புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கலாம். விவசாய சங்கங்கள் உள்ளதாகவும், உழவு இயந்திரங்கள் கூட வழங்கப்பட்டதாகவும் கதைக்கப்பட்டது. ஆனால் விவசாய சங்கங்களின் பிரதிநிதிஎன்று ஒருவர்கூட அங்குசமுகமளித்திருக்கவில்லை. இது சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளுக்கு ஆறுதலான ஒருவிடயமாக இருந்திருக்கும். ஏனெனில் கூட்டத்தில் கலந்துகொண்ட திணைக்களத் தலைவர்களோ, அதிகாரிகளோ, தாங்கள் சம்பந்தப்பட்ட செயற்றிட்டங்களையோ, மேற்கொண்ட நடவடிக்கைகளையோ, பற்றி உரிய விளக்கமளிக்க முடியாமல் திக்குமுக்காடிக் கொண்டிருந்ததைக் காண முடிந்தது. உள்ளூரில் உற்பத்தியாகக் கூடிய பனை தென்னைப் பயன்பாடுகள் போதிய அளவு காணப்படவில்லை. நெடுந்தீவு துறைமுகப் பகுதியில் உள்ள பனை சார் உற்பத்திப் பொருள்கள் விற்பனை தொடர்பில் அவை வெளியிடங்களில் இருந்து கொண்டு வரப்பட்டவை என்ற செய்திகள் தாராளமாகக் கூறப்பட்டன.

சாராப்பிட்டியில் உள்ள இரண்டு குடிதண்ணீர்க் கிணறுகளும் பிரதேச சபையால் நீர்வடிகாலமைப்புச் சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளன. கடற்படையினர் ஒரு குறிக்கப்பட்ட அளவுக்குமேல் அவற்றில் நீர் எடுக்காதுவிட்டால், அந்தப் பகுதியில் நீர் பாதுகாக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். அதற்குரிய நடவடிக்கை எடுப்பது நீர் வடிகால் அபிவிருத்திச் சபையே. அதைச் சபை நிறைவேற்ற வேண்டும். இப்போது கடல் நீரை நன்னீராக்கி மக்களுக்கு வழங்கும் திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகின்றது. வடதாரகை அம்புலன்ஸ் படகுகளை உரிய திணைக்களங்களிடம் ஒப்படைத்தல், தடுப்பணைகள், வீதி புனரமைப்பு, மின் விநியோகம், சுகாதாரம், கல்வி, வனஜீவராசிகள் என்று ஏகப்பட்ட விடயங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. நிலப்பூச்சி குறித்த விடயங்கள் கூறப்பட்டாலும், அவை கணக்கில் எடுக்கப்பட்டதாக இல்லை. பிரதான வீதியே வைத்தியசாலையில் இருந்து மேற்கு வரை மிகவும் மோசமாகக் காணப்படுகின்றது. நெடுந்தீவு அபிவிருத்திக்கென நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுமுள்ளன. எனினும் அவை உரிய முறையில் பயன் படுத்தப்பட்டுள்ளனவா என்பது புதிராகவே உள்ளது. ஒருங்கிணைப்புக் குழு பிரதேச செயலகம் வழங்கிய கலந்துரையாடப்பட வேண்டிய விடயங்கள் எனக் குறிப்பிட்டுத் தமக்குத் தரப்பட்ட அனைத்து விடயங்கள் குறித்துக் கலந்துரையாடி விட்டோம் என்ற நிலையுடன் நின்று விடாது குறிப்பிடப்பட்ட முக்கிய விடயங்களையாவது துரிதமாக நிறைவேற்ற முன்வரவேண்டும். இது முள்ளில்போட்ட சேலை. மெதுவாகத்தான் எடுக்க வேண்டும் என்று காலத்தை இழுத்தடிக்காது முக்கியமான விடயங்களுக்குத் தீர்வு கண்டு மூன்று மாதங்களின் பின்னர் இடம்பெறப்போகும் அடுத்த ஒருங் கிணைப்புக்குழுக் கூட்டம் எமது தேவைகளை நிறைவேற்றக்கூடியதாக அமையும் என் பதை நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவும் ஏனைய உறுப்பினர்களும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

> நெடுந்தீவு அபிவிருத்திக்கென நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுமுள்ளன. எனினும் அவை உரிய முறையில் பயன் படுத்தப்பட்டுள்ளதா என்பது புதிராகவே உள்ளது. ஒருங்கிணைப்புக் குழு பிரதேச செயலகம் வழங்கிய கலந்துரையாடப்பட வேண்டிய விடயங்கள் எனக் குறிப்பிட்டுத் தந்த அனைத்து விடயங்களையும் கலந்துரையாடி விட்டோம் என்ற நிலையுடன் நின்று விடாது குறிப்பிடப்பட்ட முக்கிய விடயங்களையாவது துரிதமாக நிறைவேற்ற முன்வரவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# ஐந்திணை அறிவு



பசுமைப் பாடசாலையின் குழந்தைகளுக்கு இந்த முறை ஐந்திணைப் பாடம். பாடங்களை நேரடியாகக் களத்தில் கற்றுக்கொள்வதுதானே அவர்களுடைய வழக்கம். அவர்கள் அனைவரும் ஒரு பாதையில் நடந்து சென்றுகொண்டிருந்தனர். வழியில் உதிர்ந்து கிடந்த, யானைத் தந்த நிற மரமல்லிப் பூக்களை எடுத்து முகர்ந்து கொண்டே போனார்கள். குட்டி நாதஸ்வரம் போன்றிருந்த அந்தப் பூவிலிருந்து நறுமணம் வந்தது. அப்போது

"டிட் யு டு யிட்... டிட் யு டு யிட்..."

ஆள்காட்டிப் பறவை ஒன்று கத்தியது. "இந்தப் பறவை அந்நியர்களைப் பார்த்துவிட்டால், இப்படித்தான் கத்தும். இதனால்தான் இதை ஆள் காட்டும் பறவை என்ற பொருளில், இப்படி அழைக்கிறார்கள்"என்று சொன்னான் நவீனன்.

எழிலி என்ற சிறுமிக்கு அந்தப் பறவையைப் பற்றிய ஒரு நாட்டுபுறப் பாடல்கூட தெரியும். அதை அவள் பாடிக் காட்டினாள்.

"ஆக்காட்டி ஆக்காட்டி அழகியம்மா ஆக்காட்டி
எங்கெங்கே கூடு கட்டி எத்தினி மொட்டு வச்சே?..."

அந்தப் பாடலைக் கேட்டதும் ஆள்காட்டிப் பறவைக்கு, அந்தக் குழந்தைகள் தனது நண்பர்கள் என்பது புரிந்தது. அது பதில் பாட்டைப் பாடிக்கொண்டே குழந்தைகளுக்கு அருகில் வந்தது.

"ஆத்தோரம் குழிப்பறிச்சு, கரையோரம் கால்பாத்து
கல்லைப் போல, நான் போட்ட நல்ல மொட்டு நாலல்லவோ"

தரையில் இறங்கும்போது ஆள்காட்டிப் பறவை விமானம் தரையில் இறங்குவதுபோல் சிறிது தொலைவுக்கு ஓடிவந்து பிறகே நின்றது.

"நலமா குழந்தைகளே? எங்கே இந்தப் பக்கம்?'"

"நாங்கள் ஐந்திணைப் பாடம் படிக்க வந்தோம்"

"ஐந்திணை என்றால் என்ன, சொல்லுங்கள் பார்ப்போம்?" ஆள்காட்டியின் கேள்விக்குப் பதில் சொன்னாள் எழிலி.

"மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி. காடும் காடு சார்ந்த இடமும் முல்லை. வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம். கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல். மணலும் மணல் சார்ந்த இடமும் பாலை."

"நீங்கள் சொல்வது எல்லாம் உங்கள் புத்தகத்தில் இருப்பது. ஐந்திணையின் இப்போதைய உண்மை நிலையை நேரில் போய்ப் பாருங்கள், ஏமாந்து போவீர்கள்! அந்த அளவுக்கு மனிதர்களின் பேராசை இந்த நிலங்களைக் கெடுத்து வைத்துள்ளது."

"கொஞ்சம் தெளிவாகச் சொல்லு ஆள்காட்டி" என்றார்கள்.

"நான் சொல்வதைவிட ஒவ்வொரு திணைக்கு உரிய பூவும், உங்களுக்கு அந்தந்தத் திணையின் கதையைச் சொல்லும்."

"ஆள்காட்டியே! அந்நியர்களைப் பார்த்தால் கத்தி எச்சரிக்கிறாயே! மனிதர்கள் அழிக்க வந்தபோது, இப்படி எச்சரித்து ஐந்திணைகளையும் நீ காப்பாற்றி இருக்கலாமே?"


"யார் நானா? என் வாழ்வைக் காப்பாற்றிக் கொள்வதே பெரும்பாடாக உள்ளது. நீங்கள் உங்கள் வாழ்வைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமானால், உடனே ஐந்திணைகளையும் காப்பாற்றப் பாருங்கள்.'"இப்படிச் சொல்லிவிட்டு ஆள்காட்டி பறந்தது.



உதயன்
சிறுவர் பகுதியில் 'வர்ணம் தீட்டுவோம் வாங்க' என்ற தலைப்பில் வெளியிடப்படும் சித்திரங்களை, சிறுவர்கள் பலர் ஆர்வத்துடன் வர்ணம் தீட்டி அவற்றை எமக்கு அனுப்பியும் வைத்து வருகின்றனர். அவர்களுக்கு உற்சாகமூட்டும் வகையில் கச்சிதமான விதத்தில் வர்ணம் தீட்டப்படும் சித்திரங்கள் இந்தப் பகுதியில் வெளியிடப்படும்.

அமிர்தலிங்கம் யதுராஷன்,
தரம் 9 D
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி,

# வர்ணம் தீட்டுவோம் வாங்க....



# வரலாற்றில் இன்றைய தினம்

222 - பேரரசர் இலகபலஸ், அவருடைய தாயார் யூலியா சோமியாஸுடன் சேர்த்து பிறிரோறியா பாதுகாப்புத் தரப்பினரால் புரட்சி ஒன்றின்போது கொல்லப்பட்டார். அவர்களது உருக்குலைந்த சடலங்கள் வீதி வழியே இழுத்துச் செல்லப்பட்டு டைபரினுள் வீசப்பட்டன.

1824 - அமெரிக்க போர்த் திணைக்களத்தால் இந்திய விவகார சபை அமைக்கப்பட்டது.

1848 - லூயிஸ் ஹிப்போலிறா லபன்ரைன் மற்றும் றொபேர்ட் போல்ட்வின் ஆகியோர் கனடாவின் மாகாணப் பிரதம மந்திரிகளாக பொறுப்பு வாய்ந்த அரச முறைமை மூலம் ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

1864 - மாபெரும் ஷீபில்ட் வெள்ளத்தில் இங்கிலாந்து ஷீபில்டில் 238 பேர் சாவு.

1903 - காங்கேசன்துறைக்கும் - சாவகச்சேரிக்கும் இடையிலான ரயில் சேவை முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது.

1917 - முதலாம் உலக மகா யுத்தம். ஜெனரல் ஸ்டான்லி மவுட்டின் வழி நடத்தலினாலான ஆங்கிலோ - இந்தியன் படையினரிடம் பாக்தாத் வீழ்ந்தது.

1918 - உலக ரீதியில் கொள்ளை நோயாகப் பரவிய 'ஸ்பனிஷ் பப்ளு' காய்ச்சலின் முதல் நோயாளி இனம்காணப்பட்டார்.

1927 - நியூயோர்க் நகரில் சாமுவல் றொக்ஸி திரையரங்கு நிறுவப்பட்டது.

1941 - இரண்டாம் உலக மகாயுத்தம். அமெரிக்க ஜனாதிபதி பிராங்ளின் டி றூஸ்வெல்ற் - நேச நாடுகளுக்கு இடையில் கடன் - குத்தகைச் சட்டம் ஒப்பமிடப்பட்டது.

1945 - பாடேயேயை ஆட்சியாளராகக் கொண்ட சொற்ப ஆயுளுடனான ஜப்பானிய பொம்மை ஆட்சியான வியட்நாம் ஆட்சி உருவாக்கப்பட்டது.

1978 - இஸ்ரேலிய பஸ் ஒன்று பாத்தா இயக்கத்தினரால் கடத்தப்பட்ட வேளை இஸ்ரேல் உடனடியாக மேற்கொண்ட 'லிதானி ஒப்பரேசன்' எனும் பெயரிலான நடவடிக்கையின்போது 37 பேர் வரை சாவு. 70 பேர் காயம்.

1983 - அணு ஆயுதப் பரிசோதனை ஒன்றை பாகிஸ்தான் வெற்றிகரமாக மேற்கொண்டது.

1990 - சோவியத் ஒன்றியத்திலிருந்து சுதந்திரம் பெற்றுள்ளதாக லித்துவேனியா சுயமாக அறிவித்தது.

2004 - ஜனசந்தடி நிறைந்த வேளையில் ஸ்பெயின் மட்றிட்டில் இடம்பெற்ற புகையிரத தொடர்குண்டு வெடிப்பில் 191 பேர் சாவு.

2006 - சிலியின் முதல் பெண் ஜனாதிபதியாக மைக்கல் பாச்லெற் நியமனம் 9.0 மக்னிரியூட் அளவிலான பூகம்பத்தால் ஏற்பட்ட சுனாமியால் ஆயிரக் கணக்கானோர் சாவு. இந்தச் சம்பவத்தில் மிக மோசமான அணு விபத்தும் ஏற்பட்டது.

2008 - ஊடக அடக்கு முறைக்கு எதிராக ரூபவாஹினிக்கு முன்பாக ஆர்ப்பாட்டம்; நூற்றுக் கணக்கில் ஊடகவியலாளர்கள் திரள்வு.

2012 - ஆப்கானிஸ்தான் பான்வாயி மாகாணத்தில் அமெரிக்கப் படை வீரர்களால் 16 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலும் கடமையும், இறைவனின் வரங்கள்

சாம் ரமேஸ்குமார்



மனிதர்கள் வாழும் இந்த உலகை இரண்டே இரண்டு விடயங்கள்தான் மிகவும் துடிப்புடன் இயங்க வைக்கின்றன. ஒன்று மனிதர்களுக்கு இடையிலான புரிந்துணர்வுடன் கூடிய காதல். இன்னொன்று ஒவ்வொரு தனி மனிதனும் கடினமாகச் செய்ய வேண்டிய அவரவரது கடமை. காதல் மனித இனத்தை விருத்தியடையச் செய்கின்றது. கடமை மனித வாழ்வையும் உலகையும் அபிவிருத்தியடையச் செய்கின்றது. இவை இரண்டும் இல்லையென்றால் உலகம் பிரமாண்டமான மயானமாய்த்தான் காட்சியளிக்கும்.

காதலும் கடமையும் மனிதனுக்கு இறைவன் கொடுத்த வரங்களாகும். இயற்கையின் சுமுகமான மற்றும் இயல்பான இயக்கத்துக்கு அடிப்படையே காதலும், மனிதக் கடமையும்தான். வருடங்களுக்குள் மாதங்களும், மாதங்களுக்குள் வாரங்களும், வாரங்களுக்குள் நாள்களும், நாள்களுக்குள் நேரங்களும் அமைவதுபோல் குறிப்பாக மனிதக் காதலை விட, மனிதனின் சிரத்தையான கடமையுணர்வுக்குள்தான் அனைத்து இறை தர்மங்களும் பரிபூரணமாக அடங்கி விடுகின்றது எனலாம்.

தர்ம நெறியிலான புனிதக் கடமைகள், ஓர் இறை சாதனையாகும். அவை, மனிதனைச் சுற்றி எந்த நேரமும் நிழல்போல் பின் தொடரும். கர்ம வினைகளை அழிக்கும் திறன் இந்த மனிதக் கடமைகளுக்கு எப்போதும் உண்டு. மனிதர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்குப் பணிக்கப்பட்டுள்ள கடமைகளை விருப்பு வெறுப்பு அற்று இறைவனுக்காக செய்கின்றபோது, அது மிகப்பெரும் பலம் வாய்ந்த கடமையாக மாற்றமடைந்து பலருக்கும் நன்மையளிக்கின்றது.

இதற்குச் சிறந்த உதாரணமாக மனிதர்களுக்கு ஒத்தாசையையும், பட்டறிவையும் வழங்கிக் கொண்டிருக்கும் இயற்கையை எடுத்துக் கொள்ளலாம். பூமி, சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் அனைத்துமே விருப்பு வெறுப்பு அற்று எந்த எதிர்பார்ப்பும் இல்லாது தங்களுக்கு இறைவனால் நிச்சயிக்கப்பட்டுள்ள கடமையைச் சிரவரச் செய்கின்றன. கடமையுணர்வான இவற்றின் செயற்பாடுகளே இயற்கையின் அரணாகவும், உயிரோட்டமாகவும் என்றென்றும் காணப்படுகின்றன என்றால் அது மிகையாகாது.

மனிதர்கள் தங்களுக்குப் பணிக்கப்பட்டுள்ள கடமைகளைச் சீராகவும் சிறப்பாகவும் செய்கின்றபோது மனிதர்களைச் சுமந்து நிற்கும் இந்த உலகமானது நீடித்த அமைதியைப் பெறுகின்றது. ஒரு மனிதனே னும் சிறிதும் தனது கடமையிலிருந்து தவறினால் பதற்றமான வன்முறையான சூழலையே உலகம் சந்திக்கும். காரணம் மனிதர்கள் தாங்கள் செய்யும் கடமையின் பயனில், அதிகாரம் செலுத்த முற்படுவதுதான்.

அதனால்தான் கடமையைச் செய்; பயனை எதிர்பாராதே என்கிறார் பகவத்கீதையில் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா. அதாவது மனிதர்கள் தாம் செய்யும் கடமையில் மட்டும்தான் அதிகாரம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். தமது கடமைக்கான பயனில் அதிகாரம் கொண்டவர்களாக ஒருபோதும் இருக்க முடியாது. மனிதர்களின் கடமைக்கான பயனை விளைவிப்பதில் அதிகாரம் கொண்டவன் பிரபஞ்சத்தின் தலைவனான இறைவன் ஒருவனே ஆவான். அந்த இறைவனின் அதிகாரத்தில் தலையிடும் தகுதி இந்த உலகத்தில் எந்த மனிதனுக்கும் கிடையாது. ஒரு வேளை அப்படித் தலையிட்டால், தலையிடும் மனித ஆன்மா பாவியாக வேண்டிய நிலைதான் ஏற்படும்.

ஒவ்வொரு மனிதர்களும் தம் அகவுலக சுதந்திரத்தை அனுபவிக்கும் உரிமை உள்ளவர்களாகத்தான் இருக்கின்றார்கள். ஆனால், பற்றுடன் கூடிய கடமையைப் பின்பற்றுவதால் கர்ம வினையில் பந்தப்பட்டு அந்த உரிமையைத் தன்னிச்சையாகவே இழக்கின்றார்கள். கடமையின் பயனை இறைவனிடம் விட்டுவிடுவதே ஒவ்வொரு மனிதனும் தன் கடமைக்காகச் செய்யும் தர்மமாகும். இதுவே பிறப்பையும் சாவையும் கடப்பதற்கான வழியாகும். இதைத்தான் கீதை கர்மயோகமென மனித சமுதாயத்துக்கு மிக எளிதாகச் சுட்டிக் காட்டுகின்றது.

இருந்தும் மனித சமுதாயம் தனது சுயநலப் போக்கால் தனக்குப் பணிக்கப்பட்டுள்ள கடமையில் சிறு பயனைத்தானும் எதிர்பார்த்துக் காத்திருக்கத்தான் செய்கின்றது. இது மனிதர்களுடைய ஆன்மாவின் இயல்பல்ல. அவர்கள் மனதில் தோன்றும் ஆசைகளின் தாக்கமாகும். ஒரு மனிதனுக்கு விடுதலையையும் இந்த உலகில் பிறந்து மீண்டும் மீண்டும் தன் பாவங்களைக் கழிக்கும் பிறவி நோயையும் கொடுக்கக்கூடிய அதிவுயர்வான சூட்சுமத்தை மனிதக் கடமையே பெரிதும் கொண்டுள்ளது. கடமையே இறை தர்மமாகும். கடமையின்மை நரகரத்துக்கான சாவாகும். இதை ஒவ்வொரு மனிதர்களும் புரிந்து நடந்தால் மனிதக் கடமை மிகச் சுலபமாகும்.

பாவத்தின் சம்பளம் மரணம் என்கிறார் இயேசு கிறிஸ்து. தனக்கான கடமையிலிருந்து தவறுபவன் உலகத்துக்கும் தனக்கும் கேட்டை விளைவித்துக் கொள்கின்றான். கடமை என்பது தர்மம். அதிலிருந்து தவறி அதர்மத்துக்குள் உள்வாங்கப்படுகின்றான். அதர்ம காரியங்கள் ஒருபோதும் கடமையாகாது. அது மரணத்துக்கான பாவ வழியாகும். செய்ய வேண்டிய தர்மமான கடமைகளைச் செய்வதே மனித சமுதாயத்துக்கு என்றும் விதியை வெல்லும் கர்ம யோகமாகும்.

# எம்வாழ்வு முன்னுதாரணமாகட்டும்

'பாவமற்ற எனக்கே இந்த நிலையென்றால், தீமைகளில் அமிழ்ந்து நிலை தடுமாறி வழி தவறிச் சென்று கொண்டிருக்கும் உங்களுக்கும் உங்கள் சந்ததிக்கும் நிகழப் போவதை எண்ணிப் பாருங்கள். எனவே என் மட்டில் ஆறுதல் அடையுங்கள். உங்களுக்காகவே அழுங்கள்'. கல்வாரிப் பாதையிலே தம்மைப் பின் தொடர்ந்த அனுதாபிகளுக்கு இயேசு கூறிய வார்த்தைகள் இவை.

நாம் செய்யும் ஒவ்வொரு தவறும், முறைகேடுகளும் எம்மை மட்டுமன்றி பிறரையும் பாதிக்கின்றன. அத்துடன் பெரியோரை அடியொற்றிக் கற்றுக் கொள்ளும் சிறுவர்களும் பாவத்தின் தாக்கங்களை உணராத நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள். எனவே இவற்றிலிருந்து விடுபட்டு மனமாற்றம் பெற்றவர்களாக மூன்று காரணங்களால் வாழ முற்பட வேண்டுமென இந்த அறிவுரை உணர்த்துகின்றது. மனமாற்றம் பெறவும், அன்புசெய்யவும், மன்னிப்பு வழங்கவும் சமாதானத்தைப் பகிரவும் ஏற்புடைய காலம் இதுவே. இயேசுவுக்கு ஆறுதல் அளிக்க நாம் செய்ய வேண்டியதென்ன? பிறரை வசை பாடுவதை விடுத்து அனுசரித்துச் செல்வோம். அடாவடித்தனங்களை நிறுத்தி அணைத்து வாழ்வோம்.

நீதி, உரிமை, மறுக்கப்பட்டோருக்கும், ஏழைகள், சிறைப்பட்டோர். நோயாளிகள், தனிமையில் வாடுவோர் அனைவருக்கும் உதவிக்கரம் நீட்டுவோம். எமது கனிவான சொல், செயலால் உடைந்த உள்ளங்களை ஆற்றுப்படுத்துவோம். நல்ல முளைத்திறன் மிக்க நற்பண்பென்னும் தானியங்களை விதைத்து அன்பையும் அமைதியையும் அறுவடை செய்வோம். அதுவே எமக்கும் எமது சந்ததிக்கும் நாட்டுக்கும் நல் எதிர்காலத்தைத் தரும். மக்கள் எதிர்பார்க்கும் சமாதானம், சம உரிமை, நீதியான தீர்வை ஏற்படுத்த எமது நாட்டுத் தலைவர்கள் முன்னுதாரணம் உள்ள செயல்களை முன்னெடுக்கும் மனமாற்றத்தைப் பெற தொடரும் காலம் வழி சமைக்கட்டும்.




எஸ்.ஜேசுதாஸ், கொழும்புத்துறை.

# அப்பாவி மக்கள் மீது சுமை ஏற்றாதீர்

மகிந்த ஆட்சி கடன் வாங்கியே நாட்டை ஆண்டது. வாங்கிய கடனுக்கு வட்டியைக் கூடக் கட்ட முடியாத நிலையில் வட்டி கட்டவும் கடன் வாங்கப்பட்டது. மகிந்த ஆட்சி பெற்ற கடன் 9,500 பில்லியன் ரூபா என்று கூறப்படுகிறது. அரசுக்குக் கடன் கொடுத்த நிறுவனங்களிலிருந்து இன்னமும் அறிவிப்புகள் வந்துகொண்டிருப்பதால் இந்தத் தொகை 10 ஆயிரம் பில்லியனாக அதிகரிப்பதற்கான சாத்தியங்கள் உள்ளன.

கடன்களைக் கட்டமுடியாத நிலைமை ஏற்பட்டால் இலங்கை தோல்வி அடைந்த நாடுகள் பட்டியலில் இடம்பெற்றுவிடும் ஆபத்து உண்டு. இதிலிருந்து மீள்வதற்கு அரசு சில நடிவடிக்கைகளைச் செயற்படுத்தத் திட்டமிட்டுள்ளது. இவற்றில் இரண்டு நடவடிக்கைகள் முக்கியமானவை. ஒன்று சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன்பெறுவது. மற்றது வற்வரியை அதிகரிப்பது. சர்வதேசநாணய நிதியத்திடமிருந்து அரசு கடனாக 28,935 கோடி ரூபாவை எதிர்பார்த்தது. எனினும் 21,700 கோடி ரூபாவை பல தவணைகளில் இலங்கைக்கு வழங்க சர்வதேச நாணய நிதியம் உடன்பட்டிருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். வற்வரியை 15 சதவீதத்தினால் உயர்த்தவும் முடிவுசெய்யப்பட்டுள்ளது. வற்வரி உயரும் போது பொருள்களின் விலைகள் அதிகரிக்கும். இதனால் பாதிக்கப்படுவோர் சாதாரண பொது மக்கள்தான். அத்தியாவசியப் பொருள்களுக்கு இந்த வரி அதிகரிப்பு இருக்காது என்கிறார் பிரதமர். ஆனால் ஏதோ ஒரு விதத்தில் வற்வரி அதிகரிப்பு நாட்டு மக்களைப் பாதிக்கவே போகிறது. ஏற்கனவே பொருளாதாரச் சுமைகளுடன் வாழும் மக்களுக்கு இது மேலும் சுமையை ஏற்படுத்துமானால் நல்லாட்சிக்காகத் தேர்தலில் வாக்களித்த மக்களின் நம்பிக்கையை இந்த அரசு இழந்து போகலாம்.

நாட்டின் பொருளாதார வங்குரோத்து நிலையை குறிப்பிட்டு மகிந்த ஆதரவு அணியினர் வெளிநாடுகளில் பிரசாரம் ஆரம்பித்துள்ளனர். அரசாங்கத்தைக் கொண்டு நடத்த இயலாத நிலைமை ஆட்சியாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது என்றும், அரசு கவிழப்போகிறது என்றும் பிரசாரம் செய்கின்றனர். இன்றைய நிலைமைக்கு யார் காரணம் என்பதை இவர்கள் மறந்துவிடுகின்றனர்.

2014 ஒக்ரோபரில் உச்ச நிலையில் இருந்த இலங்கையின் அந்நியச் செலாவணிக் கையிருப்பு இவ்வருடம் ஜூலையில் 6.3 பில்லியன் அமெரிக்க டொலராகக் குறைந்தது. 2015 ஜனவரி மாதத்திலிருந்து வெளிச்செல்லும் அரசாங்க முறிகள் காரணமாக 1.3 பில்லியன் ரூபா குறைவடைந்தது. நாட்டின் பொருளாதாரம் நோயாளியாக மாறிவிட்டது. கசப்பான மருந்தை வழங்கியாவது அதனைக் குணப்படுத்தவேண்டும்- என்கிறார் பிரதமர். ஆனால் சாதாரண மக்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பாதிக்காத விதத்தில் அரசின் நடவடிக்கைகள் அமையவேண்டும்.




பொருளாதாரத்தில் அதலபாதாளத்தில் விழுந்திருக்கும் நாட்டை மீட்டெடுப்பது என்பது சுலபமான காரியமல்ல. மகிந்த அரசு அபிவிருத்தி என்று கூறியபோதிலும் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் விதத்தில் எதனையும் செய்யவில்லை. நாடு கடன் பொறிக்குள் சிக்கிக் கொண்டுள்ளது. பெற்ற கடனுக்கான வட்டியைக் கொடுக்க மீண்டும் கடன் எடுக்கிறார்கள் என்றால் அவர்களின் ஆட்சி எத்தகைய ஆட்சியாக இருக்கமுடியும்? கடந்த ஆட்சியாளர் புரிந்த தவறுகளை நிவர்த்திசெய்து நாட்டை அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச்செல்லும் பெரும் பொறுப்பு மைத்திரி-ரணில் அரசிடம் உள்ளது. ஆனால், ஏற்கனவே பொருளாதாரச் சுமை காரணமாக துன்பம் அனுபவிக்கும் மக்களுக்கு மேலும் சுமைகளைக் கொடுக்காது அரசு செயற்படவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மேடம்:** பிறர் உங்களை ஏளனம் செய்ய நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் பணிச் சுமை அதிகரிக்கும். இலாபம் சுமாராக இருக்கும். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை.

**இடபம்:** இஷ்ட தெய்வ அருள் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வியத்தகு முன்னேற்றம் உண்டாகும். இலாபம் கூடும். பெற்றோரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**மிதுனம்:** அளவுக்கு மீறி வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். குடும்பத்தினரின் பாசம் கண்டு மகிழ்வீர்கள். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**கடகம்:** கலையுணர்வுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் குறுக்கிடும் இடையூறை சரி செய்வது நல்லது. பெண்கள் வீட்டுச் செலவில் சிக்கனத்தை பின்பற்றுவர். வெளியூர் பயணத்தில் மாறுதல் ஏற்படும்.

**சிங்கம்:** தேவையற்ற விவாதத்தில் ஈடுபட வேண்டாம். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்ப்பு நிறைவேற தாமதம் ஏற்படலாம். உடல்நலத்தில் கூடுதல் கவனம் கொள்வது நல்லது.

**கன்னி:** வெகுநாள் எதிர்பார்த்த நற்செயல் இனிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் செய்து ஆதாயம் காண்பீர்கள். உறவினர் கேட்ட உதவியைச் செய்து மகிழ்வீர்கள்.

**துலாம்:** உறவினர்களின் ஆதரவு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை வந்து சேரும். மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பர்.

**விருச்சிகம்:** உங்களின் யதார்த்தமான பேச்சைப் பிறர் தவறாகப் புரிந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர். ஒவ்வாத உணவுகளைத் தவிர்க்கவும்.

**தனுசு:** நண்பர் மீதான நம்பிக்கை குறையும். தொழில், வியாபாரம் மந்த கதியில் இருக்கும். இலாபம் சுமார். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவது நல்லது. மாணவர்கள் தெரிவு நோக்கில் படிப்பர்.

**மகரம்:** பேச்சில் நிதானம் தேவை. தொழில், வியாபாரத்தில் சாதனை படைக்க முயல்வீர்கள். உத்தி யோகத்தில் உங்களை நம்பி மூத்த அதிகாரி சில பொறுப்புக்களை ஒப்படைப்பார். தைரியம் கூடும் நாள்.

**கும்பம்:** திறமைக்குரிய பாராட்டுக் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். ஒவ்வாத உணவை உண்பதைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும்.

**மீனம்:** எதிர்கால வளர்ச்சி குறித்து ஆலோசிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்திகரமாக இருக்கும். பெண்கள், வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பர்.



## சிறுமியின் திரைப் பயணம்

'சில்லுன்னு ஒரு காதல்' திரைப் படத்தில் சூர்யா மற்றும் ஜோதிகாவின் மகளாக நடித்துப் பிரபலமான குழந்தை நட்சத்திரமாகப் பேசப்பட்டவர் ஷ்ரியா ஷர்மா. இவர் தற்போது கதாநாயகியாக 'நிர்மலா கான்வென்ட்' எனும் தெலுங்குப் படத்தில் நடித்து வருகிறார். ஆறு வயதிலேயே ரசிகர்களது மனதைக் கொள்ளையடித்த ஷ்ரியா ஷர்மா, இப்போது நடிகையாக வலம் வரவுள்ளார்.

தற்போது ஷ்ரியா விளம்பரம் மற்றும் திரைத்துறையில் பணியாற்றி வருகிறார். ஆரம்பத்தில் விளம்பரங்களில் தோன்றிய ஷ்ரியா, சன்பீஸ்ட், லக்ஸ், காம்ப்ளேன், ரஸ்னா உள்ளிட்ட 30 க்கும் மேற்பட்ட விளம்பரங்களில் நடித்துள்ளதுடன், சில தொலைக்காட்சி நாடகங்களிலும், நிகழ்வுகளிலும் தோன்றியுள்ளார்.

2011 ஆம் ஆண்டு வெளிவந்த "சில்லர் பார்டி" எனும் ஹிந்தி திரைப்படத்துக்காகத் தேசிய விருது வென்றதுடன், ஸ்டார் பரிவார் விருது, இந்தியன் டெலி விருது, சிறந்த பெண் குழந்தைக் கலைஞர், இந்தியன் டெலிவின் அகா டமி விருது மற்றும் இரண்டு முறை சிறந்து குழந்தை நட்சத்திரம் ஆகிய விருகளை வென்ற ஷ்ரியா, இசைத் துறை சார்ந்த அல்பங்கள் மற்றும் ஹொலிவூட் திரைப் படங்களிலும் தோன்றியுள்ளார்.

**16 வயசுக்குக் கீழ் வேலைக்குப் போனா அப்பன் சரி இல்லை என அர்த்தம்**



**61 வயசுக்கு மேல் வேலைக்குப் போனா பிள்ளைகள் சரி இல்லை என அர்த்தம்**

**தி.மு.கவின் வெற்றிச் சத்தம் என் காதில் கேட்கிறது!**

-கருணாநிதி





**அவ்வளவு சத்தமாவா கேட்குது!**



**எங்கட ஊர்ச் செல்பி பிள்ள..**

பஸ் நிலையத்தில் அன்றொரு நாள்.

**மனைவி:** அங்கே பாருங்கோ...
அந்தப் பொண்ணு திடீர் எண்டு வலதுகையை நெஞ்சு கிட்ட வைச்சு இறுக்குது. வாய் ஒருபக்கம் கோணிப் போகுது இடது கை நீண்டு இழுத்துக்கிட்டே போகுது...
வலிப்பு வந்திருக்கும் எண்டு நினைக்கிறன்.
வாங்கோ உதவுவம்....

**கணவன்:** சும்மா இரும்... நீர் வேறை.
அந்தப் பெண் செல்பி எடுக்குது...



WhatsApp

**அழகி** @Lekhasri_g · Jan 16
**அடைக்கலம் தேடும் இடத்தில் தான் ஆபத்து அதிகமாக மறைந்திருக்கும்**
**ஆதலால் தேடுவதில் வேகமாக இருக்காதீர்கள் விவேகமாக இருங்கள்..!!!!**

**வேட்கை** @sureshhrithik · Jan 25
ஒரு சில காரியங்களில் முயற்சி எடுத்துத் தோல்வி அடைந்த போது, சில பேர், உனக்கு இதெல்லாம் தேவையா என்று கேட்கும் பொழுது தான் மனம் அதிகமாக வலிக்கிறது.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | 1 | 4 | | | | | 5 |
| | | | | 5 | | | 8 | |
| | | 3 | 9 | | 7 | 6 | | |
| | | | | | 1 | | | |
| | 9 | | 8 | | 6 | | | 3 |
| | | | | | | 8 | 2 | |
| | 6 | | | 4 | | 7 | | 8 |
| 3 | | | | | | | 9 | |
| | | | | 8 | 5 | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 1 | 2 | 5 | 6 | 7 | 8 | 4 | 3 |
| 3 | 7 | 6 | 1 | 4 | 8 | 2 | 5 | 9 |
| 5 | 8 | 4 | 9 | 3 | 2 | 1 | 6 | 7 |
| 8 | 2 | 9 | 7 | 5 | 6 | 3 | 1 | 4 |
| 7 | 4 | 3 | 2 | 8 | 1 | 5 | 9 | 6 |
| 6 | 5 | 1 | 4 | 9 | 3 | 7 | 8 | 2 |
| 4 | 3 | 7 | 8 | 1 | 9 | 6 | 2 | 5 |
| 2 | 9 | 8 | 6 | 7 | 5 | 4 | 3 | 1 |
| 1 | 6 | 5 | 3 | 2 | 4 | 9 | 7 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தட வைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது.

2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 25 | 40 | 40 | 40 | 40 | 20 | 20 | 25 |
| கத்தரி | 100 | 90 | 120 | 100 | 100 | 120 | 80 | 75 |
| கரட் | 100 | 120 | 100 | 120 | 100 | 200 | 80 | 130 |
| மரவள்ளி | 50 | 50 | 40 | 40 | 40 | 80 | 35 | 40 |
| பயிற்றை | 80 | 80 | 80 | 80 | 60 | 80 | 40 | 100 |
| பாகல் | 100 | 120 | 120 | 120 | 120 | 120 | 100 | 120 |
| கருணைக்கிழங்கு | 60 | 80 | 80 | 60 | 60 | – | 60 | 60 |
| பெ.வெங்காயம் | 60 | 80 | 70 | 80 | 70 | 80 | 65 | 60 |
| சி.வெங்காயம் | 50 | 60 | 70 | 60 | 80 | 100 | 75 | 60 |
| பூசணி | 70 | 50 | 60 | 50 | 40 | 40 | 40 | 40 |
| தக்காளி | 25 | 40 | 30 | 40 | 30 | 25 | 20 | 30 |
| வாழைக்காய் | 50 | 50 | 40 | 50 | 50 | 35 | 35 | 30 |
| கீரை | 25 | 50 | 30 | 20 | 30 | 15 | 15 | 25 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 35 | 20 | 20 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 120 | 160 | 140 | 140 | 120 | 200 | 130 | 180 |
| புடோல் | 50 | 80 | 60 | 40 | 50 | 40 | 30 | 40 |
| கோவா | 50 | 60 | 50 | 50 | 40 | 80 | 40 | 40 |
| வெண்டி | 70 | 50 | 50 | 70 | 100 | 80 | 70 | 80 |
| போஞ்சி | 90 | 120 | 80 | 120 | 120 | 160 | 40 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 100 | 140 | 120 | 40 | 70 | 100 |
| தேங்காய் | 40 | 40 | 50 | 50 | 40 | 50 | 35–50 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 40 | 70 | 80 | 70 | 70 | 65 | 120 |
| தேசிக்காய் | 60 | 50 | 80 | 60 | 60 | 40 | 90 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 15 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 100 | 120 | 120 | 120 | 140 | 150 | 100 | 130 |
| இராசவள்ளி | 150 | 150 | 120 | 120 | 140 | 200 | 100 | 70 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 200 | 300 | 400 | 200 | 300 | 250 |
| பனங்கிழங்கு | 05 | 02.50 | 05 | 02 | 05 | – | 02.50 | 03 |




## பட்டியுடன் சட்டை

பட்டியுடன் (பெல்ட்) சட்டை அறிமுகமாகியுள்ளது. 'நெற்' துணியில் மேல் பகுதியும், மிகவும் விரிவாகக் கீழ் பகுதியும் அமைந்துள்ளன். இதனை மேலும் மெருகேற்ற அகலமான இடுப்புப் பட்டியும் அறிமுகமாகியுள்ளது. இது 1,800 ரூபாவில் இருந்து 2,000 ரூபாவரை விற்பனை செய்யப்படுகிறது.



**நாளை**
மாசி-29
சனிக்கிழமை 12.03.2016
திதி: சதுர்த்தி மு.இ.11.10 வரை
நட்சத்திரம்: அச்சுவினி
மா.05.49 வரை
ராகுகாலம்: 09.22-10.52 வரை
சுபநேரம்: 03.22-04.52 வரை
சதுர்த்தி விரதம்



## கருப்பட்டிப் பணியாரம்

**தேவையானவை:**

பச்சரிசி – 1 கிலோ
கருப்பட்டி – 300 கிராம்
வெல்லம் – 300 கிராம்
நெய் – 2 கரண்டி
எண்ணெய் – தேவையான அளவு

**செய்முறை:**

பச்சரியை ஊற வைத்து, இரண்டு மணி நேரம் கழித்து, நிழலில் காயவைத்து ஈரப் பதத்துடன் அரைத்து அரிதட்டால் அரித்து எடுத்துக் கொள்ளவும்.

மாவை அரைத்தவுடனே செய்யக் கூடாது. எனவே, மாவை ஓரிரு நாள்கள் முன்னதாகவே அரைத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

ஒரு பாத்திரத்தில் வெல்லம், கருப்பட்டியைப் பொடியாக்கிப் போட்டு சிறிது தண்ணீர் ஊற்றி அடுப்பில் சூடேற்றவும். வெல்லமும், கருப்பட்டியும் கரைந்ததும் வடிகட்டி, மீண்டும் அடுப்பில் வைத்து பாகுபதத்தில் இறக்கிக் கொள்ளவும்.

பின்னர், அரித்து வைத்துள்ள மாவில் பாகை ஊற்றி நன்றாகக் கலந்து கொள்ள வும். அதன்பின்னர் நெய் தடவி மூடி வைக்கவும்.

பணியாரம் செய்யும்போது மாவில் கொஞ்சம் கொஞ்சமாக தண்ணீர் ஊற்றி தோசைமாப் பதத்துக்குக் கரைத்துக் கொள்ளவும்.

அடுப்பில் இருப்புச் சட்டியை வைத்து எண்ணெய் ஊற்றவும். எண்ணெய் காய்ந்ததும், அகலமான கரண்டியால் ஒவ்வொன்றாக ஊற்றவும். ஒரு புறம் வெந்து உப்பி வந்ததும், மறுபுறம் திருப்பிப் போடவும். பொன்னிறமாக வெந்ததும், எடுத்து ஒரு தட்டில் வைத்து நன்றாக எண்ணெய் வடிந்ததும், பாத்திரத்தில் எடுத்து வைக்கவும்.

## சமையல் குறிப்புகள்

- வெங்காயம் அல்லது அசைவம் சமைத்த பின்னர், எமது கைகள் மற்றும் நறுக்கப் பயன்படுத்திய கத்தியில் அசைவ நாற்றம் இருக்கும். அந்த அசைவ நாற்றத்தைப் போக்க எளிய வழி உள்ளது. அதாவது எலுமிச்சைப் பழச் சாற்றை ஊற்றி கை மற்றும் கத்தியைக் கழுவினால் போதும். நாற்றம் போய்விடும்.
- கேக் மற்றும் பாண் துண்டுகளை வெட்டும் போது சரியாக வெட்ட முடியாமல் போனால் அதற்கும் ஒரு யோசனை உள்ளது. வெட்டுவதற்கு முன்பு, கத்தியைச் சூடான நீரில் போட்டு துடைத்து விட்டு வெட்டினால் எளிதாக வெட்டுப்படும்.
- தோசை மாவுடன் கொஞ்சம் சோள மா சேர்த்து தோசை சுட்டால், உடம்புக்கும் நல்லது. சாப்பிடவும் ருசியாக இருக்கும்.
- ரவாத் தோசை செய்யும்போது, இரண்டு கரண்டி கடலை மா சேர்த்துச் செய்தால் தோசை நன்கு சிவந்து மொர மொர வென்றிருக்கும்
- வல்லாரைக் கீரையைச் சுத்தம் செய்து, பொடியாக நறுக்கிப் பருப்பு போட்டு பொரியல் செய்து சாப்பிட்டால் நினைவாற்றல் பெருகும்.
- ரொட்டிக்கு மாவைத் தயார் செய்யும் போது தயிர் அல்லது முட்டை சேர்த்துக் கொண்டால், ரொட்டி மிகவும் மிருதுவாக இருக்கும்.
- கேக் செய்வதற்கு முன் 10–15 நிமிடங்கள் ஓவனைச் சூடாக்கவும். அதன் சூட்டின் அளவை அறிந்துக்கொள்ள சிறிய அளவு மாவைக்கொண்டு முதலில் குக்கீஸ் செய்து பார்க்கலாம்.

# நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 700 | 700 | 600 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 400 | 100 | – |
| கணவாய் | 550 | 500 | 500 | 500 | 600 | 700 | – |
| பாரை | 500 | 400 | 500 | 600 | 500 | 500 | 400 |
| சுறா | 550 | 500 | 600 | 800 | 650 | 600 | 600 |
| சீலா | 250 | 400 | 400 | 500 | 450 | 500 | 300 |
| விளை | 600 | 400 | 400 | 500 | 450 | 600 | 350 |
| முரல் | 250 | 400 | 350 | 400 | 350 | 400 | 300 |
| கும்பிளா | 400 | 300 | 300 | 400 | 400 | 400 | – |
| கிளாக்கன் | 500 | 800 | – | – | 500 | – | – |
| ஓரா | 350 | 350 | – | – | 400 | – | – |
| திரளி | 200 | 200 | 200 | 200 | 300 | 200 | 300 |
| நகரை | 150 | 200 | – | 250 | 300 | – | 300 |
| சூடை | 150 | 150 | 100 | 200 | 200 | 100 | 100 |
| ஒட்டி | 250 | 200 | 150 | 250 | 300 | – | – |
| திருக்கை | 150 | 300 | 200 | 300 | 400 | 300 | 150 |
| மதனம் | 150 | 200 | 180 | 300 | 250 | 400 | 200 |
| கொய் | 100 | 150 | 60 | 100 | 100 | 100 | – |
| பாலை | 400 | 200 | 250 | 400 | 500 | – | – |
| [illegible] | 100 | [illegible] | 200 | 300 | 300 | 400 | 250 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுட்பம்

## கலக்ஸி ஜே 1 மினி

சம்சுங் நிறுவனம் கலக்ஸி ஜே 1 மினி எனும் புதிய தொடுதிரைக் கைபேசியை விரைவில் அறிமுகம் செய்யவுள்ளது.



முதன் முதலாக பிலிப்பைன்ஸில் அறிமுகம் செய்யப்படவுள்ள இந்தக் கைபேசி, 4 அங்கு அளவுடையதும், 800 x 400 பிக் சல் தீர்மானம் உடையதுமான தொடுதிரையைக் கொண்டுள்ளதுடன், பிரதான நினைவகமாக 768 எம்பிரம் மற்றும் 8ஜிபி சேமிப்பு நினைவகம் என்பவற்றையும் கொண்டுள்ளது.
இவை தவிர அன்ரொய்ட் 5.1. லொலிபொப் இயங்குதளத்தில் செயற்படக்கூடியதாக இருப்பதுடன், 5 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமரா, வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கென வீஜிஏ கமரா என்பனவற்றையும் கொண்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## பேஸ்புக்கின் புதிய சாதனை

இணைய ஜாம்பவான்களுள் ஒன்றாகத் திகழும் பேஸ்புக், ஆரம்பிக்கப்பட்ட சில வருடங்களில் பல சாதனைகளைத் தனதாக்கியுள்ளது.
இந்த வரிசையில், தற்போது இந்தியாவில் மட்டும் 142 மில்லியன் பயனர்களை எட்டி மற்றுமொரு சாதனையைப் படைத்துள்ளது.



அதில் நாள்தோறும் 69 மில்லியன் இந்தியர்கள் பேஸ் புக்கைப் பயன்படுத்துகின்றனர் என்றும், அவர்களில் 64 மில்லியன்வரையானவர்கள் தமது கைபேசி சாதனங்களின் ஊடாக பேஸ்புக் தளத்தை உபயோகிக்கின்றனர் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.
கடந்த வருட இறுதியில் 1.59 பில்லியன் பயனர்களை உலகெங்கிலும் கொண்டிருந்த பேஸ்புக்கின் மிகப்பெரிய சந்தையாக இந்தியா காணப்படுகின்றது.

## பரிசு கொடுத்த பேஸ்புக்

ஹேக்கர்கள் மூலமாக பேஸ்புக் கணக்குகள் தாக்கப்படும் அபாயத்தை உணர்த்திய இந்தியாவைச் சேர்ந்த ஆனந்த் பிரகாஷ் என்ற இளைஞருக்கு பேஸ்புக் நிறுவனம் பரிசுத்தொகையை வழங்கியுள்ளது.
பொதுவாக பேஸ்புக் கணக்கின் கடவுச்சொல்லை மறந்துவிட்டால், அதனை மீட்டெடுக்கும் வகையில் 6 இலக்க இரகசிய எண் ஒன்று எமது மின்னஞ்சல் முகவரிக்கோ, கைபேசி எண்ணுக்கோ அனுப்பப்படும். அதனை உபயோகித்து புதிய கடவுச்சொல்லை நாம் உருவாக்கிக்கொண்டு மீண்டும் பேஸ்புக் கணக்கை உபயோகப்படுத்தலாம்.
அவ்வாறு அனுப்பப்படும் 6 இலக்க இரகசிய எண்ணை இலகுவாக பேஸ்புக்கின் பீட்டா வெர்சன் வழியாக ஹேக் செய்யக் கூடிய வழி உள்ளதைக் கண்டுபிடித்த ஆனந்த் பிரகாஷ், அதனை பேஸ்புக் நிறுவனத்துக்குத் தெரியப்படுத்தினார்.
இந்த ஆபத்தை ஒத்துக்கொண்ட பேஸ்புக் நிறுவனம், ஆனந்த்துக்கு 15,000 டொலர் பரிசுத் தொகையை வழங்கியுள்ளது.



# டைன் அன்ட் ஸ்மைல்- ஊக்குவிப்பை தொடங்கியுள்ளது கொமர்ஷல் வங்கி



கொமர்ஷல் வங்கியின் கிரடிட் மற்றும் டெபிட் கார்ட் உரிமையாளர்களுக்கு நாட்டிலுள்ள தலைசிறந்த 57 பிரபல உணவகங்களில் அறுசுவை உணவுகளை கழிவு விலையில் உண்டு மகிழும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. 2016 ஏப்ரல் 16 வரையான ஒன்பது வார காலத்துக்கு வங்கியின் 'டைன் அன்ட் ஸ்மைல்' ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் இந்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. கிரடிட் கார்ட் மூலமான கொடுப்பனவுகளுக்கு 30 வீதக் கழிவும் டெபிட் கார்ட் மூலமான கொடுப்பனவுகளுக்கு 20 வீதக் கழிவும் வழங்கப்படவுள்ளன.
கொமர்ஷல் வங்கியால் விநியோகிக்கப்பட்டுள்ள விசா அல்லது மாஸ்டர் கார்ட்டுகளைப் பாவித்து கொடுப்பனவுகளைச் செய்பவர்களுக்கு இந்தக் கழிவுகள் வழங்கப்படவுள்ளன. நீர்கொழும்பு, காலி, நுவரெலியா, யால ஆகிய இடங்களில் உள்ள ஜெட்விங் குழுமத்தின் உணவகங்கள் உட்பட, மொத்தம் ஜெட்விங் குழுமத்தின் 12 உணவகங்கள், துர்யா களுத்துறை குழுமத்தின் ஐந்து உணவகங்கள், கலதாரி கொழும்பின் நான்கு உணவகங்கள், வோட்டர்ஸ் எட்ஜின் நான்கு உணவகங்கள் உட்பட ஏனைய 36 உணவகங்களில் இந்தக் கழிவுகள் வழங்கப்படவுள்ளன. ஜெட்விங் குழுமம் ஏப்ரல் 10 வரை இந்தக் கழிவுகளை வழங்கும். ஏனையவை ஏப்ரல் 17 வரை இந்த வாய்ப்பை வழங்கும் என்று வங்கி அறிவித்துள்ளது.

**இதில் இணைந்துள்ள உணவகங்கள்:**
ஜெட்விங் பீச்சில் உள்ள தசேன்ட், பிளக் கோரல் மற்றும் த டெக் ஒப் ஜெட்விங் பீச் நீர்கொழும்பு உணவகங்கள், ஜெட்விங் குழுவில் உள்ள கிச்சன் சென்டர் பொயின்ட் மற்றும் கபே ஜே, சினமன் ரூம் மற்றும் கார்டமன்ட் கபே, ஜெட்விங் லைட்ஹவுஸ் காலி, ஜெட்விங் ஸீ இல் உள்ள கபே ஸீ மற்றும் லெலாமா, ஜெட்விங் சென்ட் அன்ட்ரூஸ் நுவரேலியாவில் உள்ள ஓல்ட் கோர்ஸ் ரெஸ்ரூரண்ட், ஜெட்விங் யாலவில் உள்ள த டைனிங் ரூம், அவானி பென்கோட்டவில் உள்ள பிராங்கிபானி அன்ட் த லொப்ட், கிளப் பென்கோட்டவில் பிரதான உணவகம், த வேவ்ஸ் கிளப் ஹொட்டல் டொல்பின், பார் பெவிலியன் மற்றும் றோயல் ஸ்பைஸ் உணவகம், ஏர்ல்ஸ் ரீஜன்ஸி, கலிபோர்னியா கிரில், கொபி ஷொப், கலதாரி ஹோட்டலின் பிளேவர்ஸ் அன்ட் ஹெர் சாதே, துர்யா களுத்துறையில் உள்ள சமாஸா, டாஸா, மிஸ்தா டெலி, பிங்க் லொப்ஸ்டர், அம்ரித் மசாலா டோக, பெர்லின் ஸ்கை லோன்ச், பார்ஸ், கபே மைக்கல்ஏன்ஜலோ, கொழும்பு கோர்ட் யார்டின் லொப்ட் மற்றும் ஸ்கார்லெட் ரூம், பிட்ஸ் மர்கோஸா யாழ்ப்பாணம், சியலோ, ஜேட், ஜெக்ப்ரீ, கினாரி, கிங்கொகனட் நீர்கொழும்பு, லூன்டாலூ, மகாராஜா பெலஸ், பொப்பி ஹனா, ரஜ போஜுன், சீமொண்டு, ஷியாம் ஹவுஸ், ஸ்ட்ரீட் 360, மெங்கோ ட்ரீ, தசென்டவிச் பெக்டரி, ரி.ஜி.ஐ. பிறைடேஸ், சின்ட்டாவோ, சுகிஜியு வோச்சி, விச்வே வெஸ்ட், த பேக்கரி, போர்ட் வோக், கின்ஸா, வோட்டாஸ் எட்ஜில் தலோங் பார் என்பவை இதில் இணைந்துள்ள உணவகங்கள் ஆகும். கொமர்ஷல் வங்கியின் கொம்டீல் திட்டத்தின் மூலம் ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் அனுகூலங்களை மேலும் மேம்படுத்தும் வகையிலேயே இந்தத் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. நாட்டில் உள்ள பிரதான சில்லறை விற்பனை நிலையங்களில் தனது வாடிக்கையாளர்களுக்கு பெறுமதி சேர் சலுகைகளை பெற்றுக் கொடுப்பதோடு கிரடிட் கார்ட் உரிமையாளர் களுக்கு வட்டியற்ற தவணைக் கொடுப்பனவு வசதிகளை யும் வழங்குவதே கொம்டீல் திட்டமாகும். கொமர்ஷல் வங்கி கார்ட் உரிமையாளர்கள் விசா மற்றும் மாஸ்டர் கார்ட் நிறுவனங்கள் நடத்தும் உலகளாவிய ஊக்குவிப்புத் திட்டங்களிலும் பங்கேற்கும் வாய்ப்பைப் பெறுகின்றனர்.
கொமர்ஷல் வங்கி உலகின் தலைசிறந்த ஆயிரம் வங்கிகள் வரிசையில் தொடர்ந்து ஐந்து ஆண்டுகளாக இடம்பிடித்துள்ள இலங்கையின் ஒரேயொரு வங்கியாகும். அது நாடு முழுவதும் 250 கிளைகளுடனும், 625 ஏ.ரி.எம் வலையமைப்புக்களுடனும் செயற்படுகின்றது. இதுவே நாட்டின் தனியொரு வங்கி கொண்டுள்ள மிகப் பெரிய இலத்திரனியல் பண விநியோக முறையாகும். 2014ஆம் ஆண்டில் மிகச் சிறந்த தனியார் வர்த்தக முத்திரையாகவும் அது தெரிவு செய்யப்பட்டுள்ளது. கொமர்ஷல் வங்கி பல சர்வதேச சஞ்சிகைகள் மூலமாகவும் கடந்த பல ஆண்டுகளில் இலங்கையின் தலைசிறந்த வங்கி எனத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. அத்தோடு 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் இலங்கையின் மிகச் சிறந்த பத்து கூட் டாண்மை பிரசைகளில் ஒன்றாகவும் இலங்கை வர்த்தகச் சபையால் தெரிவு செய்யப்பட்டிருந்தது. (தி)

வணிகம்

# வட்டக்கச்சியில் புதிய பால் குளிரூட்டல் நிலையத்தை திறந்துவைத்துள்ள நெஸ்லே



இலங்கையில் தனியார்துறை மத்தியில் அதிகளவான பாலைக் கொள்வனவு செய்து வருகின்ற நெஸ்லே, பாலைக் கொள்வனவு செய்ததன் மூலமாக கிட்டத்தட்ட 20,000 உள்நாட்டுப் பாற்பண்ணையாளர்களுக்கு 3.6 பில்லியன் ரூபாதொகையை பங்களிப்பாக வழங்கியுள்ளது.
இவ்வாறு சேகரித்த பாலை நெஸ்பிறே,மைலோ மற்றும் மில்க்மெயிட் போன்ற தனது உற்பத்திகளை தயாரிக்க அது பயன்படுத்தி வருகின்றது.
இலங்கையின் பாலுற்பத்தித் தொழிற்றுறை இன்னமும் வளர்ச்சிகண்டுவருகின்றஒருதுறையாகவே காணப்படுகின்றது. பாற்பண்ணையாளர்கள் உற்பத்தி செய்கின்றபாலின் அளவுஉள்நாட்டுச்சந்தையின் மொத்த கேள்வியைஈடுசெய்வதற்கு போதுமானதாக இல்லை.
இந்தத் துறையை அபிவிருத்தி செய்ய உதவுவதற்காக 1980 களின் ஆரம்பத்திலிருந்தே குறித்த அதிகார சபைகளுடன் இணைந்து நெஸ்லே பணியாற்றி வந்துள்ளது. பாலின் விநியோக அளவு மற்றும் தரத்தை அதிகரிப்பது மட்டுமன்றி,உள்நாட்டுப் பாற்பண்ணையாளர்களுக்கு நிலைபேற்றியலுடனான வாழ்வாதாரம் ஒன்றையும் கட்டியெழுப்ப உதவவேண்டும் என்ற நம்பிக்கையையும் நிறுவனம் கொண்டுள்ளது.
கிரமமான அடிப்படையில் பாற்பண்ணையாளர்களுக்கு பல்வேறுவகையான தொழில் நுட்ப தலைப்புக்கள் மற்றும் மிகச் சிறந்தநடைமுறைகள் தொடர்பில் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்து வருகின்ற நிறுவனம். அதன் மூலமாக தொழில் நுட்ப நிபுணத்துவம் மற்றும் மிகச் சிறந்த நடை முறைகளை அவர்களுடன் பகிர்ந்துவருகின்றது. கால்நடைகளுக்கு தீவனம் அளித்தல், இனப்பெருக்கம், கால்நடைச் சுகாதாரம் மற்றும் பாற்பண்ணையை நிர்வகித்தல் போன்ற விடயங்கள் இதில் அடங்கியுள்ளன.
இலங்கையிலுள்ள பாற் பண்ணையாளர்கள் உயர் தரத்திலான பாலை மேலும் அதிகமாக உற்பத்தி செய்வதற்கு உதவவேண்டும் என்பதில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக நாம் இதயபூர்வமாக செயற்பட்டு வந்துள்ளோம்- என்று நெஸ்லே லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான வானிஹெக்டே குறிப்பிட்டார்.
"எமது வியாபார செயற்பாடுகள் அனைத்தும் உள்நாட்டுச் சமூகத்தின் மத்தியில் நல்விளைவுகளை ஏற்படுத்த வேண்டும் என்ற எமது சிந்தனையான பகிரப்பட்ட அடிப்படையில் பெறுமதியைத் தோற்றுவித்தல்" என்பதன் ஒரு அங்கமாக காணப்படுகின்றன. உள்நாட்டில் பெறப்படுகின்ற நலம் செறிந்த பாலை உபயோகித்து தயாரிக்கப்பட்ட உயர் தரம் வாய்ந்த உற்பத்திகளை இலங்கையிலுள்ள எமது நுகர்வோருக்கு வழங்கி, கிராமியப் பொருளாதாரத்துக்கு பங்களிப்பாற்ற வேண்டும் என்ற ஈடுபாட்டில் நாம் மிகவும் உறுதியாக உள்ளோம். நிறுவனம் தற்போது வடமாகாணத்தில் வட்டக்கச்சியில் புதியபால் குளிரூட்டல் நிலையமொன்றை ஆரம்பித்து வைத்துள்ளது.
இந்த குளிரூட்டல் நிலையத்தின் துணையுடன் பாற்பண்ணையாளர்கள் தங்களது பாலை 4 பாகை செல்சியஸ் வெப்பநிலையில் வைத்து,அதன் புதிய தன்மை கெட்டுப்போகாது பேண முடியும். (தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறுதிப்போரின்

ரிக்காவில் சொகுசு வாழ்க்கை வாழவில்லை. இவ்வாறு வாழ்ந்துவிட்டுப் போர் வெற்றி கௌரவத்தைப் பறித்துக் கொள்வதற்காக அலைந்து திரியவும் இல்லை.

நான் ஓய்வுபெறுவதற்கான இராணுவ அதிகாரியாக இருந்தபோதிலும் எனக்கு இராணுவத் தளபதி என்ற பதவி வழங்கப் பட்டது என்று முன்னாள் பாதுகாப்புச் செய லாளர் கூறியுள்ளார். இது முழுமையான பொய்யாகும். இராணுவத் தளபதியான தும் மிகவும் சாதாரணமாக எதிர் பார்ப்பே என்னிடம் இருந்தது. அதிகாரத்தைக் கைப்பற்று வதன் நிமித்தம் சூழ்ச்சி செய் யும் நோக்கம் இருந்திருக்கவில்லை.

**பாதுகாப்புச் செயலராவது எனது எதிர்பார்ப்பு**

அப்போதிருந்த நாட்டின் ஆட்சியாளர்கள், அவர்களது சகோதரர்கள் மற்றும் குடும் பத்தினர் எமது ஜாதகங்களைக் களவாடிச் சென்று ஜோதிடம் பார்ப்பார்கள். அந்த ஜாதகம் சிறப்பானதாக இருந்தால், சம் பந்தப்பட்டவர்களுடன் குரோதங்களை ஏற்ப டுத்திக் கொள்வார்கள். பின்னர் சம்பந்தப் பட்ட அதிகாரிகள் சூழ்ச்சி செய்கின்றார்கள் என்றும், அதிகாரத்தைக் கைப்பற்ற முயற் சிப்பார்கள் என்றும் நினைத்துக் கொள் வார்கள். அதன் பின்னர் சம்பந்தப்பட்ட அதி காரிகளைப் பழிவாங்கச் செயற்படுவார்கள். எனக்கு எதிர்பார்ப்பு ஒன்றுதான் இருந்தது. பொதுவாக எந்தவொரு இராணுவத் தளபதியிடமும் அந்த அப்பாவியான எதிர் பார்ப்பு இருக்கும் என்றே நான் கருதுகி றேன். இராணுவத் தளபதியொருவருக்கு இந்த நாட்டின் சார்பான தூதுவராகப் பதவி வகிப்பதற்கான சந்தர்ப்பங்கள் இருந்திருக்கின்றன. சில இராணுவத் தள பதிகளுக்குப் பாதுகாப்புச் செயலாளராகப் பதவி வகிக்கும் சந்தர்ப்பங்கள் கிடைத்தி ருக்கின்றன. அவ்வாறான எதிர்பார்ப்புத் தான் எனக்கும் இருந்தது. அதற்கு அப்பால் செல்ல எமக்கு எதிர்பார்ப்பு இருந்திருக்க வில்லை.

**போர் ஆயுதக் கடன் செலுத்தப்படவில்லை**

2005 ஆம் ஆண்டு இராணுவத்தைப் பொறுப்பேற்கும் போது, இராணுவத்தின் செலவினங்களுக்காக வருடமொன்றுக்கு 82 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. நான் 3 வருடங்களும் 7 மாதங்களும் இராணு வத் தளபதியாகச் செயற்பட்டிருந்தேன். ஒரு இலட்சத்து 16 ஆயிரமாக இருந்த இராணுவத்தின் எண்ணிக்கையை நான் 2 இலட்சமாக அதிகரித்தேன். அப்போதும் எனக்கு 82 மில்லியன் ரூபாதான் கிடைத் தது. எனினும், இராணுவத்தைப் பராமரிப் பதற்காக நான் மேலதிகமாகப் பணம் கேட்டிருக்கவில்லை.

அதற்கு முன்னரும், நான் போருக்குக் கட்ட ளையிட்ட சந்தர்ப்பத்திலும், போருக்கான ஆயுதங்களை வாங்கும் நடவடிக்கைகள் குறித்த 82 பில்லியன் ரூபாவுக்கு வெளியி லேயே நடைபெற்றன. அது சீனாவில் இருந்து நடைபெற்றிருந்தது. நான் போர் செய்தபோது, வாங்கப்பட்ட ஆயுதங்களுக் கான கட்டணங்கள் 2012 ஆம் ஆண்டி லேயே செலுத்த ஆரம்பிக்கப்பட்டன. அவை 2020 வரை செலுத்தப்படும்.

**போரைக் காட்டி பணம் கொள்ளை**

இவ்வாறான நிலையில், நாட்டில் போர் நடைபெறுவதாகவும் நாட்டை முன்னேற்ற முடியாது என்றும் நாட்டின் ஆட்சியாளரும் பாதுகாப்புப் பிரதானிகளும் நாட்டு மக்க ளுக்கு கூறியிருந்தனர். அது முற்றிலும் பொய்யான விடயமாகும். போருக்கு இவ் வளவு பணம் செலவாகியிருக்கவில்லை. போருக்கான செலவுகள் 2012 ஆம் ஆண்டிலிருந்தே செலுத்த ஆரம்பிக்கப் பட்டிருந்தன. இவ்வாறு போரைக் காட்டி, மக்களை ஏமாற்றி போருக்கென கூறி அந்தப் பணத்தை அப்போதைய ஆட்சி யாளர்கள் கொள்ளையடித்திருந்தனர்.

உதாரணமாக, 130 மில்லி மீற்றர் தோட் டாக்களைக் குறிப்பிட முடியும். அவற்றை நாம் கப்பல் கணக்கிலேயே கொண்டு வரு வோம். போர் ஆரம்பிக்கும்போது, அந்தத் தோட்டாவொன்றின் விலை 250 டொல ராகக் காணப்பட்டது. 15 வருடங்களில் அதன் விலை 50 டொலரினால் மட்டுமே அதிகரித்திருந்தது.

**ஆயுதம் இல்லாது திண்டாடினேன்**

போர் நடைபெற்ற காலத்தில் பாதுகாப்புச் செயலாளர் அந்தத் தோட்டாவொன்றுக்கு 650 டொலர் கணக்கில் செலுத்த ஆரம் பித் திருந்தார். இது 400 டொலர் அதிகமாகும். இவ்வாறு செலவிட்டு இறுதியில் எனக்கு தோட்டா வாங்குவதற்கு நிதி இல்லாமல் போய்விட்டது. தோட்டாக்கள் இல்லாமல், என்னால் நான்கு மாதங்கள் போர் செய்ய முடியாமல் போய்விட்டது. 2008 ஆம் ஆண்டு நடுப் பகுதியில் எம்மிடம் போதிய தோட்டாக்கள் இல்லாமையினால், நாளொன் றுக்கு ஒரு மல்டி பரல் தாக்கு தலைத்தான் மேற்கொண்டிருந்தோம்.

அதன் பின்னர் நான் பாகிஸ்தான் இரா ணுவத் தளபதியிடம் தனிப்பட்ட ரீதியில் பேசி, 60 மில்லியன் டொலர் பெறுமதியான தோட்டாக்களைப் பெற்றோம். பாதுகாப்பு அமைச்சரும், பாதுகாப்புச் செயலாளரும் ஒன்றும் செய்யாமல் மேலே பார்த்துக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில், பசில் ராஜபக்சவுடனும் பேசி 60 மில்லியன் டொலரைப் பெற்று, பாகிஸ்தான் இராணு வத் தளபதியுடன் எனக்கிருந்த நட்பைப் பயன்படுத்தித்தான், தோட்டாக்களை வர வழைத்து போதிய ஆயுதங்கள் இல்லாத ஆறு மாதகால போரை நடத்தியிருந்தோம்.

**பிரபாகரனுக்கு மகிந்த கப்பம் வழங்கினார்**

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்த லின்போது, தமிழ் மக்கள் வாக்களிப்பைத் தடுப்பதற்காக, மகிந்த ராஜபக்சவினால் பிரபாகரனுக்கு 2 மில்லியன் டொலர் கப்பம் வழங்கப்பட்டது. இலங்கை நாணய மதிப்பில் 200 மில்லியன் ரூபாவை விடவும் அதிகமாகும். இதை என்னால் அச்சமின்றிக் கூறமுடியும். ஏனெனில், ஜனாதிபதி அலுவலகத்தில் பசில் ராஜபக் சவுக்கு இருந்த அலுவலகத்தில் நான் அவரிடம் பேசிக் கொண்டிருந்தபோது, இது பற்றி என்னிடம் கூறியிருக்கின்றார். தெற்காசியா விலுள்ள அயல் நாடொன்றி லிருந்து, மில்லியன் டொலர் பணம் தங் களுக்குக் கிடைத்ததாகவும், தமிழ் மக்கள் தேர்தலில் வாக்களிப்பதைத் தடுப்பதற்குத் தனக்கு என்ன செய்வீர்கள் என்று பிரபா கரன் கேட்டிருந்ததாகவும், அதற்குக் கடற் புலிகளுக்குத் தேவையான படகுகளை மலேசியாவிலிருந்து வாங்குவதற்கு 2 மில்லியன் டொலர்களைத் தருவதாகக் கூறியிருந்ததாகவும், அதன் பிரகாரம் அந்தப் பொதியை பசில் ராஜபக்சவே மலேசியாவுக்குச்சென்றுவழங்கியிருந்தார். இந்தச் சந்தர்ப்பத்தில், மலைநாட்டு அரசி யல்வாதி ஒருவரும் அந்த இடத்தில் இருந் தாகவும், பிரபாகரன் அவரைப் பார்த்து நீங் களும் மலைநாட்டு மக்கள் வாக்களிக்க இடமளிக்க வேண்டாம் என்று கூறியதாக வும் பசில் ராஜபக்ச என்னிடம் கூறினார்.

**தோல்வியடைய வேண்டியவர் மகிந்த**

2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்த லும் மிகவும் மோசடி மிக்கதாகும். வாக் கெண்ணும் ஆறு நிலையங்கள் மீது தாக்குதல்கள் நடத் தப்பட்டிருந்தன. தேர் தல்பெறுபேறுகள் திரு த்தி எழுதப்பட்டு வெளியிடுமாறு கூறப் பட்டது. இதனால் அப் போதிருந்த தேர்தல் ஆணையாளருக்கு பெரும் மன அழுத் தம் ஏற்பட்டது. அவர் எங்கு சென்றார் என் பது இதுவரை தெரிய வில்லை.

எனவே, 2005 ஆம் ஆண்டு மற்றும் 2010 ஆம் ஆண்டு தேர்தல்கள் நீதியான முறையில் நடைபெற் றிருந்தால், மகிந்த ராஜபக்ச இரு தேர் தல்களிலும் தோல்வி கண்டிருப்பார்.

இறுதியில் 2015 ஆம் ஆண்டிலும் பதவி அவாவில் அவர் போட்டியிட்டார். எனினும், அதில் மோச டிகளை மேற்கொள்ள முடியாமல் போய் விட்டது. வெளிநாட் டுக் கண்காணிப்பா ளர்கள் இருந்தமை யால் வாக்கெண் ணும் நிலையங்கள் மீது தாக்குதல்களை நடத்த முடியாமல் போனது. அவ்வாறு இல்லாதிருந்தால் மோசடிமிக்க தேர்த லொன்று நடைபெற்று, 2010 ஆம் ஆண் டில் என்னைக் கைது செய்தது போன்று, மைத்திரிபால உள்ளிட்ட பலரையும் கைது செய்திருப்பார்கள். அதன் நிமித்தம் இராணு வத்தினரைக் கொண்டு பல்வேறு ஏற் பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**பிரபாகரன் எப்போது உயிரிழந்தார் ?**

2009 மே 18 ஆம் திகதி என்னை அலரி மாளிகைக்கு அழைத்து, பதவி உயர்வை வழங்கினர் அப்போதைய ஜனாதிபதி மகிந்த. அப்போதும் போர் முழுமையாக முடிவடையவில்லை. 2009 மே 16 ஆம் திகதி வெளிநாட்டில் இருந்து வந்து நில த்தை முத்தமிட்டார், அப்போதைய ஜனாதி பதி மகிந்த ராஜபக்ச. அப்போதும் போர் முடிவடையவில்லை. மே 19ஆம் திகதி போர் முடிந்து விட்டதாக நாடாளுமன் றத் தில் விசேட அறிக்கை விடுத்தனர். அப் போதும் கூட போர் முடிவடைந்திருக்க வில்லை. பிரபாகரன் உயிருடன் இருந்தார். எனினும், நாடாளுமன்ற நிகழ்வு முடிவ டைந்து நான் காரில் சென்று கொண்டி ருந்த போது, பிரபாகரனின் சடலம் கண் டெடுக்கப்பட்டதாக, எனக்குத் தெரிவிக்கப் பட்டது. போர் வெற்றிக்கான கௌரவத் தைப் பெறுவதற்கு முயற்சிக்கும் இவர்கள், போர் முடிவடைந்த திகதியைக்கூட அறிந்து வைத்திருக்கவில்லை.

போரின் கடைசி வாரத்தில் நான் முக்கிய மான கடமையின் நிமித்தம் வெளிநாடு செல்ல வேண்டியிருந்தது. நாம் தருவிக்க விருந்த இராணுவத் தளபாடங்கள் பற்றி இறுதித் தீர்மானங்களைக் கொடுக்க வேண் டியிருந்தது. இது ஐந்து தடவைகள் ஒத்திவைக் கப்பட்ட பயணமாகும். எனி னும், ஏப்ரல் 19 தொடக்கும் மே 19 வரையான காலப்பகுதி யினுள் பயங்கரவாதிகள் களப்புப் பகுதிக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தனர்.

**இறுதி வாரத்தில் கேவலமான போர்**

இதை வைத்துக் கொண்டுதான் கடைசி வாரத்தில் இராணுவத் தளபதி நாட்டில் இருக்கவில்லை என்றும், தாங்கள் போரை வழிநடத்தினர் என்றும் கூச்சலிடு கின்றனர். கடைசி ஒருவார காலப் பகுதி யினுள் இவர்கள் செய்த கீழ்த்தரமான நட வடிக்கைகளினால்தான் வெள்ளைக்கொடி போன்ற பிரச்சினைகள் ஏற்பட்டன. அவ் வளவு காலமும் மிகவும் தூய்மையாக மேற் கொள்ளப்பட்டுவந்த போர் நடவடிக்கை கள், இவர்களது ஒருவார கால நடத்தை களினால் கேவலமாகி விட்டது.

இறுதிக் காலத்தில் நற்பெயரை களங்கப் படுத்தி விட்டனர். எனவே, போரின் இறுதி நாட்களில் என்ன நடந்தது என்பது தொடர் பில் கூடிய விரைவில் நாம் மக்களுக்கு வெளிப்படுத்துவோம்.

ஜெனிவா தீர்மானத்தை நிறைவேற்றுவது இறைமைக்கும், ஆட்புல ஒருமைப்பாட்டுக் கும் அச்சுறுத்தல் என்று சிலர் குறிப்பிடு கின்றனர். எனினும், போரை வழிநடத்திய வன் என்ற வகையில் கட்டாயம் வெளிப்ப டையான விசாரணையொன்று நடத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நான் இருக்கின்றேன். அந்த விசாரணை வெளிப்படையாக நடத்தப்படுவதற்கும், அதை எமக்குப் பலமாக்கிக் கொள்வதற் கும் வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்க ளையும், ஆலோசகர்களையும் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

**வெள்ளைக் கொடி விவகாரம் விசாரணை வேண்டும்**

போரை வழிநடத்தியவன் என்ற வகையில் ஜெனிவா சாசனங்களையும், மனித உரி மைகளையும் மதித்தே போர் நடவடிக்கை களை மேற்கொண்டேன். அவற்றை யாரும் ஒரு சிலர் மீறியிருக்கும் பட்சத்தில் தண்டனை வழங்கப்பட வேண்டும். இரா ணுவத்தின் கௌரவத்தைப் பாதுகாத்துக் கொள்ள இந்த விசாரணை நடத்தப்பட வேண்டும். வெள்ளைக் கொடி விவகாரம் பற்றியும் பேசப்பட்டது. அது தொடர்பில் எனக் கும்கூட மூன்று வருடங்கள் சிறைத் தண் டனை விதிக்கப்பட்டது. இந்த விடயம் பற் றியும் விசாரணை நடத்தப்பட வேண்டும். இது பற்றிய உண்மை மக்களுக்குத் தெளி வுப்படுத்தப்பட வேண்டும் – என்றார்.

**மகிந்தவுக்கு சவால்**

பொன்சேகா உரையாற்றும்போது, மகிந் தவை சபைக்குள் வந்து பதிலளிக்குமாறும் அவர் சவால் விடுத்திருந்தார். மகிந்த ராஜ பக்ச நேற்றைய தினம், பொன்சேகா உரை யாற்றுவதற்கு முன்னர் சபைக்குள் வந்தி ருந்தார். பொன்சேகா உரையாற்றிவிருந்த நிலையில், அவர் திடீரென சபைக்குள் இருந்து சென்றுவிட்டார்.

இந்த நிலையிலேயே, மகிந்தவுக்கு பொன் சேகா, இந்தச் சவாலை விடுத்தார். பொன் சேகா சுமார் ஒரு மணித்தியாலயம் உரை யாற்றினார். அவரின் உரையின் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேசைக ளில் கைதட்டி வரவேற்றனர். மகிந்த அணி யினர் மௌனமாக இருந்தனர். (த-வ-5)

ஒரு கொடியில் உதிர்ந்த மலர்கள்

30 ஆம் வருடம் | 30 ஆம் வருடம் | 10 ஆம் வருடம் | 60 ஆம் நாள்






அமரர் சதாசிவம்
சிவானந்தமூர்த்தி
(இலங்கை)
அன்னையின் மடியில்
04.05.1953
அசுரர்கள் பிடியில்
11.03.1986

அமரர்
விநாயகமூர்த்தி
சதாசிவம்
(இளைப்பாறிய சுகாதார பரிசோதகர் - இலங்கை)
அன்னையின் மடியில்
04.02.1922
ஆண்டவன் மடியில்
05.06.1986

அமரர் சதாசிவம்
சிவபாஸ்கரன்
(நோர்வே)
தாயின் மடியில்
28.04.1962
தரணியின் மடியில்
03.07.2006

அமரர் சதாசிவம்
சிவநேசன்
(இத்தாலி)
அன்னையின் மடியில்
02.07.1958
ஆண்டவன் அடியில்
09.01.2016

ஈர விழிகள்

தவமாய் தவமிருந்து நாம் பெற்ற முத்தான புதல்வன்
அந்நியன் அழிப்பில் வித்தாக வித்திட்ட வித்தகனாம் - சதாசிவம்
அன்பான தந்தையவர் மாலையிட்ட மணவாளன் உயிரற்ற ஜடமானார்
ஆணிவேரற்ற பூத்த கொடி நான் செயலற்று தள்ளாட
கடல் கடந்து திரவியம் தேட புறப்பட்ட மைந்தர்கள்
பாதி வழியில் பரிதவிக்க காலன் கவர்ந்து சென்றான்
உங்கள் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

"சிவபதி"
முத்ததம்பியார் வளவு,
வதிரி, கரவெட்டி.

(65947) (13.18.20)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 17 . 08 . 1930 |  | 08 . 03 . 2016 |

## சிவப்பிரகாசம் வேலுப்பிள்ளை

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், கனடா ரொறன்ரோவை வதிவிடமாகவும் கொண்ட சிவப்பிரகாசம் வேலுப்பிள்ளை (கொழும்பு மாநகராட்சி ஓய்வுபெற்ற வரை கலை நிபுணர்) 08.03.2016 செவ்வாய்க்கிழமையன்று பிரம்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம், ராசரத்தினம் (கண்டக்கா) தம்பதிகளின் அன்பு மகனும்,- காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம், தங்கராணி அம்மாள் தம்பதிகளின் அன்பு மருமகனும், புஸ்பராணியின் பாசமிகு கணவரும், மோகன் (பொறியியலாளர் – வீதி அபிவிருத்தி அதிகாரசபை கொழும்பு), சுமதி (இந்தியா), இந்துமதி (மாலதி - கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், Dr.சறோஜினி (றாகம போதனா வைத்தியசாலை), யுவராஜன், உதயச்சந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஷர்மிளா, விஷ்ணுபிரசாத், கிரிஷாந்த், அபர்ணா, அகிலன் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான பசுபதி, நாகமுத்து, குமாரசாமி, ஆறுமுகம் மற்றும் மகமாசிதேவி (கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரரும், காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி, செல்லப்பாக்கியம், மற்றும் புஸ்பராஜமணி (ஆஸ்திரேலியா), சறோஜினிதேவி, இராஜேந்திரா(கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், இந்திராணி (கனடா), இராசலிங்கம் (ஆஸ்திரேலியா), சந்திரலிங்கம் (வல்வெட்டித்துறை), செல்வராணி (கனடா), சிவரூபராணி (கனடா), ஆனந்தலிங்கம் (கனடா), ஞானலிங்கம் (நியூசிலாந்து), ஸ்கந்தலிங்கம் (இங்கிலாந்து), விஜயராணி (கொழும்பு), அமிர்தலிங்கம் (நோர்வே) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (12.03.2016) சனிக்கிழமை மாலை 5 மணி முதல் இரவு 9 மணி வரையும், 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று காலை 8 மணி முதல் 9:45 மணி வரையும் Chapel Ridge Funeral Home மண்டபத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு, 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யன்று காலை 9:45 மணி முதல் 11:45 மணி வரை கிரியை நடைபெற்று, பிற்பகல் 12:30 மணிக்கு Highland Hills Crematorium இல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
புஸ்பராணி (மனைவி), மாலதி (மகள்),
மோகன் (மகன்) - கனடா: +19057993291

தகவல்:
**குடும்பத்தினர்.**
(69171)(15.17)

# இரவில் நடமாடிய இருவர் பொலிஸிடம் ஒப்படைப்பு

**நள்ளிரவில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய இருவரைப் பிடித்த ஊர்மக்கள் அவர்களைக் கோப்பாய் பொலிஸில் ஒப்படைத்துள்ளனர்.**

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு நீர்வேலிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நீர்வேலிப் பகுதியில் உள்ள உறவினர் ஒருவரின் பூப்புனித நீராட்டு விழாவுக்கு இருவரும் காரைநகர் பகுதியில் இருந்து வந்துள்ளனர். இரவு 12 மணியளவில் மது பானம் அருந்தி விட்டு வீதியில் சந்தேகம் ஏற்படும் விதமாக நடந்து திரிந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. அதனை அவதானித்த பொதுமக்கள் அவர்களைப் பிடித்து கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். இருவரும் 19 மற்றும் 21 வயதுடைய நபர்கள் என்றும் விசாரணை மேற்கொள்ளப்படுகின்றது என்று பொலிஸார் கூறினர். (ற-4,107)

# மரண அறிவித்தல்



## நாகலிங்கம் கிருஷ்ணபாலா

**(இளைப்பாறிய ஆசிரியர் - யா/சென்சாள்ஸ் மகாவித்தியாலயம்)**

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், வைமன் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் கிருஷ்ண பாலா (09.03.2016) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சோமநாதன் - இராசமணி தம்பதியினரின் அன்பு மருமகனும் ரூபாவதியின் (ஓய்வு பெற்ற ஆசிரியை - யா/ இ/ ஆரம்பப் பாடசாலை) அன்புக்கணவரும் மனோன்மணி, பொன்மணி, பராசக்தி, சகுந்தலாதேவி காலஞ்சென்றவர்களான திருச்செல்வம் (ஓய்வு பெற்ற உபஅதிபர் - O.L.R பாடசாலை), நகுலாம்பிகை, தங்க லெட்சுமி, சிந்தாமணி, மங்கையர்க்கரசி ஆகியோரின் அன்புச் சகோதரரும் திலகவதி, ரவீந்திரன், கருணாவதி, கலாவதி, நந்தாவதி, சுரேந்திரன், தயாவதி, காலஞ்சென்ற தினகரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் கிருஷ்ணரூபன் (நோர்வே), கீதா (கனடா), கிருஜாஜினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெகதக்ஷிகா, புவனேஸ்வரன், ஜெயரஞ்சன் ஆகியோரின் அன்பு மாமனும் கிருஷான், டிலான், எடிசன், ரொனியா, ரொம் அபராஜிதன், ஆர்த்திகன், ஹரினி, ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (13.03.2016) ஞாயிற்றுக் கிழமை காலை 08.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணிக்கு கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வைமன் வீதி,**
**நல்லூர்.** (69172) (15.17)

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**

**T.P No: 021 222 1029**

# மரண அறிவித்தல்

## திருமதி பராசக்தி சந்திரசேகரி (பிரம்மகுமாரி)

(முன்னாள் ஆசிரியர் - யா/இணுவில் இந்துக் கல்லூரி,
ஓய்வுபெற்ற சமயபாட ஆசிரிய ஆலோசகர் வலிகாமம் வலயம்)



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி சந்திரசேகரி 05.03.2016 சனிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் இணுவில் மேற்கு காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், கல்வியங்காட்டைச் சேர்ந்த காலஞ்சென்ற கனகரத்தினம் சந்திரசேகரியின் (ஓய்வுபெற்ற பிரதம லிகிதர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற முருகதாஸின் அன்புத் தாயாரும், வதனியின் (லண்டன்) அன்பு மாமியாரும், பிறிஸ்சிலா, கிருபாஸ், கோடில்லியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற நல்லையா மற்றும் ஆச்சியம்மா (லண்டன்), குகனேஸ்வரி (வவுனியா), காலஞ்சென்ற சங்கரசிவம் மற்றும் சுப்பிரமணியம் (லண்டன்), உமாதேவி (வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் உள்ள பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலைய தலைமையகத்தில் (Global co - operation House) நாளை (12.03.2016) சனிக்கிழமை நடைபெறும். அன்றைய தினம் அன்னாரின் இல்லத்தில் (பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையம் - இணுவில் மேற்கு) காலை 9 மணிக்கு இரங்கல் நிகழ்வு இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **குடும்பத்தினர்**
**மருமக்கள், பெறாமக்கள்.**
(69165)
(11,17,20)

# மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 16 . 12 . 1958 |  | 10 . 03 . 2016 |

## பொன்னுத்துரை சர்வானந்தன்

**(உரிமையாளர் - நியூ ஆனந்தா ஸ்ரோர்ஸ் - சத்திரச்சந்தி, யாழ்ப்பாணம். ராதாஸ் டெக்ஸ்டைல்ஸ் - வெள்ளவத்தை)**

யாழ்ப்பாணம் கரம்பனைப் பிறப்பிடமாகவும், இல. 33, 37 ஆம் ஒழுங்கை, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சர்வானந்தன் நேற்று (10.03.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - மகேஸ்வரி தம்பதியினரின் புதல்வரும் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் - தனலக்சுமி தம்பதியினரின் மருமகனும் ராதாவின் அன்புக் கணவரும் லக்ஷ்மன் (BEng.Hons - UK), விக்ரம் (Bsc.Hons - UK), சாமந்தி (MBA - UK), வைஷ்ணவசங்கரி (Bsc.Hons, ACCA - UK) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வேணுகா, ஒசானி, சுரேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆரியாவின் பேரனும் புஸ்பராணி, கிருபானந்தன் (ஜேர்மன்) ஆகியோரின் சகோதரனும் சந்திரசேகரம், ராணி (ஜேர்மன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (12.03.2016) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிமுதல் அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை மறுதினம் (13.03.2016) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் தகனக்கிரியைக்காக பொரளை பொது மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல. 33, 37 ஆம் ஒழுங்கை,**
**வெள்ளவத்தை, கொழும்பு.** (69162) (15.17)

தகவல்: **குடும்பத்தினர்.**

**T.P No: 077 6925 995, 077 7711 970, 0777 446 469**

# மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 12 . 05 . 1953 |  | 08 . 03 . 2016 |

## சோமு நவரத்தினம்

**(நவம் மோட்டோர்ஸ்)**

புத்தூரைப் பிறப்பிடமாகவும், புன்னாலைக்கட்டுவன் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சோமு நவரத்தினம் 08.03.2016 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சோமு - சிதம்பரம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற இளையதம்பி - தங்கம்மா தம்பதிகளின் மருமகனும், நவமணியின் அன்புக் கணவரும், சுதர்ஜனா (ஜமுனா), சுஜீவன் (பிரான்ஸ்), சுஜந்தாஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெகசோதி (கனடா), சம்பந்தன் (ஜேர்மனி), லோகேஸ்வரன் (மெக்கானிக்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுதாகரன் (சுவீற்றிகா - கல்லுடைக்கும் ஆலை), கார்த்திகா (பிரான்ஸ்), விந்துஜா ஆகியோரின் மாமனாரும், சுவஸ்திகா, சுருத்திகா, சுவீற்றிகா, லிசாந் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.03.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விலங்கன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

**T.P No: 077 814 7138, 077 672 0762** (69169)(15,17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓயாத அலை

டிக்காட்டிய மேல்நீதிமன்று அவரை விடுவித்தது.

நாகமணி தெய்வேந்திரன் என்பவருக்கு எதிராகச் சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஒன்றில், நீதியரசர்களான க.வி.விக்னேஸ்வரன், அமீர் இஸ்மாயில், மார்க் பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய உயர்நீதிமன்ற நீதியரசர் குழாமினால் அளிக்கப்பட்ட தீர்ப்பை மேற்கோள்காட்டி, யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளார்.

விடுதலைப்புலிகள் அமைப்பின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவராகவும், ஓயாத அலைகள் 3 தாக்குதல் அணியொன்றில் இணைந்திருந்தவருமாகிய புன்குயிலுக்கு எதிராக, 2000 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22, 23 ஆம் திகதிகளில் ஆனையிறவு இராணுவ முகாம் மீது தாக்குதல் நடத்தியதாகக் குற்றம் சுமத்தி, சட்டமா அதிபரால் யாழ்.மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

எதிரிக்கு எதிரான ஒரேயொரு சாட்சியமான, அவர் வழங்கியதாகக் கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை இந்த வழக்கில் அனுமதிக்கக்கூடிய சான்று என ஏற்கனவே யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றினால் இடைக்காலத் தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கின் எதிரி விடுதலைப்புலி உறுப்பினர் என்றும், ஓயாத அலைகள் தாக்குதல் அணியில் இடம் பெற்றிருந்த அவர், ஆனையிறவு இராணுவ முகாம் மீதான தாக்குதலில் ஈடுபட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டபோதிலும், இந்த விடயங்கள் சம்பந்தமாக எது விதமான புலனாய்வு விசாரணைகளும் நடை பெற வில்லை. அத்தகைய விசாணைகள் நடத்தப்பட்டதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்படவில்லை.

வவுனியா கூமாங்குளத்தில் வைத்து எதிரியை கடந்த 2011 ஆம் ஆண்டு, ஒக்ரோபர் மாதம் 21 ஆம் திகதி பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு இன்ஸ்பெக்டர் ஆப்தீன் கைது செய்திருந்தார்.

இந்த வழக்கில் கூறப்பட்டிருப்பதுபோன்று உண்மையிலேயே 2000 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22ஆம், 23 ஆம் திகதிகளில் ஆனையிறவு இராணுவ முகாம் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்பதற்குரிய பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவின் புலனாய்வு விசாரணைச் சான்றுகள் எதுவும் நீதிமன்றத்தில் முன்வைக்கப்படவில்லை. தாக்குதலினால் ஏற்பட்ட சேதம், இறப்புக்கள், காயம் என்பவற்றுக்கான ஒரு அறிக்கை கூடப் பொலிஸாரினால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை.

இந்த வழக்கில் எதிரியாக நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டுள்ளவர் வழங்கியதாகக் கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் உண்மையான தகவல்களைக் கொண்டுள்ளதா என்பதைக் கூட பயங்கரவாதத் தடுப் புப் பிரிவு புலனாய்வு செய்து சாட்சியங்களைத் தேடவில்லை.

இதேபோன்று குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தைச் சாட்சியமாகக் கொண்டு இலங்கை உயர் நீதிமன் றத்தில் நாகமணி தெய்வேந்திரன் என்பவருக்கு எதிராகச் சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்ட பிரசித்தி பெற்ற வழக்கில் நீதியரசர்களான க.வி.விக்னேஸ்வரன், அமீர் இஸ்மாயில், மார்க் பெர்னாண்டோ ஆகிய நீதியரசர் குழாமினால் வழங்கப்பட்ட தீர்ப்பை நீதிமன்றம் இந்த வழக்கில் மேற்கோள் காட்டுகின்றது.

குறித்த வழக்கில் தீர்ப்பளித்துள்ள நீதியரசர்கள் மூவரும், குற்ற ஒப்புதல் வாக்குமூலமானது, சுயாதீனமானதாக இருக்கவேண்டும். குற்றச் செயல் உண்மையாக நடந்ததாக இருக்கவேண்டும். வேறு சான்றுகள் மூலம் சம்பந்தப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் ஒப்புறுதி செய்யப்படவேண்டும். இந்த விடயங்கள் நியாயமான சந்தேகத்திற்கப்பால் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட வேண்டும் என தெரிவித்திருந்தனர்.

எனவே, இந்த வழக்கில் எதிரி ஆனையிறவு இராணுவ முகாமைத் தாக்கினார் என்பதை வழக்குத் தொடுநர் நியாயமான சந்தேகத்துக்கு அப்பால் நிரூபிக்கத் தவறியிருப்பதனால், எதிரியை இந்த நீதிமன்றம் விடுதலை செய்து தீர்ப்பளிக்கின்றது.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டிருந்த கடைசி வழக்கும் இத்துடன் முடிவடைந்துள்ளதாக, நீதிபதி இளஞ்செழியன் இந்த வழக்கின் முடிவில் மன்றில் தெரிவித்தார். (த-வ-4)

## தகவல்

14 ஆம் திகதி ஆளுநரினால், முதலமைச்சருக்கு இது அனுப்பட்டிருந்தது. இதன் பின்னர் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, நேற்றைய தினம் சட்ட வரைவு தொடர்பான விவாதம் இடம்பெற்றது.

இதன்போது, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் திருத்தங்கள் சிலவற்றை முன்வைத்தார். இதன் பின்னர் ஆளும் கட்சி உறுப்பினர்கள் பல்வேறு திருத்தங்களைக் குறிப்பிட்டனர். இதிலுள்ள விடயங்களை முழுமையாக ஆராயாமல் ஒப்புதல் வழங்கமுடியாது என்று தெரிவித்தனர். அத்துடன் கால தாமதம் தொடர்பிலும் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தனர்.

இதனையடுத்து, வடக்கு மாகாண முதலமைச்சர், கால தாமதத்துக்குத் தானே பொறுப்பு என்று தெரிவித்தார். அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், எங்களில் மாத்திரம் தாமதத்துக்குப் பிழை சொல்ல முடியாது. அவர்களிலும் (நாடாளுமன்றச் செயலாளர்) பிழை உள்ளது. முதலமைச்சருக்கு அனுப்பாமல் சபைக்கு அனுப்பியிருக்க வேண்டும். எனவே தாமதத்துக்கு அவர்களும் பொறுப்பு - என்றார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த உறுப்பினர்கள், இதற்கு அவசர அவசரமாக ஒப்புதல் வழங்கவேண்டாம். ஒவ்வொரு உப பிரிவுகளையும் முழுமையாக ஆராய்ந்து திருத்தங்களை முன்வைக்க வேண்டும். அத்துடன் எங்களது திருத்தங்களை, அவர்கள் உள்வாங்காமல்விட்டால் என்ன செய்யப் போகின்றோம் என்ற கேள்வியை முன்வைத்தனர்.

இதன்போது அவைத் தலைவரும், முதலமைச்சரும், எங்களது கருத்துக்களைக் கேட்டுத்தான் அனுப்பியுள்ளார்கள். நாங்கள் கருத்துக்களைக் குறிப்பிடவேண்டும். சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய அவர்கள் எங்களுக்கு அனுப்பியுள்ளார்கள் என்று குறிப்பிட்டுச் சட்ட ஏற்பாடுகளைச் சபையில் வாசித்துக் காட்டினர்.

இந்த நிலையில், குறித்த சட்ட வரைவுக்கு திருத்தங்களுடன், வடக்கு மாகாண சபை ஒப்புதல் வழங்குகின்றது என்பதை நாடாளுமன்றச் செயலாளருக்கு அனுப்பி வைப்பதாக அவைத் தலைவர் இறுதியில் தெரிவித்தார். இதன்போது சபையில் எவரும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. (த-வ-5-ரி5)

## புனர்வாழ்வுக்குத்

றார் என்று கூறிச் சிறைச்சாலைகள் ஆணையாளரால், இவ்வாறு கடிதம் எழுதி வாங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதிகள் கடந்த 27 ஆம் திகதி உணவு தவிர்ப்பை ஆரம்பித்து இதுவரை நிறுத்தாது தொடர்ந்து கொண்டிருக்கின்றனர். இதனால் அவர்கள் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். நேற்றைய தினமும் ஒருவர் மயங்கியுள்ளார் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

அதேவேளை, வடக்கு மாகாண ஆளுநர் நேற்றையதினமும் சிறைச்சாலைக்குச் செல்லவில்லை என்றும், அவரது பதில்கூடக் கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த அரசியல் கைதிகள் 14 பேரும் இன்றையதினம் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர். இந்த நிலையில் இன்று அவர்கள் புனர்வாழ்வுக்கு அனுப்பப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (த-வ-4)


### கண்ணீர் அஞ்சலி



08.03.2016 செவ்வாய்க்கிழமை
இறைபதம் அடைந்த

**சோமு நவரத்தினம்**

(நவம் மோட்டார்ஸ் உரிமையாளர்)
அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயரும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
C.J & CITY Transports புன்னாலைக் கட்டுவன்

### மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 09 | 10 |
| 05 | 03 |
| 1953 | 2016 |

**திருமதி தவமணி வைகுந்தவாசன்**
(கோவளம் - காரைநகர்)

யாழ்ப்பாணம் நல்லூர் கைலாசபிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணி வைகுந்தவாசன் (ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் - விவசாய திணைக்களம் திருநெல்வேலி) நேற்று (10.03.2016) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - செல்வமலர் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சிவசம்பு - வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மருமகளும் வைகுந்தவாசனின் அன்பு மனைவியும் கிருபாலினி (Pharmacist-UK), கிருசாந்தன் (Civil Engineer Maga Engineering (pvt)Ltd), லலிதாம்பிகா (மருத்துவ பீடம் 4 ஆம் வருட மாணவி யாழ்ப்பாணம்), கிருசாந்தி (பொறியியல் பீடம் 3 ஆம் வருட மாணவி பேராதனைப்பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத்தாயாரும் றஜதீபனின் (Civil Engineer - UK) பாசமிகு மாமியாரும் கங்காதேவி, திருஞானசம்பந்தர், ஞானதேவி, ராசகுமாரி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (13.03.2016) ஞாயிற்றுக் கிழமை காலை 07.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 09,
கைலாச பிள்ளையார் கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
வைகுந்தவாசன் (சிறி) - கணவர்
வே.கந்தையா பிள்ளை அன் சன்ஸ்
மருந்துக்கடை யாழ்ப்பாணம்.

(69173) (15.17)

**T.P No: 021 321 9422, 021 221 9043**

### மரண அறிவித்தல்



**திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம்**

தலைவர் அ.அமிர்தலிங்கம் அவர்களின் துணைவி திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்கள் 09.03.2016 அன்று லண்டனில் காலமானார்.

அன்னாரின் மறைவை ஒட்டிய இறுதி அஞ்சலி நிகழ்வு வரும் 20.03.2016 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் மாட்டின் வீதியில் உள்ள இலங்கைத் தமிழரசுக்கட்சி தலைமைச் செயலகத்தில் இடம்பெறும்.

இலங்கைத் தமிழரசுக்கட்சி

### மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12 | 10 |
| 09 | 03 |
| 1939 | 2016 |

**திருமதி பரமேஸ்வரி சின்னத்துரை**

மின்சார நிலைய வீதி, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி சின்னத்துரை நேற்று (10.03.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - உருக்குமணி தம்பதிகளின் மகளும் சின்னத்துரையின் மனைவியும், தில்லைநாதன், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, பராசக்தி ஆகியோரின் சகோதரியும் சுயாதேவி, சிவதேவி, வாசுகி, பவானி, கௌரி, சிவகுமார், தயாரஞ்சினி ஆகியோரின் அன்புத்தாயாரும் காலஞ்சென்ற குணசீலன் மற்றும் விஜயகுமார், ரவீந்திரன், பகீர்தன், மதீசந்திரன், சசிகுமார், மஞ்சுளா ஆகியோரின் மாமியும் யுவர்ணன், [illegible], கஜேந்திரன், பிருந்தாபன், அகரன், அபிநயா, லக்ஷ்மன், கார்த்தீபன், விசினி, ராகவன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.03.2016) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் [illegible] ஏற்றுக் கொள் [illegible]

மின்சார நிலைய [illegible]

(69176) (15.17)

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 11
யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடந்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டத்தில் சாந்தை அணியை எதிர்த்து உடுவில் ஆலடிசிந்து ஏ அணி மோதவுள்ளது. (ம-23)

## வலிகாமம் கல்வி வலய துடுப்பாட்டத் தொடர்

யாழ்ப்பாணம், மார்ச் 11
வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையி லான இருபாலாருக்குமான துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்றும் நாளையும் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் மைதானத்தில் இடம் பெறவுள்ளன. இதில் இன்று வெள்ளிக்கிழமை ஆண்க ளுக்கான தொடரும் நாளை சனிக்கிழமை பெண்களுக்கான தொடரும் இடம் பெறவுள்ளன. (ம-23)

## கால்பந்தாட்ட கலந்துரையாடல்

கரணவாய், மார்ச் 11
இலங்கைக் கால்ப்பந்தாட்ட சம்மேளனத்தினால் யாழ். மாவட்டப்பாடசாலைகளின் 17 வயது மற்றும் 19 வயது இருபால் அணிகளுக்கிடையில் நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடர் தொடர்பான கலந்து ரையாடல் இன்று வெள்ளிக்கிழமை பி.ப.1.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. பங்குபற்ற விரும்பும் பாடசாலைகளின் பொறுப்பாசிரியர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு இணைப்பா ளர் எஸ். காந்தரூபன் அறிவித்துள்ளார். (ம-108)

## துணுக்காயின் துடுப்பாட்டத் தொடர்கள்

துணுக்காய் வலயக் கல்விப் பாடசாலைகளுக்கிடையிலான ஆண்கள் பெண்களுக் கான கிரிக்கெட் மற்றும் எல்லே போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளன. இதில் ஆண்களுக்கான கிரிக் கெட் மற்றும் எல்லே போட்டிகள் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்திலும் மைதானத்திலும் பெண்களுக்கான கிரிக்கெட் மற்றும் எல்லே போட்டிகள் கற்சிலை மடு அ.த.க.பாடசாலை மைதானத்திலும் நடைபெறவுள்ளது. (422)

## கோப்பாயில் வலைப்பந்தாட்டம்

கோப்பாய் கோட்டப் பாடசா லைகளுக்கிடையிலான 15,17,19 வயதுப்பிரிவினருக்கானவலைப் பந்தாட்டத் தொடர் இன்று வெள்ளிக்கிழமை கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ம-422)

## நடுவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம்

மாங்குளம் மார்ச் 11
வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கின் நடுவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு அல்வாய் தெற்கு கிராம அலுவலர் பணிமனையில் நடைபெறவுள்ளது.
இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் மத்தியஸ்தர் தரப் பரீட்சையிலோ அல்லது இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு லீக்கின் மத்தியஸ்த்தர் தரப் பரீட்சையிலோ சித்தியடைந்த அதேநேரத்தில் வடமராட்சி ஆளுகைப் பிரதேசத்திலுள்ள கழகங்களில் அங்கத்தவர்களாகவும் வடமராட்சி லீக்குடன் இணைந்து செயற்பட விரும்பும் மத்தியஸ்தர்கள் மாத்திரம் தங்கள் விளையாட்டுக் கழக செயலாளரிடம் வழங்கப்பட்டிருக்கும் விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து ஒப்படைத்து கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-108-422)

## வவுனியா வடக்கில் வலைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 11
வவுனியா வடக்கு கல்வி வலய மட்டப் பாடசாலை களுக்கிடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு புதுக்குளம் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ம-422)

## மீண்டும் சம்பியனானது மணற்காடு றோ.க. பாடசாலை வடமராட்சி வலயப் பாடசாலைகளின் எல்லே தொடரில்



கரணவாய், மார்ச் 11
வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான எல்லே தொடரில் பெண்கள் பிரிவில் மணற்காடு றோ.க. பாடசாலை வெற்றிபெற்று மீண்டும் வலயச் சம்பியனாகியது.
வடமராட்சிப் பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான எல்லே தொடரின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.
இந்த ஆட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையை எதிர்த்து மணற்காடு றோ.க.த.க. பாடசாலை அணி மோதியது.
நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய மணற்காடு அணி 11 ஓட்டங்களைப் பெற்றது.
அவ் வணியில் ஜென்சி 3ஓட்டங்களையும் தயாசிலி, டியூகா இரு வரும் தலா 2 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.
12 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய மெதடிஸ்த பெண்கள் பாடசாலையால் மூன்று ஓட்டங்களை மட்டுமே பெறமுடிந்தது.
இதனையடுத்து 8 ஓட்டங்களால் மணற்காடு றோ.க. பாடசாலை வெற்றிபெற்று மீண்டும் வலயச் சம்பியனாகியது.
மூன்றாமிடத்தை நெல்லியடி மத்திய கல்லூரி அணி பெற்றது. (ம-108)

## தொடர்ச்சிகள்...

### மீன்பிடி

சபை மறுதலித்துள்ளது.
குறித்த சட்ட வரைவில், திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் அது தெரிவித்துள்ளது.
வடக்கு மாகாண சபையின் அமர்வு நேற்று இடம்பெற்றது. இந்த அமர்வில் தேநீர் இடைவேளையின் பின்னர், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மீன்பிடி தொடர்பான சட்ட வரைவுக்கு ஒப்புதல் கோரி, நாடாளுமன்றத்தினால் அனுப்பி வைக்கப்பட்ட வரைவு விவர்தத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.
இதன்போது, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், இதனை நான் வரவேற்கின்றேன். இதில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இதன் ஆங்கிலப் பிரதியை வழங்க வேண்டும் என்று தெரிவித்தார்.
தொடர்ந்து கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், இது தொடர்பில் பூரணமாக ஆராய வேண்டும். கரைவலை தொடர்பிலும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே ஒரு நாள் விவாதம் தேவை என்று குறிப்பிட்டார்.
ஆளும் கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், 1979 ஆம் ஆண்டு மீன்பிடிச் சட்டத்தின் மூலப் பிரதி தரவேண்டும். இது தொடர்பில் ஆராய்வதற்கு 2 மாத கால அவகாசம் தேவை. இது இங்கு மட்டும்தான் கட்டுப்படுத்துமா ? இந்திய மீனவர்களையும் கட்டுப்படுத்துமா ? என்பது தொடர்பிலும் தெளிவான விளக்கம் தேவை. ஒரு தரப்பினருக்குச் சார்பாக இருப்பதற்கு அனுமதிக்க முடியாது.
மேலும், இழுவைமடியை ஒரே ஒரு நாடுதான் உலகில் தடை செய்துள்ளது. எனவே நாம் அதனைக் கட்டுப்படுத்தும் வகையிலேயே யோசிக்க வேண்டும் - என்றார்.
மீளவும் கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், ஆங்கிலப் பிரதி தற்போது கிடைத்துள்ளது. இதில் சில விடயங்களைத் திருத்த வேண்டியிருக்கின்றது. எனவே நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுடன் பேசி புதிய வரைபைக் கொண்டு வர முடியும். அவருடன் பேசுவதற்காக மூன்று மாதம் ஒத்தி வைக்கலாம் - என்றார்.
அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், கால நிர்ணயம் குறிப்பிடாமல் இதனை ஒத்தி வைத்து, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுடன் பேசலாம் என்றார்.
இதன்போது, ஆளும் கட்சி உறுப்பினர் கே.சயந்தன் தெரிவிக்கையில், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தனது கருத்தை இந்த சட்டவரைவின் ஊடாகத் தெரிவித்திருக்கின்றார். நாங்கள்தான் மாற்றுக் கருத்தை முன்வைக்கவேண்டும். மாற்றுக் கருத்தை முன்வைப்பதற்காக மூன்று மாத கால அவகாசம் கேட்டு, பின்னர் மீண்டும் சட்ட வரைவைக் கொண்டு வந்தவரின் தலையில் கட்டி விடுவது பொருத்தமானதாக இருக்காது.
எனவே மீனவர்கள், நீரியலுடன் தொடர்புடைய அதிகாரிகள் ஆகியோருடன் வடக்கு மாகாண சபை கலந்தாலோசித்துப் புதிய சட்ட வரைவை உருவாக்கலாம் - என்றார்.
இதன்போது, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், எங்களுடைய கட்சியைச்சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் கொண்டு வந்த விடயத்தை நாங்கள் இங்கிருந்து விமர்சனங்கள் குறிப்பிடுவதை விட, அவருடன் பேசுவது நல்லது என்பதற்கே அவ்வாறு கூறினேன். எங்களுடைய தேவை என்ன என்பதைச் சொல்ல வேண்டுமானால் சொல்லலாம் - என்றார்.
இறுதியில் கருத்துத் தெரிவித்த அவைத் தலைவர், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் அனைவரும், நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் ஒன்றிணைந்து கலந்துரையாடி முடிவுக்கு வரலாம் - என்றார். (து-வ-5-ரி5)

### வட மாகாண

வைக்கப்பட்டுள்ளதாக அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.
வடக்கு மாகாண சபையின் அமர்வு நேற்று இடம்பெற்றது. சபையின் இறுதியிலேயே அவைத் தலைவர் இந்தக் கருத்தைக் குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
வடக்கு மாகாண சபையைத் தவிர, ஏனைய மாகாண சபைகளின் உறுப்பினர்களுக்கு 'வாகன அனுமதிப் பத்திரம்' பெற்றுக் கொள்வதற்கு அனுமதி கிடைத்துவிட்டது. இரண்டரை வருடங்களின் பின்னரே இந்த அனுமதிப் பத்திரம் கிடைக்கும். இந்த மாதம் 21 ஆம் திகதியுடன் இரண்டரை வருடங்கள் முடிவுறுகின்றன.
ஆனால் நிதியமைச்சரோ, இனிமேல் மாகாணசபை உறுப்பினர்களுக்கு வாகன அனுமதிப் பத்திரம் இல்லை என்கின்றார். இதனால், உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சின் செயலாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தேன். எங்களது மாகாண சபை உறுப்பினர்களில் 34 பேர் எதிர்வரும் 21 ஆம் திகதியுடன் இரண்டரை வருடங்களைப் பூர்த்தி செய்கின்றனர். எனவே, இதற்குரிய விண்ணப்பத்தை அனுப்புமாறு அவரிடம் கோரியிருந்தேன்.
அதற்கமைய எங்களுக்கு விண்ணப்பம் கிடைக்கப் பெற்றிருக்கின்றது. அதனை விரைவில் உறுப்பினர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (து-வ-5)

### யோசிதவுக்கு

கடுவெல நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
லெப்.யோசித ராஜபக்ச, ரொகான் வெலிவிட்ட, நிசாந்த ரணதுங்க உள்ளிட்ட சந்தேகநபர்கள் ஐந்து பேரும் இன்று கடுவெல நீதிவான் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டபோதே, அவர்களைத் தொடர்ந்தும் இரண்டு வாரங்கள் விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.
இவர்கள் ஐவரும், கடந்த ஜனவரி மாதம் 30ஆம் திகதி தொடக்கம், விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.
கடுவல நீதிமன்றத்துக்கு நேற்று வந்திருந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, யோசித ராஜபக்சவைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டதால் இறுக்கமான நிலையில் காணப்பட்டார்.
இதேவேளை, யோசித ராஜபக்சவைப் பிணையில் விடுவிக்கக் கோரி கொழும்பு மேல்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான தீர்ப்பு எதிர்வரும் 14ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.
இதற்கிடையே, திவிநெகும திணைக்களத்தில் இடம்பெற்ற முறைகேடு தொடர்பான வழக்கில், குற்றம்சாட்டப்பட்ட முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்சவுக்குக் கொழும்பு மேல் நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.
இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே, பசில் ராஜபக்சவை பிணையில் செல்ல கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி அனுமதி அளித்தார். (து-வ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ். மத்தி தடுமாற்றமான ஆட்டம் சென்.ஜோன்ஸும் அதே நிலைதான்

## வடக்கின் போரின் முதல் நாளில் பந்துவீச்சாளர்களின் பக்கம் காற்று







வடக்கின் போரில் நேற்றைய முதலாம் நாளில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி 161 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்த துடன், பதிலுக்குக் களமிறங்கிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி நாள் முடிவில் 4 இலக்குகள் இழப்புக்கு 60 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். மத்திய கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கினர் ஜெரோசனும் பிரியலக்சனும். அடித்தளம் பலமாக அமையவில்லை. அணியின் ஓட்ட எண்ணிக்கை ஆறாக இருந்த பொழுது நான்கே ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் பிரியலக்சன். கோமேதகன் - ஜெரோசன் இணை மேலதிக இலக்குகள் இழப்பில் லாமல் 50 ஓட்டங்களைக் கடந்தும் தாக்குப்பிடித்தது. இரண்டாவது இலக்குக்காகப் பகிரப்பட்ட இணைப் பாட்டத்தை சென்.ஜோன்ஸ் பந்துவீச்சாளர்களின் திடீர் எழுச்சி இல்லாமல் செய்து விட்டது. 39 ஓட்டங் களுடன் வீழ்ந்தார் கோமேதகன். கானமிர்தனின் பந்தில் ஒற்றையிலக்கத்துடன் வீழ்ந்தார் கௌ தமன். அரைச்சதம் கடந்தார் ஜெரோசன். 51 ஓட்டங்களுடன் ஜெரோசன் ஆட்டமிழந்ததுதான் தாமதம் பின்வரிசை கடகடவெனச் சரிவுகண்டது. டினோயன், ராஜ் இருவரும் மட்டுமே பின்வரிசை வீரர்களில் இரட்டை இலக்கத்தில் ஓட்டங்களைப் பெற்றனர். முடிவில் யாழ். மத்திய கல்லூரி சகல இலக்குகளையும் இழந்து 161 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரியின் சார்பாக யதுசன் 4 இலக்குகளையும், நிலோயன் 3 இலக்குகளையும், கானமிர்தன் 2 இலக்குகளையும், கபில்ராஜ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கியது சென்.ஜோன்ஸ். ஆரம்ப வீரர்களாகச் சோம ஸ்கரன் மற்றும் தேவ பிரசாந். இடது, வலது இணை பந்து வீச்சாளர்க ளுக்கு சற்று சிரமம் கொடுக்கத்தான் செய்தது. பவுண்டரிகள் பெரிதாக இல்லாவிட்டாலும் அவ்வளவு இலகுவாக இணைப்பாட்டத்தை பிரித்து விட முடியவில்லை. 14 பந்துப்பரிமாற்றங்கள் வரை இலக்குச் சரிவு ஏற் பட்டவில்லை. அணியின் ஓட்ட எண்ணிக்கை 26ஆக இருந்த பொழுது எட்டு ஓட்டங்களுடன் போல்ட் ஆனார் சோமஸ்கரன். ஓட்டம் எதனையும் பெறாது திசோபனிடம் சிக்கினார் சுபீட்சன் திப்பியூஸ். தேவபிரசாந்தை வெளியேற்றினார் தீபன்ராஜ். நான்கே ஓட்டங்களுடன் ஜெனி பிளெமிங்கும் ஆட்டமிழக்க சென்.ஜோன்ஸ் திடீர்ச் சரிவு கண்டது. கபில்ராஜ், கிசாந்துயன் இணைய நாள் முடிவில் சென்.ஜோன்ஸ் கல்லூரி 4 இலக்குகளை இழந்து 61 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. கபில்ராஜ் 20 ஓட்டங்களுடனும் கிசாந்துயன் 7 ஓட்டங்களுடனும் இரண்டாம் நாளுக்காக இன்று களமிறங்குவார்கள்.

பந்துவீச்சில் யாழ்.மத்திய கல்லூரியின் சார்பாக தீபன்ராஜ் 2 இலக்குகளையும், திசோபன், அலன்ராஜ் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றியுள்ளனர்.

(ம-23)





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிண்ணம்வென்றதுவாதரவத்தைவிக்னேஸ்வரா
## யாழ். கல்வி வலயத்தின் துடுப்பாட்டத் தொடரில்



யாழ்.கல்விவலயபாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான துடுப்பாட்டத் தொடரில் வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலய அணி கிண்ணத்தைக்கைப்பற்றியது. கோப்பாய் மகா வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. இறுதியாட்டத்தில் வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயத்தை எதிர்த்து உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலய அணி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப்பரிமாற்றங்களில் இரண்டு இலக்குகளை இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கஜனி ஆட்டமிழக்காமல் 21 ஓட்டங்களையும், ஜெனித்தா 14 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியால அணியின் சார்பாக டர்சி இரு இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய அணி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்களில் இரண்டு இலக்குகளை இழந்து 47 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அதிகபட்சமாக நிரோஜினி ஆட்டமிழக்காமல் 15 ஓட்டங்களையும் கஸ்மினா 8 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலய அணியின் சார்பில் கஜனி, ஜெசிந்தா இருவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர். 3ஆம் இடத்தை கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம் பெற்றது. (மன422)




## ரி-20 உலகக்கிண்ணத்துக்கான இன்றைய தகுதிகாண் ஆட்டம்

ரி-20 உலகக்கிண்ணத்துக்கான தகுதிகாண் ஆட்டங்கள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று நடைபெறும் ஆட்டங்களாக, தர்மசாலா மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஓமனை எதிர்த்து நெதர்லாந்து மோதவுள்ளது. இரவு 7.30மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பங்களாதேஷ் அணியை எதிர்த்து அயர்லாந்து மோதவுள்ளது. (ம)

விசேட வகுப்புக்கள்
சமூர்த்தி மற்றும் கிராம சேவகர்
சனி 12.30 - 5.00
கிராம சேவகர்
ஞாயிறு 1.00 - 5.00
சட்டக்கல்லூரி சட்டமாணி
ஞாயிறு 2.00 - 5.00
சுங்க உத்தியோகத்தர்
ஞாயிறு 3.00 - 5.00
SLAS, SLEAS
பிரதி ஞாயிறு
9.00 - 4.00
வடமாகாண ஆசிரியர்
ஞாயிறு
3.00 - 5.00
076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி, பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ்.நகர்)

விசேட கருத்தரங்கு
SLAS / SLEAS
(OPEN / LIMITED)
(பிரதி சனி-9-4 PM)
விரிவுரையாளர்
P.உமாசங்கர்
P.கமல்தாசன்
துறைசார்ந்த விரிவுரையாளர்கள்
சமுர்த்தி உத்தியோகத்தர்
கிராம சேவையாளர்
சட்டக் கல்லூரி அனுமதி
போட்டிப் பரீட்சை வகுப்புகள் ஆரம்பம்
12.03.2016 சனி 2.00 PM
(பிரதி சனி-2-5 PM)
விரிவுரையாளர்கள்
P.உமாசங்கர்
P.கமல்தாசன்
நாவலர் கல்வி நிலையம்
T.P. 0774696695

# கிண்ணத்தை வென்றது ஆஸ்திரேலியா

ஆஸ்திரேலியா- தென்னா பிரிக்கா அணிகளுக்கு இடையில் நடைபெற்ற மூன்று ஆட் டங்களைக் கொண்ட ரி-20 தொடரை 2:1 என்ற அடிப்படையில் ஆஸ்திரேலியா கைப்பற்றியுள்ளது.

அதிபர்சேவை தரம் 3 நேர்முகப் பரீட்சைக்கான இலவச கருத்தரங்கு
வளவாளர்கள்
கலாநிதி சேதுராஜா
(SLEAS)
திரு- அருணகிரிநாதன்
(SLEAS)
076 688 3394
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
[யாழ் நகர்]

தொடரின் மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்கா,முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி 20 பந்துப் பரிமாற்றங்களின் நிறைவில் அந்த அணி 4 இலக்குகளை இழந்து 178 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக அம்லா இறுதிவரை ஆட்டமிழக்காது 97 ஓட்டங்களைப் பெற்றார். தவிர மில்லர் 30 ஓட்டங்களையும் குயின்டன் டி கொக் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக கட்டர் நீல் 2 இலக்குகளையும் வற்சன், பல்க்நெர் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலிய முன்வரிசை வீரர்களின் சிறப்பான செயற்பாட்டால் 4 இலக்குகள் இழப்புக்கு 4 பந்துகள் மீதமிருக்க இலக்கை அடைந்தது.

அதிகபட்சமாக சிமித் 44 ஓட்டங்களையும், வற்சன் 42 ஓட்டங்களையும், கவாயா 33 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சார்பாக தகீர் 2 இலக்குகளையும் ரபாடா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். ஆட்டநாயகனாக அம்லாவும் தொடராட்ட நாயகனாக வோர்ணரும் தெரிவானார்கள். (ம)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.03.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.